

பிரிட்டனில்...
நெ·து·சுந்தரவடிவேலு
வானதி பதிப்பகம்

# பிரிட்டனில்

நெ. து. சுந்தரவடிவேலு

வானதி பதிப்பகம்
தி.நகர் · சென்னை-17

முதல் பதிப்பு : செப்டம்பர் 75

உரிமை பதிவு

திருநாவுக்கரசு தயாரிப்பு

---

விலை ரூ. 4-00

அச்சிட்டோர் :

மெட்ரோபாலிடன் பிரிண்டர்ஸ்,

6, நல்லதம்பி செட்டித் தெரு, சென்னை-600 002

# முன்னுரை

**வா**ழ்க்கை ஓர் புரியாத புதிர். உலகில் கோடிக் கணக்கான மக்கள் உள்ளனர். ஒவ்வொருவர் வாழ்க்கையும் ஒவ்வொரு வகையில் அமைகிறது. இருவருடைய வாழ்க்கைகளும் ஒரே வகையில் அமைந்துள்ளன என்று சொல்ல இயல்வதில்லை. அத்துணை வேறுபாடுகள்.

கூச்சப்படும் இயல்போடு பிறந்தவனுக்கு எப்போதும் கூட்டத்திற்கு இடையில் இருக்கும் நெருக்கடி ஏற்பட்டு விடுகிறது. கோணியிலே கல்லைக் கட்டிக் கொண்டு அடிக்கும் பேச்சாளனை அழைப்பார் இல்லை.

கருத்தாளர் புலர், வெளியிட வழியில்லாமல், புழுங்கிப் புழுங்கி மடிவதுண்டு. சிந்தனை ஆழமற்றவர்களுக்கு, வாய்ப்புகள் வந்து குவிவதும் உண்டு.

அமைதியாக எங்கோ ஓர் மூலையில் அமர்ந்து வாழ விரும்புபவனுக்கு அலைச்சலே வாழ்க்கையாக அமைவதுண்டு, வாழத்தெரிந்தவன், வந்ததை ஏற்றுக் கொண்டு, முடிந்த வரை சமாளிக்கிறான்.

சுற்றுலா அரிப்பு இல்லாமை என் இயல்பு. இளமையில் ஊரோடு இருந்த எனக்குக் கிடைத்ததெல்லாம் அலையும் அலுவல்களே! நடுமை வரை, தமிழ் நாட்டோடு இருந்த அலைச்சல், பின்னர் வெளி நாட்டுப் பயணங்களாக மலர்ந்தது; பல நாட்டுப் பயணங்களாகப் பூத்தது.

வெளி நாட்டுப் பயணங்களில் பலர் பலவற்றை நாடுவர். இரவு விடுதிகளைத் தேடுவோர் உளர். எப்பொருள் எங்கே

மலிவாகக் கிடைக்குமென்று அலைந்து வாங்குவோர் உண்டு, இயற்கையழகையும் மக்கள் கைவண்ணங்களையும் கண்டு மகிழ்வோர் உண்டு.

அழுக்கு இல்லா உலகம் இல்லை; நாடு இல்லை; ஊர் இல்லை; ஆள் இல்லை. இதைத் தேடிக் கண்டுபிடித்து, பெரிது படுத்தி எழுதி விளம்பரம் பெறுவோர் சிலர்.

'குறைகள், நம்மூரிலேயே, நம் கண்ணெதிரிலேயே நிறைந்துள்ளன. அவற்றைக்காணவா நெடுந்தூரம் வந்தோம்? பிற நாடுகளில் ஒளிவிடும் நல்லியல்புகளை நற்பண்புகளை நற்போக்குகளைக் கவனித்து எழுதி, தன்னாட்டு மக்களை ஊக்குவிப்போம்', என்று கருதுவோர் சிலர்.

பழைய கதையொன்று நினைவிற்கு வருகிறது.

இருவர் சிறைப்பட்டனர். அறைக்குள்ளே அடைபட்டுக் கிடந்த இருவரும் ஒரே வகை உணர்ச்சியைப் பெறவில்லை. ஒருவர் சாளரத்தின் வழியே வெளியே பார்த்தார்; தலை குனிந்து பார்த்தார். சாக்கடை தென்பட்டது. துர்நாற்றம் வீசுவதாகத் தோன்றிற்று. 'சாக்கடை நாற்றத்தில் எப்படித் தான் வாழ்வேன்? எட்டடி கொட்டடிக்குள் எத்தனை நாள் வாட' இப்படி ஏக்கப் பெரு மூச்சு விட்டார்; கண்ணீர் பொல பொலவென வழிந்தது. அவர், சிறைப்படுமுன், தூய்மைக்குப் பெயர் போன தெருவில் வாழ்ந்தவர் அல்லர். நாலுபக்கங்களிலும் சாக்கடைநீர் புரண்டோடும் சூழ் நிலையில் ஓட்டைக் குடிசையில் இருந்தவரே ஆயினும் சாக்கடை வேதனையை எப்படிச் சமாளிப்பது என்று ஏங்கினார்.

சிறைப்பட்ட மற்றவர் என்ன செய்தார்? அவரும் சாளரத்தின் வழியே பார்த்தார். குனிந்து பார்க்கவில்லை. நிமிர்ந்து பார்த்தார்.

'வெளியே இருப்பவர் எல்லோரும் நல்லவர்களும் அல்லர். உள்ளே இருப்பவர் அனைவரும் தீயவரும் அல்லர். பொய்யுடையொருவன் சொல்வன்மையால் குற்றமற்ற

நான் குற்றவாளியாக அடைபட்டுக் கிடக்கிறேன். இருப்பின் என்? மனச்சான்று குற்றஞ் சாட்டாத போது வெட்கித் தலை குனிவானேன்?' இப்படி எண்ணினார் அவர். தன் மதிப் பீட்டில் உயர்ந்த அவர், நிமிர்ந்து பார்க்கவும், விரிந்த வானம் தென்பட்டது. எந்தக் கோடியிலும் மாசுமருவில்லை. தாரகைகள் மின்னின. நிலாவும் சிரித்தது.

தேய்பிறையாகிய உனக்குச் சிரிப்பு வேறா என்றஎண்ணம் மின்னிற்று. 'தேய்ந்தே போய்விடப் போவதில்லை. அடுத்து வளரவே போகிறேன். முழுமையாக வளரப் போகிறேன். அப்படியிருக்க ஏக்கப்படுவானேன்; சிரிப்பதன்றோ பொருத்தம்? இப்படி மதியும் அறிவூட்டுவதாகத் தோன் றிற்று.

உளைச்சல் பறந்தது. ஊக்கம் பிறந்தது.

மூன்று திங்கள் விரைவில் பறந்துவிடும். அப்புறம் விடுதலை; கூடுதல் அறிவோடு உரிமை. பரந்த உலகிற்குப் பயன்படப் போகும் காலம் தொலைவில் இல்லை; அண்மையில் உள்ளது?

இப்படி எண்ணி தெம்புணர்ச்சி பெற்றார் மற்றொருவர்.

தாய்த் திரு நாட்டை அதன் ஏழை எளியவர்களை விட்டு விலகிப்போய், வெளி நாடுகளில் பெரிய ஓட்டல்களில் தங்கும்போது, பிந்திய சிறைக்கைதியின் உணர்வே உதிக்கும் எனக்கு. அந்நம்பிக்கையில், எந் நாட்டுக்குச் சென்றாலும் அங்குள்ள சிறப்புகளைக் கண்டு வந்து, நம் மக்களுக்குப் படைக்க விரும்புவதுண்டு. குறிப்புகளும் எடுப்பதுண்டு. ஆனால் எல்லா வேளைகளிலும் இவை கை கூடுவதில்லை.

கனடாவில் கண்ட அருமை பெருமைகளை எழுத, எப் பத்திரிகையும் வாய்ப்பளிக்கவில்லை. பிலிப்பைன் நாட்டில் தெரிந்து கொண்டவற்றைச் சொல்ல இடம் கிடைக்கவில்லை. ஆப்பிரிக்க வாழ்வைப்பற்றி எழுத வாய்க்கவில்லை.

சோவியத் ஒன்றியத்திற்கும் கிழக்கு ஜெர்மனிக்கும் பிரிட்டனுக்கும் சென்ற போது, அங்கு கண்டவற்றை

எழுதும்படி, 'தினமணி கதிர்' ஆசிரியர், அருமை அன்பர் திரு. 'சாவி' அவர்கள் அழைத்தார். அதன் விளைவுகளில் ஒன்று, 'பிரிட்டனில்' என்னும் இந்நூல். திரு. 'சாவி' அவர்களின் தூண்டுதல் இல்லையாயின் இந்நூல். பிறந்திருக்காது. எனவே, சாவி, அவர்களுக்கு நன்றி சொல்வோம்.


நான் உணர்ந்ததை உணர்ந்தவாறு எழுதியுள்ளேன். கோமகன் முதல் குடிமகன் வரை படம் பிடித்துள்ளேன். முதிர்ந்த பெரியவர்கள் முதல் பச்சைக் குழந்தைகள் வரை உள்ள படியே காட்டியுள்ளேன், இளைஞர்களின் எதிர்ப்புகள் எவ்வளவு நாகரிகமாக இருந்தன என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளேன். எட்டு வயது மாணவியின் இயல்பான இரக்க உணர்வினையும் எழுத்தில் வடித்துள்ளேன்.

தினமணி கதிரில் நான் எழுதிய கட்டுரைகளைத் திரட்டி, 'சோவியத் மக்களோடு' 'புதிய ஜெர்மனியில்' என்னும் தலைப்புகளில் இரு நூல்களை வெளியிட்ட, வானதி பதிப்பகத்தார், 'பிரிட்டனில்' என்னும் இந்நூலை நல்ல வண்ணம் வெளியிட முன்வந்தனர். எனவே, அதன் உரிமையாளர், திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கு நன்றியுடையேன்.


தமிழ் இலக்கியக் கடலில் பதினெட்டு நீர்த்துளிகளைச் சேர்க்கும் இந் நல் வாய்ப்பிற்கு மகிழ்கிறேன்.

இதை வாங்கி ஆதரிப்பதன் மூலம், இதனிலும் சிறந்த பயண எழுத்தாளர்கள் உருவாகத் துணை புரியும்படி தமிழ் மக்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.


நெ. து. சுந்தரவடிவேலு
7-9-75



லண்டன் பார்லிமெண்ட் கட்டிடம்




லண்டன் டிரபால்கர் சதுக்கத்திலுள்ள தேசீயக் கலைக்கூடம் நெல்சன் ஸ்தூபி




லண்டன் அஞ்சலகக் கோபுரம்



லண்டன் செயின்ட்பால் கதீட்ரல்




கால்டன் குன்று. எடின்பர்க்



எடின்பர்க் கோட்டையும் ஸ்காட் நினைவுச் சின்னமும்



எக்சீடர் பல்கலைக் கழகக் கட்டிடம்



எக்சீடர் கதீட்ரல் (ஒரு பகுதி)

படங்கள் உதவி :—

பிரிட்டிஷ் சுற்றுலா அதிகாரப் பிரிவு

(British Tourist Authority)

# பிரிட்டனில்...

## 1

'பார்! பார்! அதோ பார்' என்ற ஆணை காதில் வீழ்ந்தது. அருகில் நின்ற அன்பரின் சுட்டு விரல் காட்டும் பக்கம் திரும்பிப் பார்த்தேன்.

காட்சி! என்ன காட்சி! அழகிய காட்சி! பெரிய பச்சைக் கம்பளத்தை உயர்த்தி விரித்தாற் போன்ற காட்சியைக் கண்டேன்.

"பலே! எத்தனை பசுமை! எவ்வளவு உயரத்திற்குப் பசுமை! எவ்வளவு பரவலான பசுமை! கண்ணுக்கெட்டும் தூரம் வரையில் ஒரே பசுமை. நெஞ்சை அள்ளும் பசுமை!" என்று என்னையறியாமலே உரைத்தேன்.

"வேலு! இன்னும் உயரப் பார்", என்றார் அன்பர்.

அண்ணாந்து பார்த்தேன். என்ன கண்டேன்? உருவங் கண்டேன். ஆணுருவங் கண்டேன். பக்கத்தில் பெண்ணுருவமும் தெரிந்தது.

"ஆம். ஆணும் பெண்ணும் அக் குன்றின் மேல் உலாவக் காண்கிறேன்! எவ்வளவு செங்குத்தான உச்சி! அவ்வளவு உயரத்தில் உலவா விட்டால் என்ன?" என்று கேட்டேன்.

மறுவினுடி பாரதியாரின் பாட்டு நினைவில் மின்னிற்று.

"காற்றிலேறி இவ் விண்ணையும் சாடுவோம், காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே" என்று நம் தமிழ்க்கவி பாரதியார் பாடியுள்ளார். அப்போக்கிலே, காதலியையும் அழைத்துக்கொண்டு, விண்ணை எட்டப் பார்க்கிறுர், அந்த ஆண்மகன். ஆனால், காளைப் பருவத்தினராகத் தோன்றவில்லையே; நடுத்தர வயதிலேன், செங்குத்தான மலையேற்றம்?" என்று வியப்பினை வெளிப்படுத்தினேன்.

"அவர்கள் கிடக்கட்டும். அதோ தெற்கே திரும்பிப் பாருங்கள்", என்றுர் நண்பர்.

திரும்பிப் பார்த்தேன். பாட்டியைக் கண்டேன். எங்கே கண்டேன்? மலை அடிவாரத்திலா? இல்லை. குன்றின் உச்சியிலா? இல்லை. பின் எங்கே?

பாதியில் கண்டேன். மலையடிவாரத்திலிருந்து மலையுச்சிவரை விரிந்துள்ள இயற்கைப் புல்வெளியில் பாதியில் கண்டேன்.

பாட்டிக்குத் துணை உண்டா? இல்லை. தன்னந் தனியே இருக்கக் கண்டேன்.

ஏதோ, தன் கையிலிருப்பதை புல் தரையில் வைக்கிறுர்களே! அது என்ன?

ஆம் தெரிகிறது. கூடை. சிகப்புக் கூடை. பிளாஸ்டிக் கூடை. வெய்யிலில் ஒளிவிடுகிறது.

அக் கூடையை நடுத் தரையில் வைத்தார், பாட்டி. தன்மேல் போட்டுக் கொண்டிருந்த 'ஓவர்

கோட்டை' கழற்றி, அக் கூடையை அணைத்தாற் போல் வைத்தார். நின்றபடியே நான்கு பக்கமும் சுழன்று பார்த்தார். கூப்பிடும் தூரத்தில் யாரும் இல்லை. அதைக் கண்டுகொண்டு, மேலே நடக்கத் தொடங்கினர்.

பாட்டி, வயதான பாட்டி என்பது எங்களுக்குத் தெரிந்தது. தன்னந் தனியே, செங்குத்தான குன்றின் மேல், எவ்வளவு தூரம் ஏறப்போகிருர் என்று பார்த்து விடுவோமே?

இந்த உறுதியோடு மலையடிவாரத்தில் போடப் பட்டிருந்த நீண்ட நாற்காலியில் நானும் என் நண்பரும் அமர்ந்தோம். எங்காவது ஒளிந்துவிடப் போகிருர்கள் என்ற அச்சத்தில், வழிமேல் விழி வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தோம். இமையாது பார்த்தோம்.

பாட்டி, சளையாது நடந்தார். குன்றின் மேல் ஏறக் கண்டோம்.

"அதோ முக்கால் வழி கடந்து விட்டார்கள். இனிதான் இடர். உச்சியில் அதிக செங்குத்து. அதைச் சமாளிக்கிருர்களா, பார்ப்போம்?" இப்படிப் பேசிக் கொண்டே, கண்களை உயர உயர விட்டோம்.

மெய்மறந்த நிலையில், இருவரும் கைதட்டி விட்டோம். இது பாட்டிக்குக் கேட்காது என்பதையும் மறந்து கை தட்டினேம். ஏன் அப்படி? பாட்டி மலை உச்சியினை எட்டிப் பிடித்து விட்டார். அங்கே நின்று காட்சியளித்தார். அச்சாதனையைப் பாராட்ட, இருவரும் கை தட்டினேம்.

மலையேறிய அலுப்பில் உச்சியின்மேல் எவ்வளவு நேரம் உட்காருவார்கள் என்று கவனிப்பதற்காக, எங்கள் கருத்தை பாட்டியின் மேல் தொடர்ந்து செலுத்தினேம்.

சில நிமிடங்கள்வரை பாட்டி அங்கேயே உலாவி ஞர். அப்புறம்? ஏறிய வழியே திரும்பினுர். இறங்கி வந்த பாட்டி, கூடையை வைத்த பக்கம் நடந்தார்.

பாட்டி, மலேயேறும்போது, புல்தரையில் யாரும் இல்லே. ஏறி, இறங்கி வருவதற்குள், சிறுவர், சிறுமி யர், பலர், எங்கெங்கிருந்தோ வந்து சேர்ந்துவிட்டனர். புல்தரையில் ஓடி ஆடி மகிழ்ந்தனர். புரண்டு உருண்டு களித்தனர். சிறுவர்கள், அரைக்கால் சட்டையை மட்டும் உடம்பில் விட்டு விட்டு, மற்ற சொக்காய்களே கழற்றி வைத்துவிட்டு, வெய்யில் காய்ந்தனர். கண்ணும்பூச்சி ஆடிய குழந்தைகளும் சிலர். பந்தாடிய குழந்தைகள் பலர். அவர்களில் வெகு சிலரே, தங்கள் பெற்ருேரோடு வந்தவர்கள். பெரும்பாலோர், தங்கள் நண்பர்களோடு வந்தவர்களே.

“ஏழெட்டு வயதுக் குழந்தைகளேக்கூட இப்படி, தனியே மலேயேற அனுப்பி விடுகிருர்களே'', என்று வியப்போடு கூறினேன்.

“ஆம்! விஞடிதோறும் விரைந்தோடும் வண்டி களேக் கடந்து இங்கே வரவேண்டும். அந்த ஆபத் தைக்கூடப் பொருட்படுத்தாது, எப்படித்தான், பெரியவர்கள் துணேயில்லாமல், குழந்தைகள் மட்டும் செல்ல அனுமதிக்கிருர்களோ!

“நம் ஊரில் பக்கத்து வீட்டில் குடியிருக்கும் பெரியப்பாவைப் பார்த்துவிட்டு வரக்கூட, குழந்தையை தனியே அனுப்ப மனந் துணியாதே!

“அதோ பாருங்கள். நான்கு பெண்பிள்ளேகள். எட்டு வயதுகூட இராது. ஓடி வருகிருர்கள். சாலே யைக் கடக்கும்போதும் ஓடிஞல், காரில் சிக்கிக் கொள் வார்களே!'' இப்படி என்னுடன் அமர்ந்திருந்த நண்பர் கூறவும், அவர் காட்டிய பக்கம் திரும்பிப் பார்த்தேன்.

தலைதெறிக்க நான்கு பெண் குழந்தைகள் ஓடி வருவது தெரிந்தது. மலையை நோக்கி ஓடி வந்தார்கள். அதோ மோட்டார் சாலையை நெருங்கிவிட்டார்கள். கார்களும் பறந்து வருகின்றனவே! எந்தக் காரிலே சிக்கிக் கொள்வார்களோ! இப்படி நினைக்கையில், என் நெஞ்சம் படபடத்தது.

ஆ! அப்பெண்கள் சாலையைக் கடக்கவில்லை. வந்த விரைவிலேயே, சாலையை நெருங்கியதும், சாலையோரமாக, நாங்கள் இருந்த பக்கம் ஓடி வருகிறார்கள். ஓடி வந்தவர்கள் நொடிப் பொழுதில் சட்டென்று நிற்கிறார்கள். இருபக்கமும் பார்க்கிறார்கள். மெல்ல வீதியில் இறங்குகிறார்கள். வீதியில், குறுக்கே, போடப் பட்டுள்ள இரு வெள்ளைக் கோடுகளிடையே இறங்கி மளமளவென்று நடக்கிறார்கள்.

காற்றிலும் விரைந்து வந்த கார்களும், கோட்டைத் தாண்டாமல் வெளியே நிற்கின்றன.

பெண்கள் நால்வரும் சாலையைக் கடந்ததும், மீண்டும் ஓடுகிறார்கள். கார்களும் ஓடுகின்றன.

எங்கள் கவனம் பெண்கள் பின்னால் சென்றது.

பாட்டி வைத்துவிட்டுப் போன கூடையின் அருகில் சென்று விட்டார்கள், பெண்கள். நேர் குத்தாக இருந்த ஒற்றையடிப்பாதையில் அவர்களுடைய வேகம் குறைந்து விட்டது. நடந்தே நெருங்கினார்கள் கூடையை.

குழந்தைகள் ஆயிற்றே: குறும்புக் குணம் இருக்குமே! கூடையைக் கிளறுகிறார்களா என்று உன்னிப்பாகப் பார்த்தோம். வைத்த கூடை வைத்தபடியே இருந்தது. யாரும் அதைத் தொடவில்லை. வியந்தோம்.

“பையன்களாக இருந்தால் விட்டிருக்க மாட்டார்கள். பெண்களானதால் சும்மா போய் விட்டார்கள்”,

என்று மதிப்பீடு போட்டுக் கொண்டிருக்கையிலேயே, மலை உச்சியிலிருந்து, பத்து வயதுப் பையன் ஒருவன் இறங்கி வந்தான். அவன், அக்கூடையின் பக்கம் இறங்கி வருவதைக் கண்டோம். பாட்டியின் பார்வை அதன் மேலும் அவன் மேலும் விழுமோ என்று பாட்டியை அண்ணுந்து பார்த்தோம். பாட்டி தென் படவில்லை.

தனியே வரும் பையனுவது கூடையில் இருப்பதை எடுக்கிருனு என்று கவனித்தோம். அவனும் அதைத் தொடாமல், நடந்து விட்டான். சற்று தொலைவி லிருந்து பாறை ஒன்றின் மேல் அமர்ந்தான். கால் சட்டைப் பைக்குள்ளிருந்து எதையோ எடுத்து, சாப் பிட்டான்.

காவல் இல்லாத நிலையிலும் பிறர்பொருளைத் தொடாத சிறுவர் சிறுமியரைப் போற்றிக் கொண்டே, நாங்களும் மலையேறப் புறப்பட்டோம். மலையைச் சுற்றி தார் ரோடு போட்டிருந்தார்கள். ஒற்றையடிப் பாதைகளில் நடவாமல், சாலை வழியே நடந்தோம்.

ஆங்காங்கே உணவுக் கூடைகள் இருந்தன. கழற்றி வைக்கப்பட்ட நீண்ட கோட்டுகள் பலவிடங் களில் தென்பட்டன. இவற்றிற்கு அருகில் ஆள் இல்லை. அவற்றிற்கு உரியவர்கள், இங்கும் அங்கும், அவற்றை வைத்து விட்டு, சுமையின்றி மலையேறி ஆய்ந்து கொண்டிருந்தனர். நாங்கள் முழு மலையும் ஏறவில்லை. பாதி தூரம் சென்ருேம். இறங்கும் வேலை யில் நூற்றுக் கணக்கானவர்கள், புல்வெளியில் படுத் துக் கொண்டு வெய்யில் காய்ந்தார்கள். அதற்கும் அதிகமானவர்கள், மலை ஏறுவதில் ஈடுபட்டார்கள்.

பாட்டி இருக்கிருர்களா என்று பார்த்தோம். அதோ மெல்ல ஏறிவருகிருர்கள். கையில் காகிதம். மேலேறி வருகிற பையன் எவனே பாட்டியை அணு கினுன். ஏதோ பேசினுன். பாட்டியின் கையிலிருந்த

காகிதக் குப்பையை வாங்கிக் கொண்டது தெரிந்தது. பாட்டி அவனைத் தொட்டு வாழ்த்தினுள். பையன் சிட்டெனப் பறந்தான். எங்கே போகிருனென்று கவனித்தோம். சாலையோரத்தில் வைக்கப்பட்டிருந்த குப்பைத் தொட்டியில் பாட்டியின் காகிதக் குப்பை யைப் போட்டுவிட்டு ஓடி மறைந்தான் சிறுவன்.

'பிக்னிக்' மலையில் எங்கும் குப்பை கூளமில்லாத நிலைக்குக் காரணம் பளிச்சென்று விளங்கிற்று.

அத்தெளிவோடு, எடின்பரோ நகரத்தின் சிறப் பாக விளங்கும் 'ஆர்தர் இருக்கை' என்ற குன்றைக் கண்ட மகிழ்வோடு, தங்கும் விடுதிக்குத் திரும்பினேம், நாங்கள்.

# 2

'ஆர்தர் இருக்கை' குன்றினை அடுத்து அமைந்துள்ள எடின்பரோ நகரம் எழில் ஆர்ந்த நகரம். அது தொன்மையான நகரமும்.

எடின்பரோ, ஸ்காட்லண்டின் தலைநகரம். ஸ்காட்லண்ட் என்பது என்ன? அது ஒரு நாடு. ஆம், பிரிட்டனில் சேர்ந்துள்ள நான்கு நாடுகளில் ஒன்று ஸ்காட்லண்ட் என்றால் திடுக்கிடாதீர்கள். பிரிட்டன் ஒரு நாடு என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். உண்மை என்ன?

பிரிட்டிஷ் அரசின் வெளியீட்டின்படி, பிரிட்டன் நான்கு நாடுகளைக் கொண்டது. இதை ஒரு ஆங்கிலேயர் கூறிய போது, என்னால் நம்ப முடியவில்லை. எனவே அவர் விளக்கிச் சொன்னார். அதைப் படியுங்கள்.

இங்கிலாந்து ஓர் நாடு. அந்நாடு ஆதியில் பல மன்னர்களிடம் இருந்தது. ஒரே அரச பரம்பரையின் கீழ் வந்தது, கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டிலே. அப்புறம்? தனியரசாயிருந்த வேல்ஸ் நாடு இங்கிலாந்தோடு இணைந்ததாம். அடுத்து? அயர்லாந்து இணைக்

கப்பட்டது. பதின்மூன்றும் நூற்றுண்டு முடிவதற்குள் வேல்ஸும் அயர்லாந்தும் இங்கிலாந்தோடு சேர்ந்து ஓராட்சியின் கீழ் வந்து விட்டன. பதினேழாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் அதாவது ஆயிரத்து அறநூற்று மூன்றில், ஸ்காட்லாண்டின் அரசரான ஆறும் ஜேம்ஸ் இங்கிலாந்தின் பட்டத்திற்கு வாரிசாக நேர்ந்தது. எனவே இரண்டும் இணைந்த மன்னராட்சி அன்று முதல் நடைபெறுகிறது.

'ஐக்கிய அரசு' (United kingdom) என்று அழைக்கப்படும் பகுதி ஓராட்சியின் கீழ் இருந்தாலும் நான்கு நாடுகளையும் வேறு பல தீவுகளையும் கொண்டது என்பதைக் கேட்டதும்,

"'ஐரிஸ் குடியரசு' என்பது என்ன?" என்று கேட்டேன்.

"அயர்லாந்து நாட்டின் தென் பகுதி, பிரிட்டனேடு இணைந்து இருக்க விரும்பாது, தனி நாடாக, தனிக் குடியரசாகப் பிரிந்து விட்டது. அது நிகழ்ந்தது, ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்திரெண்டில்" என்று விளக்கினுர் ஆங்கிலேய அன்பர்.

"ஸ்காட்லாண்டின் பூர்வீகக் குடிமக்கள், தனித் தனி கோத்திரங்களாக இருக்கிறுர்களாமே! அந்தந்த கோத்திரத்திற்குத் தனித்தனி உடையும் ஊதுகுழலும் உண்டாமே! உண்மையா?" என்று கேட்டேன்.

"ஸ்காட்லாண்டின் பெரும் பகுதி மலைப்பகுதி, இப்போது, மலையின் எந்த மூலைமுடுக்கிற்கு வேண்டுமானுலும் நல்ல, காரோடும் பாதை உண்டு. மிக பழங் காலத்தில் சாலையேது? அந்தந்த மலையில் குடியேறியவர்கள், ஆங்காங்கேயே பல மாதங்கள் தங்க நேர்ந்துவிடும். ஒரு குடியிருப்பிற்கும் மற்றெருகுடியிருப்பிற்கும் தொடர்பு ஏற்பட்டால், அது அநேகமாக, நிலப்பறிப் போராகவே இருக்கும். அந்தக் காட்டுக் காலத்திற்கு,

ஒவ்வோர் பகுதியில் வாழ்ந்தவர்கள், ஒவ்வோர் கோத்திரமாக, ஒன்றுபட்டிருக்கும் நெருக்கடியிருந்தது. அதுவே, அக்கால மக்கள்கூட்ட தற்காப்பு முறையாக இருந்தது. பிரிவுக்குப் பிரிவு அடையாளம் கண்டு கொள்வதற்காக, தனித்தனி உடையும் ஊதுகுழலும் ஏற்படுத்திக் கொண்டார்கள். இப்போது அவற்றை சில விசஷே காலங்களில் மட்டுமே அணிகிறார்கள்.

அந்தக் காலத்திற்கும் இந்தக் காலத்திற்கும் எவ்வளவோ வேறுபாடு.

"ஆதியில், ஸ்காட்லாண்ட் பல குறுநில மன்னர்களின் ஆளுகையில், பாதுகாப்பில், இருந்து வந்தது. அவர்களுக்குள் அடிக்கடி போர் மூளும். மக்கள், வீணே மடிவர். ஸ்காட்லாண்ட் சிற்றரசர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தது. அக்கம் பக்கத்து நாட்டவருக்கு அழைப்பு விடுவது போல் இருந்தது. இங்கிலாந்து அரசர்களும் மற்ற ஐரோப்பிய அரசுகளும் ஸ்காட்லாந்தின் மேல் படையெடுத்து வந்த நிகழ்ச்சிகளும் உண்டு''.

தமிழ் நாட்டின் மூவேந்தர்கள் தங்களுக்குள அழுக்காறு கொண்டு, ஒருவரை ஒருவர் அடித்து நொறுக்கி, கடைசியில் தமிழரசே இல்லாமல் செய்து விட்ட அறிவீனம் என் மனக்கண் முன் மின்னிற்று.

அதைச் சமாளித்துக் கொண்டு, "நான்கு நாடுகளும் ஒரே ஆட்சியின்கீழ் வந்ததால், உங்களிடையிலாவது குத்து வெட்டு இல்லாமல் இருக்கிறது. மக்களினம் முழுவதுமே தங்களுக்குள் குத்து வெட்டு இல்லாது அமைதியாக வாழும் நாளும் வந்திடாதோ' என்று கேட்டேன்.

தனித்தனியாக இருந்த நான்கு ஆட்சிகள், ஓராட்சியாக இணைந்ததால் இந்த நான்குநாட்டவர்களுக்குள் போர் இல்லை. அதேபோல் எல்லா நாடுகளும் இணைந்த உலகஅரசு ஏற்பட்டால், உலகின் ஒரு

பகுதியில் இருக்கும் மக்கள் இனம் மற்ருெரு பகுதி மக்கள்மேல் போர் தொடுத்து, இரு தரப்பிலும் மடிந்து வீழ்ந்து, அல்லற்படுவது நிற்கும். அப்பெரு நிலையை எட்டுவதற்கு மனிதாபிமானிகள் அனைவரும் முயல வேண்டும்'' என்ருர் என் ஆங்கிலேய அன்பர்.

பேச்சை, அரசியல் கோட்டை கட்டுவதிலிருந்து, வேறு பக்கம் திருப்ப முயன்றேன்.

“அது கிடக்கட்டும். எடின்பரோ தொன்மை வாய்ந்த நகரமாயிற்றே! தொன்மையின் சின்னங்கள் இருக்குமே! நீண்டகால ஓட்டத்தில் அறிஞர் பலர், சிந்தனையாளர் பலர், சாதனையாளர் பலர் இந் நகரில் வாழ்ந்திருக்க வேண்டும். அவர்களைப் பற்றி சொல்லக் கூடுமா?'' என்று கேட்டேன்.

“எடின்பரோவின் நடுவில் மிக உயர்ந்த மேட்டில் பண்டைக்காலக் கோட்டை இருக்கிறது. அதில் வாழ்ந்து ஆண்டவர்களுடைய படங்களை அங்கே காணலாம். அவற்றில் எத்தனை அரசர்களின் உண்மைத் தோற்றம்; எத்தனை, ஓவியரின் கற்பனை என்பது தெரியாது.

ஆர்தர் இருக்கைக்கு அடுத்து ஹாவிராட்மாளிகை இருக்கிறது. அது கோட்டையளவு வயதுடைய தல்ல. ஆயினும் பழைய மாளிகை. இன்றும் குடியிருந்து வாழும் மாளிகை.

“வேலு! நீங்கள் பொருளாதாரப் பட்டதாரி என்கிறீர்கள் அல்லவா? ‘ஆடம் ஸ்மித்’ என்பவர் எழுதிய தேசங்களின் செல்வம் என்னும் நூலைப் படித்திருப்பீர்களே!''

“ஆம். அதுவே எங்கள் பொருளாதாரப் பாடத்தைத் தொடங்குவதற்கு முதல் நூல்'' என்றேன்.

“அந்நூலை எழுதிய ஆடம் ஸ்மித் இந்நகரில் வாழ்ந்தார். சிறந்த ஆங்கில இலக்கிய கர்த்தாவாகிய

சர். வால்டர் ஸ்காட் இந்நகரத்தில் வாழ்ந்தார் என்பதில் எடின்பரோ வாசிகள் பெருமை கொள்ளு கிறார்கள். அது மட்டுமா அவருக்குச் சிலை அமைத் திருக்கிறார்கள்'', என்றார்.

''அண்மைக் காலத்தில், எங்கள் சென்னைக் கடற் கரையில், எங்கள் தமிழ் இலக்கிய கர்த்தாக்களுக்கும் கவிஞர்களுக்கும் சிலை அமைத்திருக்கிறோம்'' என்று பெருமையோடு கூறினேன்.

''நானும் கேள்விப்பட்டேன். இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது அச்சிலைகளை வைத் தார்களாம். நமக்கு முன்னர் வாழ்ந்த இலக்கிய அறிஞர்களைப் பெருமைப்படுத்துவது, அவர்களுக்காக அல்ல. வருங்காலத் தலைமுறைகளுக்கு ஊக்கமூட்டு வதற்காக. அச்சிலைகளைக் காணும் ஆயிரக்கணக்கான இளைஞர்களில் சிலராவது, அந் நிலையை எட்ட முயல்வர். அதிலே ஒருவர், முன்னோர்களிலும் உயர்ந்த நிலையை எய்திவிடுவார். போற்றத் தெரிந்த இனமே, போற்றத்தக்க மக்களைப் பெறும்' என்று பாராட்டிய அவர், ''தாமஸ் கார்னலல் என்ற ஆங்கில அறிஞர் வாழ்ந்த நகரம் இந்த எடின்பரோ'', என்றார்.

''இன்னும் உண்டோ?''

''ஆம். உண்டு. இராபர்ட் லூயி ஸ்டீவன்சன் என்ற ஆங்கிலக் கவிஞர் இங்கே வாழ்ந்து பாடினார் என்பதைச்சொல்லி எடின்பரோக்காரர்கள் பெருமைப் படுகிறார்கள்.

''டேவிட் யூம் என்ற தத்துவ மேதை வாழ்ந்த நகரம் இது''.

''விஞ்ஞானச் சாதனையாளர்கள் உண்டோ?'' என்று வினவினேன்.

''உண்டு! தொலைபேசியை நீங்கள் வரப்பிரசாத மாக நினைக்கிறீர்களோ, தொல்லையாக நினைக்கிறீர்

களோ, எனக்குத் தெரியாது. அத் தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் யார் தெரியுமா?''

"அலெக்ஸ்ஸாண்டர் கிரகாம்பெல்'' என்பவர் கண்டுபிடித்தார், என்று பளிச்சென்று பதில் சொன்னேன்.

"நூற்றுக்கு நூறு எண்; அந்த பெல், எடின்பரோவில் வாழ்ந்தவர். இங்குள்ள உயர்நிலைப் பள்ளியில் படித்தவர்'' என்று பெருமைப்பட்டார்.

"எங்கள் நாட்டிலிருந்து பல டாக்டர்கள், மேல் படிப்புப் படிக்க எடின்பரோவிற்கு வருகிறார்கள்; அது எதனால்?''

"அது எனக்கு எப்படித் தெரியும்! உங்கள் டாக்டர்களைக் கேட்கவேண்டும். இங்குள்ள மருத்துவக் கல்லூரி பழைய கல்லூரி. என்றுமே தரத்திற்குப் பெயர் போன கல்லூரி என்பதே எனக்குத் தெரியும்'' என்று அடக்கத்தோடு உரைத்தார். சட்டென்று அவருக்கு எதுவோ நினைவுக்கு வந்தது.

"வேலு! லார்டு லிஸ்டர் என்ற பெயரைக் கேள்விப்பட்டதுண்டா?''

"ஆம் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் கண்டு பிடித்த முறை இக்கால மருத்துவத்திற்கு பெரிதும் துணை. அப்படித்தானே'' என்றேன்.

"சரி! இரண்டாம் வகுப்பு எண் பெற்றுவிட்டீர்கள். முயன்று பாருங்கள்; மேலும் தகவல் கொடுத்தால், முதல் வகுப்பு எண் கொடுப்பேன்'' என்று சொல்லிக்கொண்டே சிரித்தார்.

"நச்சுமுறி (Antiseptic) முறையைக் கண்டு பிடித்தவர் லிஸ்டர் என்றேன்.

"பலே முதல் வகுப்பு வாங்கிவிட்டீர்கள்''.

"அந்த முறையைக் கண்டுபிடித்த லிஸ்டர்பிரபு எடின்பரோக்காரர். அந்த மருத்துவச் சாதனையாளர்

கண்டுபிடித்த முறையால், ஆண்டுக்குஆண்டு, எத்தனை பேர்கள், அகால மரணத்திலிருந்து தப்பிப் பிழைக்கிருர்கள்'' என்ருர்.

''ஆம்! யாரோ ஒரு ஸ்காட்லண்டுக்காரரின் கண்டுபிடிப்பு, உலகமக்கள் அனைவருக்கும் ஆபத்திலிருந்து காக்கப் பயன்படுகிறது, தேவையற்ற துன்பத்தைத் துடைக்கிறது. மேதைகளும் உபகாரிகளும் ஏதோ ஓர் நாட்டின் குடிமக்களாக இருப்பினும், உலகத்தின் பொதுச் சொத்து. இக்கால மனித இனம், தன் நாட்டுப் பெரியவர்களுக்கு மட்டும் கடமைப்பட்டு நிற்கவில்லை; பல நாட்டுப் பெரியவர்களுக்கும் கடமைப்பட்டிருக்கிறது. இன்றைய தனியாள், மானிட சாதியில் தன்னை சங்கமமாக்கிக் கொள்ளக் கற்றுக் கொண்டால் நல்லதல்லவா?'' என்று கேட்டேன்.

''ஆம். பல்கலைக் கழகங்கள், மனித இன ஒருமைப்பாட்டை உருவாக்கும் முன்னேடிகளாகி விட்டால், காலத்திற்கேற்ற மனநிலை விரைவில் வரும்'' என்ருர்.

''எங்கேயோ தள்ளிவிடப் பார்க்கிருரே'' என்று, பேச்சை மீண்டும் எடின்பரோவிற்குஇழுத்துவந்தேன்.

''இத்தனை அறிஞர்களும் சாதனையாளர்களும் எடின்பரோவில் வாழ்ந்தார்கள் என்பது வழிவழிச் சொல்லா? ஆய்ந்து கண்ட உண்மையா?'' என்று கேட்டேன்.

''வெறும் வழிவழிச் சொல்லல்ல. எடின்பரோ நகராட்சி, சான்றுகளைத் தேடிக் கண்டுபிடித்த பிறகு, முற்காலப் பெரியவர்கள் அறுபது பேர் வீடுகளில் நினைவுச் சின்னங்களைப் பதித்திருக்கிருர்கள்'' என்ருர்.

''பழைய சிறப்புகளைச் சொன்னீர்கள். இக்காலச் சிறப்புகளைச் சொல்லவேண்டாமா?''

# 3

'தொன்றுதொட்டு கால்நடை வளர்ப்புக்கும் வேளாண்மைக்கும் பெயர் போனது, ஸ்காட்லாண்டு. இப்போது, பெரிய புகைபோக்கிகள் பல எடின்பரோ நகரைச் சுற்றிய வானமண்டலத்தில் தென்படுகின்றன, பாருங்கள். அவை புதிய தொழிற்சாலைகளைக் காட்டுகின்றன' என்று விளக்கினார் ஆங்கில அன்பர்.

தனித்தனி வீடுகளுக்குப் பதில் ஒரேகட்டடத்தில், பல குடும்பங்கள் தனித்தனி குடியிருக்கும் வகையில், பல மாடிக் கட்டடங்கள் நகரைச் சுற்றியும் நகரின் பல பகுதிகளிலும் எழும்பியிருப்பது இக்காலச் சிறப்பு. இம்மாடிக் கட்டடங்களில் குடும்பத்திற்கு வேண்டிய இக்கால வசதிகள் அனைத்தும் உள்ளன. பழைய காலம் போல, கரி அடுப்போடு கண்ணீர் சிந்த வேண்டியதில்லை. 'ஆவி' அடுப்புகள் உடையவை புதிய மாடிக் குடியிருப்புகள். அவற்றைப் பற்றி அறிய உங்களுக்கு விருப்பமா?

"எண்ணற்ற பல மாடிக் கட்டடங்களை உடைய எடின்பரோவில் வசதிக் குறைவான இல்லங்களே இல்லையென்று நன்னிலையை அடைந்து விட்டீர்களா?"

"அது எப்படி முடியும்? மாநகராட்சி ஆண்டு தோறும் புதுக் குடியிருப்புகளை கட்டுகின்றது. ஆயிரக் கணக்கான குடும்பங்களை அவற்றில் குடியேற்றுகின்றது. அப்படியிருந்தும், இந்நகரில் இருபத்தைந்தாயிரம் இல்லங்கள் இக்காலக் குடியிருப்புக்கு ஏற்றவையல்ல: அவற்றிற்கு பதில் எல்லா வசதிகளும் பொருந்திய புது இல்லங்களை கட்ட வேண்டும். அதற்குத் தேவையான நிதியை அரசு உதவ வேண்டும், என்று, மாநகராட்சியின் தூதுக்குழுவொன்று அண்மையில் அமைச்சரைப் பேட்டி கண்ட செய்தி, நாளிதழ்களில் வந்தது. இந்நகரிலும் குறைவுண்டு. அதை மூடி மறைப்பதில்லை. பலரும் அறியச் சொல்லி பரிகாரம் தேடுவதே மக்களாட்சி முறை'' என்று நண்பர் உரைத்தார்.

"இருபத்தையாயிரம் வீடுகள் இக்காலக் குடியிருப்பிற்கு ஏற்றதல்ல என்றீர்களே! அதை விளக்கிச் சொல்ல முடியுமா?'' என்று வினவினேன்.

"பழைய காலத்தில், தண்ணீரும் வெந்நீரும் தனித்தனி குழாயில் வர வேண்டுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அவரவர்கள் வேண்டிய போது வேண்டிய அளவு வெந்நீரைக் காய்ச்சிக் கொண்டார்கள். அந்தப் போக்கு மாறிவிட்டது. குழாயைத் திருப்பினால் வெந்நீரும் வரும் வசதியுடையதா என்பதைக் கவனித்தே, இக்காலக் குடியிருப்பிற்கு ஏற்றதென்று முடிவு கட்டுவார்கள். பழைய வீடுகள் பலவற்றுக்கு வெந்நீர் ஓடும் வசதியைச் செய்ய முடியாது. அத்தகைய வீடுகள் குடியிருப்புக்கு குறை தகுதி உடையனவாகக் கருதப்படும். குளிர் காலத்திற்கு, கட்டடம் முழுமைக்கும், மையக் கதகதப்பூட்டும் கருவியும் வழிகளும் பொருத்தப் பட்டிருக்க வேண்டுமென்று இக்கால மக்கள் எதிர் பார்க்கிறார்கள். அந்த வசதி இல்லாத வீடுகள்

இன்றைய தரத்திற்கு இலாயக்கற்ற கணக்கில் சேரும்'' என்ருர்.

“மின்சார விளக்கில்லாத வீடுகள் இருக்குமோ?''

''இராது. எல்லா வீடுகளுக்குமே—அவை எவ்வளவு பழையதாக இருப்பினும் மின்சார விளக்குகள் இருக்கும்'' என்ற பதிலைக் கேட்ட நான், பேச்சை வீட்டை விட்டு வெளியுலகிற்குத் திருப்ப நினைத்தேன்.

''பல மாடிக் கட்டடங்கள்; புதிய ஆலைகள், தவிர வேறு பொது நலனுக்கான, புதிய கட்டடங்கள் உண்டா?'' என்று கேட்டேன்.

''உண்டு. சில ஆண்டுகளுக்கு முன்பு, மிகப் பெரிய நீச்சல் குளம் ஒன்றை இந்நகரில் அமைத்துள்ளார்கள். அது பார்க்கத்தக்க இடம். அதில் நீச்சலடித்துப் பாருங்களேன்!'' என்ருர்.

பதினுன்கு பதினைந்து வயதில் கோடை விடுமுறையில், கிணற்றிலே நீந்த முதன் முதல் கற்றுக்கொண்டதும், 'எங்கே மூழ்கி விடுவேனே' என்ற அச்சத்தில், நான் கிணற்றில் இறங்கியபோதெல்லாம் நீந்தத் தெரிந்த பெரியவர் எவராவது ஒருவர், கிணற்றுப்படியில் காவலாக உட்கார்ந்திருந்ததும் நினைவிற்கு வந்தன.

நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு நீச்சலடிப்பது எங்கே? பல்கலைக் கழக உலகில் எதிர்நீச்சல் போடுவது போதாதா? என்று எனக்குள் ஆறுதல் கூறிக் கொண்டே,

''இந்நகரில், சூபர்மார்க்கெட் உண்டோ?'' என்று கேட்டேன்.

''உண்டு. சில அண்மையில் கட்டப்பட்டவை.

"என் இளமைப்பருவத்தில், காய்கறி வாங்க ஓரிடத்திற்கும், இறைச்சி வாங்க வேறொரு இடத்திற்கும், ரொட்டி வாங்க மூன்றும் இடத்திற்கும் அலைய வேண்டும். துணிமணி வாங்க பிறிதொரு பக்கமும் புத்தகம் எழுதுகோல் வாங்க எங்கேயோ போக வேண்டிய தொல்லைகள் இக்காலத்தில் குறைந்து வருகின்றன.

பழைய துணிக்கடைகளும் புத்தகக் கடைகளும், உண்பொருள் கடைகளும் பலப்பல தனித்தனியே இன்றும் இயங்கினாலும், ஒரு பெரிய அங்காடியில், எல்லாப் பண்டங்களும் விற்கும் பல பொருள் அங்காடி முறை விரைவாகப் பரவுகிறது. கைக்கடிகாரம் முதல் சமைத்த இறைச்சி வரை, புதுப் பழத்திலிருந்து பழச் சாறு புட்டிவரை ஒரே கட்டடத்தில் வாங்க முடிவதால் அலைச்சல் மிச்சம்; நேரம் மிச்சம். அதுமட்டுமா? அத்தகைய பெரும் அங்காடிகளில் நல்ல உணவுச் சாலைகள் இருப்பது உறுதி. பண்டம் வாங்குவோர் மட்டுமின்றி, பிறரும் அவற்றில் உணவருந்தலாம். சிற்றுண்டி பெறலாம். இத்தகைய ஏற்பாடுகளால் வீட்டுச் சமையல் தொல்லை எவ்வளவோ குறைந்து விட்டது. அதனால்தான், முற்காலத்தைப் போல அடுப்பங்கரைகளிலேயே அவதிப்படுவதற்கு மாறாக, இக்காலப் பெண்மணிகள் பல நேரம் திறந்த வெளிகளிலே உலாவி, உருண்டு மகிழ முடிகிறது".

"ஆம். ஆர்தர் இருக்கையைச் சுற்றியுள்ள மலைச் சரிவெல்லாம் உலாவும் ஓய்வு எடுக்கும் மக்கள் கூட்டத்தை பல வேளைகளிலும், இரவு எட்டு மணிக்கும் கண்டேன். அவ்வளவு ஓய்வு நேரம் கிடைப்பதன் இரகசியத்தை இப்போது புரிந்து கொண்டேன்" என்றேன்.

"வேலு! நகரத்திற்குள்ளே பல பூங்காக்கள், புல் திடல்கள் உள்ளன. அவை கவனமாகக் காப்பாற்றப்

படுகின்றன. ஓய்ந்த நேரத்தில் பெரும் பகுதியை அங்கே செலவிடும் குடும்பங்கள் ஏராளம்.

"இன்றைய பெருந்தொழில் நாகரிகத்தில் பல வகைப் புகைகள் காற்றில் கலந்து, நாம் வாங்கும் காற்றை நச்சுக் காற்ருக்கி விடுகின்றன. இன்றைய தொல்லைகளில் பெருந் தொல்லை நச்சுக்காற்று சூழல். பேருந்து வண்டிகளும் பாரப் பேருந்துகளும் விடும் புகையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள் ளார்கள். அதிக புகை கக்கும் பாரவண்டிகளை ஓட அனுமதிக்க மாட்டார்கள். பிற நச்சுப் புகைகளைக் கட்டுப்படுத்துவதில் இன்னும் முழு வெற்றியடைய வில்லை.

''நல்ல வேளையாக நாலு தெருக்களுக்கு நடுவி லாவது திறந்த சோலைகளும் புல்வெளிகளும் இருப்ப தால் அவை காற்றிலுள்ள கரியமலவாயுவை இழுத்துக்கொண்டு, தூய்மைப்படுத்த உதவுகின்றன'', என்று விளக்கிஞர்.

துன்பப்பட்டுத் திருந்துவதற்குப் பதில், நாம் வருமுன் காப்போராக இருக்க வேண்டும். புதிய தொழிற்கூடங்களை அமைக்கும்போதே, நச்சுப் புகை களையும் நச்சுக் கழிவுகளையும் மட்டுப்படுத்தும் முறை களை மேற்கொள்ள வேண்டும் என்று எனக்குத் தோன்றியது.

எடின்பரோ நகரத்துக்கப்பால், நாட்டுப்புறப் பகுதிகளைக் காண வாய்ப்புகள் கிட்டுமோ என்று நானும் மதுரை பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் மு. வரதராசன் அவர்களும், முதல் இரண்டு நாள் ஏங்கிஞேம். எங்கள் ஏக்கம் வீண் போகவில்லை. நினைவு நிறைவேறிற்று.

ரெவரண்ட் மெக்னிகல் என்பார் எடின்பரோ விற்கு அப்பால் உள்ள சிற்றூர் ஒன்றில் குடியிருக்

கிறார். அவர் சில ஆண்டுகளுக்கு முன்புவரை, தாம்பரம் கிறுத்துவக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். அவருடைய கல்வித் தொண்டால் வளர்ந்து உயர்ந்துள்ள இந்தியர் பலர். அந்த நல்லவர் இங்கிருந்து ஓய்வு பெற்றபின், தன் தாய்த்திரு நாடாம் ஸ்காட்லண்டிற்கு, குடும்பத்தோடு, திரும்பிச் சென்றார். மகனும் மகளும் பெரியவர்களாகிவிட்ட தால், திருமணஞ் செய்துகொண்டு தனிக்குடித்தனம் செய்யப் போய்விட்டார்கள். வெவ்வேறு ஊர்களில் அலுவல் பார்க்கிறார்கள். ரெவரெண்ட் மெக்னிகலும் அவரது வாழ்க்கைத் துணைவியாரும் எடின்பரோவிற்கு பதினைந்து கிலோமீட்டர் தூரத்தில் உள்ள ஓர் ஊரில் குடியிருக்கிறார்கள். ரெவரெண்ட் மெக்னிகலை, நான் பொதுக்கல்வி இயக்குனராக இருந்தபோது, இரண் டொரு முறை பார்த்திருக்கிறேன்.

எடின்பரோவில், 'காமன்வெல்த்' பல்கலைக்கழக மாநாடு நடக்கிறது என்று தெரிந்ததும், சென்னைப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் வந்திருக்க வேண்டு மென்று நினைத்தாராம். நான், துணை வேந்தராக இருப்பதையும் சென்னையிலுள்ள நண்பர்களின் கடிதங்கள் வாயிலாகத் தெரிந்து கொண்டிருந்தார். எனவே நான் தங்கியிருந்த பல்கலைக்கழக மாணவர் விடுதியோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டார். என்னோடு பேசினார்.

"நீங்களும், தமிழ்நாட்டிலிருந்து வந்துள்ள மற்ற பல்கலைக்கழக துணைவேந்தர்களும், எங்கள் இல்லத் திற்கு வந்து, தேனீர் விருந்து, பகல் உணவு, இராச் சாப்பாடு, ஏதாவது ஒன்றில் கலந்து கொள்ள வேண்டும் என்று என் மனைவியும் நானும் அன்போடு அழைக்கிறோம்.

"என் அழைப்பினை தயவுசெய்து மற்ற தமிழ் நாட்டுத் துணைவேந்தர்களுக்கு நேரில் சொல்லி,

எதற்கு வர இயலுமென்று தெரிவித்தால் நான் வந்து உங்கள் அனைவரையும் அழைத்துக்கொண்டு செல்கிறேன். தயவு செய்து எங்கள் அழைப்பை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று கனிவோடு அழைத்தார்.

அவர்களுடைய அன்பிற்குக் கட்டுப்பட்டு, நானும் டாக்டர் மு.வ.வும் தேனீர் விருந்திற்குச் செல்ல ஒப்புக் கொண்டோம்.

குறித்த நாளில், குறித்த நிமிடத்திற்கு ரெவரெண்ட் மெக்னிகலும் அவரது மனைவியும் நாங்கள் தங்கியிருந்த விடுதிக்கு வந்தனர். எங்களை தங்கள் காரில் அழைத்துக் கொண்டு, 'புதுக்குடி' என்று பொருள்படும் ஊருக்கு அழைத்துச் சென்றனர்.

எடின்பரோவே மேடுபள்ளங்கள் நிறைந்த நகரம். அதைச் சுற்றியுள்ள நாடும் உயர்ந்த மேடுகளும் மிகத் தாழ்ந்த பள்ளங்களும் மாறி மாறி வரும் நிலப்பரப்பு. சில இடங்கள் ஓசூர் பகுதியை நினைவுபடுத்தின. சில தோப்பூர் மலையை நினைவுபடுத்தின. வேறு சில பவானிசாகர் பகுதியை நினைவூட்டின. நிலம், மேடு பள்ளங்களாக அமைந்திருப்பதால், பெரும் நிலப் பரப்பாகக் காட்சியளித்தது. பெரும் சதுரங்களில் கோதுமைப் பயிர் பசுமையாகக் காட்சியளித்தது. கண் பூத்துப்போகும் வேளை, நீண்ட அகன்ற பொன் னிறம் தென்படவும், 'அது என்ன பயிரோ?' என்று கேட்டேன்.

''அது மாட்டுத் தீவனம். இப்போது பழுத்து விட்டது. அதை வெட்டி, ஒழுங்கான 'திப்பை' களாக்கி, பனியில் நனையாமல் அடுக்கி வைப்பார்கள். பனிக்காலத்தில் மாட்டுத் தீவனம் இந்த வைக்கோல்'' என்று திருமதி மெக்னிகல் பதில் அளித்தார்.

மாட்டுத் தீவனம் என்றதும் குதிரைத் தீவனத் தைப் பற்றி நினைப்பு வந்தது.

"குதிரைத் தீவனம் என்ன?" என்று கேட்டேன்.

"குதிரைக்கும் இதைப் போடுவார்கள். இப்போது குதிரைகள் அதிகம் இல்லை. நான் சிறுமியாக இருந்த போது, நிறையக் குதிரைகள் இருந்தன. சவாரிக்கும் வண்டியிழுக்கவும் மட்டுமல்லாது, உழவுத் தொழிலுக்கும் குதிரைகளை ஏராளமாகப் பயன்படுத்தினார்கள். இப்போது எங்கோ ஓர் குதிரையையே காணலாம்" என்று அந்த அம்மாள் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே,

"என்னை மன்னிக்கவும். அதோ, மேட்டிலே, நகரும் இயந்திரத்தைப் பாருங்கள். அது டிராக்டர். இப்போது நில உழவுக்கு டிராக்டர்களையே பெரும்பாலும் பயன்படுத்துகிறார்கள். குதிரை உழவு அரிது. வேளாண்மையில் பல அலுவல்களையும் கவனிக்கும் 'கம்பைன்' இல்லாத ஊரே இராது. புதிய வேளாண்மைக் கருவிகள், பயிர்த்தொழிலின் கடுமையினைக் குறைத்துவிட்டதோடு, அத்தொழிலை இலாபகரமானதாகச் செய்துவிட்டன", என்று ரெவெரெண்ட் மெக்னிகல் எடுத்துரைத்தார்.

# 4

ஸ்காட்லாண்டு மக்கள் இயந்திர வேளாண்மை முறையை மேற்கொண்டு விட்டதைப் பற்றி விளக்கிக் கொண்டிருக்கையிலேயே,

“இப்போது நுழைகிறோமே, இதுவே நாங்கள் குடியிருக்கும் சிற்றூர். இதன் பெயர் புதுக்குடி” என்றார் மெக்னிகல்.

‘‘அப்படியா! எடின்பரோவைப் போல் அதைச் சுற்றிலுமுள்ள வேறு ஊர்களைப் போல், இது தொன்மையானது அல்ல என்று நினைக்கிறோம்; அது ‘புதுக்குடி’என்ற பெயரில் தொனிக்கிறது’’ என்றேன்.

‘‘ஆம். உண்மை. இவ்வூர் தோன்றியது, நிலக்கரி சுரங்க வேலையால். இங்கு குடியிருப்போரில் மிகப் பெரும்பாலோர் சுரங்க வேலையோடு தொடர்புடைய வர்கள். இவ்வூர் புதுக்குடி மட்டுமல்ல; சுரங்கத் தொழிலாளர் கிராமம்” என்று கூறிக்கொண்டே காரை ஓட்டினார் பெரியவர்.

‘‘கிராமம் என்கிறீர்களே. எவ்வளவு பேர் குடி யிருப்பார்கள்?’’ என்பது எங்கள் அடுத்த கேள்வி.

"ஆராயிரம் மக்கள் இங்கே குடியிருக்கிறார்கள்". இது பதில்.

இதை அடுத்து நிலக்கரி சுரங்கம் உண்டா?"

"ஆமாம். சில சுரங்கங்கள் உள்ளன. நிலக்கரியைக் கண்டுபிடித்தது சுவையான கதை.

"சில நூற்றாண்டுகளுக்கு முன்பு, பிரெஞ்சுப் பாதிரிமார்கள் இவ்வூரில் 'மடம்' அமைத்தார்கள். அவர்கள், இவ்வூரில் கறுப்புக் கற்களைக் கண்டார்கள். அவற்றில் கட்டடத்திற்கு வேண்டிய உறுதியில்லை என்பதை உணர்ந்தார்கள். அவற்றில் நெருப்பு பட்டால் எரிகிறது என்று கண்டுபிடித்தார்கள்.

"அக்காலத்தில் ஏழைகள் குளிரால் பெரிதும் நடுங்கினார்கள். குளிர்காலத்தில் வீட்டு அறையை கதகதப்பாக வைத்துக்கொள்ள விறகுக் கட்டையைக் கொளுத்த வேண்டும். ஏழைகளுக்கு விறகு வாங்கக் கூட வசதியில்லை. அப்படி நடுங்கிக் கொண்டிருந்த ஏழைகள்பால் பரிதாபமுடைய பாதிரிமார், அக்கம் பக்கத்திலிருந்த 'கறுப்புக்கல்'லை மேல்மட்டத்தில் தோண்டியெடுத்து, ஏழைகளுக்கு 'எரிகல்' என்ற பெயரில் நன்கொடையாகக் கொடுத்தார்கள். நிலக்கரியைக் கண்டுபிடித்தது, அந்த பிரஞ்சு பாதிரிகளே. நிலக்கரியால் அடுப்பு மூட்டும் முறையை அவர்களே அறிமுகப்படுத்தியவர்கள்.

"அச் சமயக் குரவர்கள் அடுத்த உலகத்தைப் பற்றி மட்டும் நினைக்கவில்லை. இவ்வுலகத் துன்பங்களைத் துடைக்கவும் முயன்றார்கள்" என்றேன்.

"ஆம். நிலக்கரி பல வேலைகளுக்குப் பயன்படும் என்பது மெல்ல மெல்ல பலருக்கும் விளங்கிற்று. எனவே, தொழில்முறையில், நாலா பக்கங்களிலும் சுரங்கங்களை வெட்டத் தலைப்பட்டார்கள். இன்று நிலக்கரி தோண்டுதல் பரவலான தொழில்" என்று

முடிக்கும் வேளை, கார் ஒரு பங்களா வாயிலில் நின்றது.

திருமதி மெக்னிகல், காரிலிருந்து இறங்கி, பூட்டியிருந்த பங்களாவின் வெளிப்புற வாயிலைத் திறந்தார். கார் உள்ளே சென்று நின்றது. நாங்கள் மூவரும் இறங்கி, பங்களாவிற்குள் சென்றோம்.

பங்களா பெரியதும் அல்ல; சிறியதும் அல்ல. அதைச் சுற்றி தோட்டம், ஒரு பக்கம் காய்கறிப் பாத்திகள். மற்றொரு பக்கம் மலர்ப் பூங்கா. பிறிதொரு பக்கம் ஆப்பிள் மரங்கள். நான்காவது பகுதியில் புல்தரை வெளி.

தோட்டமும் பங்களாவும் துப்புரவாகவும் அழகாகவும் இருந்தன.

பங்களாவில் வரவேற்பு அறையில் அமர்ந்தோம்.

இந்திய நண்பர்கள் வழங்கிய அழகிய பரிசுப் பொருட்களைக் காட்டி மகிழ்ந்தார்கள், இருவரும்.

விருந்தினர் பேரேடு ஒன்றை எங்கள் முன் வைத்தார்கள். பல இந்திய நண்பர்களின் பெயர்களைக் கண்டு மகிழ்ந்தோம். அவ்வில்லம் ஒரு 'அனைத்துலக இல்லம்' என்பதை பல நாட்டு விருந்தினர்கள் பெயர்கள் காட்டின. நாங்கள் இருவரும் அதில் கையெழுத்திட்டோம்.

பேச்சு பங்களாவைப் பற்றி திரும்பிற்று.

"உங்கள் பங்களா நன்றாக இருக்கிறது. புதிய வசதிகளும் கொண்டுள்ளது" என்று பாராட்டினோம்.

"இது, எங்கள் பங்களாவல்ல. இவ்வூர் கிறுத்தவ திருச்சபையின் சொத்து.

"இவ்வூர் திருச்சபைக் கோயிலில், நான் குருவாகத் தொண்டு செய்கிறேன். எனவே இதில் குடி

யிருக்கிறேன். இதேபோல், பல தலைமுறைகளாக இக்கோயில் குருக்கள் இங்கே குடியிருந்தார்கள். இது உண்மையில் குரு இல்லம்'' என்றார், மெக்னிகல்.

பல கிறுத்தவ குருமார்கள், நிறை கல்வியும் உடையவர்கள். எனவே, பல்கலைக்கழக விதிமுறைகள் அனுமதிக்கும் காலம்வரை கல்லூரிக் கல்வியாளர்களாகப் பணிபுரிந்து விட்டு அங்கிருந்து, ஓய்வு பெற்ற பிறகு வெறும் 'பென்ஷனர்'களாக வாழாமல், தொடர்ந்து, தொண்டர்களாக விளங்க முடிகிறது.

''நீங்கள் எங்கே படித்தீர்கள்?'' என்று என்னைப் பார்த்துக் கேட்டார் பெரியவர்.

''காஞ்சிபுரம் ஆண்டர்சன் உயர்நிலைப்பள்ளியில்'' என்று சொன்னேன்.

''ஓகோ! நீங்கள், ஸ்காட்லாந்து கிறுத்தவர்களின், கல்வித் தொண்டால் விளைந்த பெரியவரா?'' என்று பெருமையோடு கேட்டார்.

''ஸ்காட்லாந்து கிறுத்தவருக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ள இலட்சக் கணக்கான இந்திய பட்டதாரிகளில் நானும் ஒருவன்.

''என்னை உருவாக்க, ஒரு பெரியவர், என் பள்ளிக்கூட தாளாளராக விளங்கினார். ரெவெரெண்ட் மெக்லீன் என்பவரை தாங்கள் அறிவீர்களா?''

''புகழால் அறிவேன். அவரைக் கண்டு அவரோடு பழகும் பேறு எனக்குக் கிட்டவில்லை. நான் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பே, அவர் ஓய்வு பெற்று விட்டார். அவ்வளவு மூத்தவர், அவர். அவரது சிறப்பினை பல நண்பர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்'', என்றார்.

''நேரில் கண்டு உணர்ந்த நானும் அவரைப்பற்றி சொல்லட்டுமா?''

"சொல்லுங்கள் கேட்போம்".

"ரெவெரெண்ட் மெக்லீன் தமிழ் கற்றவர் — தமிழிலே சமயப் பிரசாரம் செய்வார்.

"எங்கள் காஞ்சிபுரத்தில் எல்லா நாளும் திருவிழா நாளே. எனவே திருவிழாக் கூட்டமும் எப்போதும் உண்டு.

"மெக்லீன், காஞ்சிபுரத்தின் பல்வேறு மையங்களில் நின்று, கிறுத்தவ சமயத்தைப் பற்றி பொது மக்களுக்கு எடுத்துரைப்பார்.

"வகுப்பிலே அவரிடம் 'வேத' பாடம் கேட்டதோடு, நிற்காமல், சிலவேளை அவரது பொதுக் கூட்டங்களுக்கு, நான் சென்றதுண்டு. நான்கு ஐந்து முறை நான் கண்டது, விரும்பத்தகாத குறும்பு.

"தெருச்சுற்றி சிறுவர்கள் சிலர், கைகளில் மண்ணை மூடி வைத்திருந்து பேச்சாளர் மேல் எறிந்ததைக் கண்டு, நான் எரிச்சல் கொண்டதுண்டு. அவ்வமயங்களில் நான் சிறுவர்களைப் பிடித்துத் தண்டிக்க முயன்றது நினைவிற்கு வருகிறது. ரெவெரெண்ட் மெக்லீன், அப்படித் தண்டிக்கவிட மாட்டார்.

"நான் அவருடைய மாணவனுகையால் என்னை அடையாளங் கண்டு கொள்வார். சும்மா இருக்கும்படி ஆணையிடுவார். பதருமல், தொடர்ந்து பேசி, சொல்ல வேண்டியதைச் சொல்லியே முடிப்பார். முடிக்கும் போது, சிறிதும் கடுமை இல்லாமல், 'தந்தையே அவர்களை மன்னியுங்கள்; அவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்று, அறியாதிருக்கிருர்கள்' என்ற ஏசுவின் பிரார்த்தனையைச் சொல்லியே முடிப்பார்.

"இப் பிரார்த்தனையை நான் வகுப்பில் படித்திருக்கிறேன். குழப்பச் சூழ்நிலையில் பெரியவர் மெக்லீன்

வாயில் அதைக் கேட்டபோதெல்லாம், அது, என் உள் மனத்தை உருக்கி, எனக்குப் பொறுமைப் பாடத்தை கற்றுக் கொடுத்தது. கிறுத்துவின் போதனைப்படி நடந்த தயாளர் ஒருவரை, நேரில் காணும் நற்பேறு எனக்குக் கிட்டிற்று'' என்று நான் உணர்ச்சி பொங்க, கூறியதை அவர்களும் உணர்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்கள்.

''வேலு! காஞ்சிபுரத்தில் படித்த உங்களுக்கு, ஒரு காலத்தில் அங்கிருந்த டாக்டர் ஆர்டியைத் தெரியுமா'' இது மெக்னிகல் அவர்களுடைய கேள்வி.

''நன்ருகத் தெரியும். மிஷன் மருத்துவமனை மருத்துவராக இருந்தார். என் வலது தாடையில் உள்ள குழி, நான் ஐந்தாம் வகுப்பில் படிக்கும் போது உண்டான கட்டியினுல் ஏற்பட்டது. அக்கட்டிக்கு மருந்து போட்டுக் கொள்ள, ஆர்டியிடம் சென்றுள்ளேன்.

''அக்காலத்தில் காஞ்சிபுரத்தில் இரண்டே கார்கள். ரெவெரெண்ட் மெக்லீன், டாக்டர் ஆர்டி இவர்களே கார் வைத்திருந்தார்கள். அப்புறம், டாக்டர் பி. எஸ். சீனிவாசன் என்பவர் கார் வாங்கினுர்'', என்று பழைய கதையைச் சொன்னேன்.

''அந்த டாக்டர் ஆர்டி, பிறந்து வளர்ந்தது இந்த பங்களாவில்தான். அவருடைய தந்தையார், இங்கு, கிறித்துவ 'குரு'வாக இருந்தார்,'' என்று சொன்ன போது நான் பரவசமானேன்.

'உலகமும் சிறியது. காலமும் சிறியது. சிந்தனையிலும் செயலிலும் உயர்வானவர்களுடைய தொடர்பு, வீண்போவதில்லை என்ற உணர்வு என்னை ஆட் கொண்டது.

இதற்குள் திருமதி மெக்னிகல், அழகிய பீங்கான் தட்டுகளில், சிற்றுண்டிகளை கொண்டு வைத்தார்கள்.

காப்பியும் தேனீரும் தனித்தனியே வந்தன. உண்ணத் தொடங்கினோம்.

பேசாமல் உண்பது, மேனாட்டில் தவறான முறை. எனவே பேச்சு கொடுத்தோம்.

"இவ்வூரில் கல்வி வசதி எப்படி?"

"ஒரு தொடக்கப் பள்ளியும்; ஒரு உயர்நிலைப் பள்ளியும் உள்ளன. பொது நூலகமும் உண்டு. இரண்டு பள்ளிக்கூடங்களும் 'கெண்டி கௌன்சிலால்' நடத்தப்படுபவை. எனவே கல்வி இலவசம்."

"எங்கள் தமிழ்நாட்டில் கூட ஐயாயிரம் மக்கள் உள்ள ஊர்தோறும் உயர் நிலைப்பள்ளியுண்டு".

"எனக்குத் தெரியுமே: பள்ளிக்கூடங்கள் மடமட வென்று ஏற்பட்டபோது நான் சென்னையில் இருந் தேன். நான் சிறுவனாக இருந்தபோது, ஸ்காட் லாண்டில் குடும்பத்திற்கு ஒருவரே உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடிப்பார். குடும்பத்தினர் எவ்வளவோ, வாயையும் வயிற்றையும் கட்டி, ஒரு பையனையோ பெண்ணையோ படிக்க வைத்து விட்டால், அதை ஊர் முழுவதும் பாராட்டும். இப்போது எல்லோரும் படிக்கிறார்கள்" என்று மெக்னிகல் பூரித்தார்.

"கல்லூரிக் கல்வியும் தாராளமாகக் கிடைக் கிறதா?" இது எங்கள் அடுத்த கேள்வி.

"ஆம். கிடைக்கிறது. கல்லூரி மாணவ மாணவி களில் நூற்றுக்கு எண்பது பேருக்கு அரசிடமிருந்து உபகாரச் சம்பளம் கிடைக்கிறது."

"அதோடு, அன்றாடம் சில மணி நேரம் எங்காவது வேலை செய்து சம்பாதிக்கும் வாய்ப்புகளும் பெருகிக் கொண்டிருக்கின்றன. ஊக்கமுடைய மாணவ மாணவி, கல்லூரிக் கல்வியைப் பெறுவதற்கும் தவிக்க வேண்டியதில்லை.

"அது சரி, ஏற்கனவே, ஓரளவு மட்டுமே படித்து விட்டு, நின்று விட்ட, முதியவர்களுக்குத் தொடர் கல்வி வாய்ப்புகள் உண்டா?"

"நிறைய உண்டு. பொது நூலகங்கள், படித்த முதியவர்களின் படிப்பார்வத்திற்குத் துணைபுரி கின்றன. நூலகப் படிப்பு, தாமே படிப்பது. அது போதாது. ஏதாவது பாட வகுப்பிலே சேர்ந்து, முறை யாக ஒருவரிடம் பாடம் கேட்க வேண்டுமென்று விரும்புவோருக்குப் பல ஊர்களிலே நல்ல ஏற்பாடுகள் உள்ளன. முதியோர் கல்வி நிலையங்கள், எங்கள் நாட்டின் பொதுக் கல்வி முறையில் இணைந்த ஒன்ருகும். முதியோர் கல்வி நிலையங்களை ஏற்படுத் தவும், நடத்தவும், விரிவுபடுத்தவும் மைய அரசும், பிராந்திய ஆட்சிகளும் பணவுதவி முதல் பல உதவி களைச் செய்கின்றன.

முதியோர் ஏற்கனவே பெற்றுள்ள கல்வியை உயர்த்துவதற்கான நாடு தழுவிய இயக்கத்திலும், முயற்சிகளிலும், 'தொழிலாளர் கல்விக் கழகம்; ஆற்றி வரும் பணி பெரும் பணியாகும்'', என்ருர் மெக்னிகல்.

"உங்கள் நாட்டு தொழிலாளர் இயக்கம் சம்பள உயர்வுக்குப் போராடுவதோடு, பாட்டாளிகளின் அறிவு வளர்ச்சிக்கும் முயற்சி செய்கிறது. அப்படித் தானே?''

"ஆம். பாட்டாளிகளின் கல்வி வளர்ந்து கொண்டே இருந்தால்தான், புதிது புதிதாகக் கண்டு பிடிக்கும் நுண்கருவிகளையும், 'தர உயர்வு' முறைகளை யும் பழைய பாட்டாளிகள் சமாளிக்க முடியும்'' என்று முடிக்கப் போகும் நேரம் எதையோ நினைத்துக் கொண்டார், மெக்னிகல்.

" 'திறந்த பல்கலைக்கழகம்' என்பதைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா?'' என்று கேட்டார்.

"ஆம். இந்த அண்மைக்கால உயர்கல்விச் சோதனையைப் பற்றி எங்கள் நாட்டில் ஒரே பேச்சு" என்றேன்.

"பலப்பல தொழில்களிலே ஈடுபட்டுள்ளவர்களில் பலர், கல்வி ஆர்வம் உடையவர்கள். ஆனால் ஒழுங்காக கல்விநிலையங்களுக்கு, பகுதி நேரமும் போக முடியாத சூழ் நிலையில் உள்ளனர். உயர்கல்விக்கு வேண்டிய நுழைவுத் தேர்வினை, இளமையில் தேறுதவர்களும் எண்ணற்றவர். இத்தகையோருக்குக் கல்வி உலகை அடைத்துவிடக் கூடாது என்கிற அடிப்படையில் சில ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட 'திறந்த பல்கலைக் கழக', வெள்ளோட்டம் வெற்றிகரமாக இருப்பதாகக் கேள்வி".

# 5

புதுக்குடியில் ரெவெரெண்ட் மெக்னிகல் வீட்டில் தேனீர் விருந்துண்டபின், எடின்பரோ நகருக்குத் திரும்பினோம். திரு மெக்னிகல் அவர்களே, தமது காரில் எங்களை அழைத்து வந்தார். வழியில், ஒரு பெரிய மாளிகையைக் காட்டினார். அது, இந்தியாவில் வைசிராயாக இருந்த, டல்ஹௌசி பிரபுவின் சந்ததிக்கு உரியதாம். இப்போது ஓட்டலாகப் பயன்படுவதாக அவர் கூறினார்.

மற்றொரு பிரபுபின் மாளிகையைக் காட்டி, அது தொடர்கல்விக் கல்லூரியாகப் பயன்படுவதாகக் கூறினார். தொடர்கல்விக் கல்லூரியைப் பற்றி விளக்கம் கேட்டேன்.

பள்ளிக்கூடப் படிப்பிற்கு மேற்பட்ட கல்வியைப் பெறுவதற்கு பல வழிகள் உண்டு. பதினாறு வயது முடிய கட்டாய இலவசக் கல்வி. அப்புறம் பல்கலைக் கழகத்திலோ, கல்லூரியிலோ சேர்ந்து பட்டப்படிப்பிற்கு படிப்பது ஒரு வழி. பள்ளிப்படிப்பு போதுமென்று கருதுவோர், தொழிலில் சேரலாம். அவர்களுக்கு பதினெட்டு வயது முடியும் வரை, வாரத்திற்கு

சில மணிகளாவது, பொது அறிவுப் படிப்பினை தொழிற்கூடங்களே ஏற்பாடு செய்ய வேண்டும். பதினெட்டு வயதுக்குப் பிறகு தொழிலாளர்களும் அலுவலர்களும் பகுதி நேரக் கல்வி பெற ஏற்பாடு செய்யும் முறையே தொடர் கல்வி முறையாகும். அக் கல்வி, பொதுக் கல்வியாகவும் இருக்கலாம்; தொழிற் கல்வியாகவும் இருக்கலாம்'' என்றார்.

தொடர் கல்விக்கூடங்களை யார் நடத்துகிறார்கள்?

அந்தந்தப் பகுதியின் கல்விக்குழுவே இதையும் நடத்துகிறது.

பதினொரு ஆண்டுகளுக்கு முன், நான் எடின்பரோ நகருக்குச் சென்றிருந்தேன். அப்போது நான் கண்ட அரிய காட்சியை உங்களுக்குச் சொல்ல வேண்டும்.

மாலைக் கல்வி நிலையம் ஒன்றை நான் பார்க்க, ஏற்பாடு செய்திருந்தார்கள். கல்வி நிலையத் தலைவர், என்னைப் பல வகுப்புகளுக்கு அழைத்துக் கொண்டு போனார்.

ஓர் வகுப்பறையில், ஆசிரியரின் மேசைமேல் அழகிய விரிப்பு ஒன்று போடப்பட்டிருந்தது. அது அவ்வகுப்பு மாணவி ஒருவரால் நெய்யப்பட்டதாம். அம்மாணவியின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார். ஓர் வயது முதிர்ந்த அம்மையார் புன்முறுவலோடு கையை உயர்த்தினார். அவர், அக்கல்வி நிலையத்தில் சேர்ந்த பிறகே, நெய்யக் கற்றுக் கொண்டாராம். விரைவில் நெசவில் திறமை பெற்றாராம். 'கற்றுக் குட்டி (அமெச்சூர்) நெசவுப் போட்டியில், எடின் பரோவில் முதல் பரிசு பெற்றதாம், அம்மேசை விரிப்பு. இத்தகவல்களைக் கேட்டதும், அந்த அம்மாளைப் பாராட்டினேன்.

முதிர்ந்த வயதில், அக்கல்வி நிலையத்தில் சேர்ந்த தற்குக் காரணத்தைக் கேட்டேன். அவர் சொன்ன காரணம் சுவையாக இருந்தது!

அந்த அம்மாளின் பிள்ளைகள் பெரியவர்களாகி, தனித்தனி குடித்தனம் செய்யப் போய்விட்டார்கள். அவரும் அவரது கணவனும் மட்டுமே தனியாகக் குடியிருந்தார்களாம். பொழுதுபோகவில்லையென்று அவரது கணவர், அக்கல்வி நிலையத்தில் சேர்ந்து வண்ணப்படம் தீட்டும் கலையைக் கற்றுக் கொள்ள முடிவு செய்தாராம். தான் மட்டும் தனியாக வீட்டில் சும்மா இருப்பானேன் என்று அந்த அம்மாளும் அதே கல்வி நிலையத்தில் சேர்ந்து நெய்தற்கலையை கற்றுக் கொண்டாராம். எந்த வயதில் தெரியுமா? கணவருக்கு வயது எழுபத்திரண்டு; மனைவிக்கு வயது எழுபது. அந்த வயதிலும் கற்கும் ஆர்வம் இருந்ததைப் பாராட்டிவிட்டு, வேறொரு வகுப்பிற்குச் சென்றபோது, கணவரைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் தீட்டிய மயில் ஓவியம் சுவரில் மாட்டப் பட்டிருந்தது. கண்ணையும் கருத்தையும் கவர்ந்த அந்த ஓவியமும் கற்றுக்குட்டி ஓவியர்கள் தீட்டிய படங்களில் முதற் பரிசு பெற்றதாம். அவரையும் பாராட்டினேன்.

புதுப்புதுக் கலைகளைக் கற்றுக் கொள்வதில் அவர்களுக்கிருந்த ஆர்வம், நமக்கு எழுச்சியூட்டுவதாக இருந்தது. ஆர்வம் வெளிப்பட்டு உருவாக வாய்ப்புகள் வேண்டுமே.

அத்தகைய வாய்ப்புகளை ஏற்படுத்துவதும் இக்காலப் பல்கலைக் கழகங்களின் பொறுப்பு. உலகப் புகழ் பெற்ற ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்கள், பல்லாண்டுகளாகவே, Extra Mural Studies. என்ற பெயரால் பொதுமக்களின் அறிவினை வளர்க்கத் துணை செய்யும் குறுகிய, நீண்டகால, பாடங்களை அமைத்துச் செயல்படுத்தி வருகின்றன.

அத்தகைய பாடமுறைகள் நம் இந்தியப் பல்கலைக் கழகங்களிலும் வரவேண்டும். இவை தேவையா என்பதைப்பற்றி ஆலோசிக்க, மூன்று ஆண்டுகளுக்கு

முன்பு ஓர் பிராந்திய மாநாடு சென்னையில் கூடிற்று. ஆசிய நாடுகள் சிலவற்றிலிருந்தும் ஆஸ்திரேலியாவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் கல்வி அறிஞர்கள், அம்மாநாட்டில் கலந்து கொண்டார்கள். சென்னைப் பல்கலைக்கழகம் நடத்திய அம்மாநாடு, பல்கலைக் கழகங்களில் 'தொடர் கல்வி'த் துறை ஏற்படுத்த வேண்டுமென்று பரிந்துரைத்தது. அதைத் தொடர்ந்து சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொடர்கல்வித் துறை ஐந்தாவது ஐந்தாண்டு திட்டங்களில் ஒன்ருக அமையுமென்று எதிர்பார்க்கிறேம்.

இத்தகவல்களை நினைவுபடுத்திக் கொண்டிருக்கையில் எடின்பரோ நகருக்குள் நுழைந்தோம்.

முற்காலத்தில் எடின்பரோவின் புறப்பகுதியில் 'தொழு நோயர்' தனித்துக் குடியிருந்ததாக, ஒரு பகுதியைக் காட்டிவிட்டு, நாங்கள் தங்கியிருந்த விடுதியில் எங்களை இறக்கி விட்டார்.

எடின்பரோவிற்கு வந்த 'காமன்வெல்த்' பல்கலைக் கழகத் துணைவேந்தர்களும் பேராசியர்களும் தங்கியிருந்தது, மாணவர் விடுதிகளிலே. வந்திருந்த ஆயிரத்து நூறு பேர்களுக்கு ஓட்டல்களில் இடம் கண்டுபிடிப்பது இயலாத ஒன்ருகும். நாங்கள் தங்கியிருந்த விடுதிகள் வசதியானவை.

சாப்பாட்டுக்கூடம் நடுவிலும் அதைச் சுற்றி, தங்கும் மாடி விடுதிகள் ஏழும் அமைத்துள்ளார்கள்.

எங்கள் அறைகளை அன்ருடம் துப்புரவு செய்தது யார் தெரியுமா? வேலைக்காரர்கள் அல்லர். பின் யார்? மாணவிகள்; அப்பல்கலைக் கழக மாணவிகள். கதையல்ல. உண்மை. இதைக் கடைசியில் தான் தெரிந்து கொண்டேன்.

மாநாட்டின் தொண்டர்களாகி, அப்பணியை இலவசமாகச் செய்தார்களா? இல்லை. சம்பளத்திற்காக, விடுமுறை வேலையை ஏற்றுக் கொண்டார்கள். இது அந்நாட்டில் சாதாரணம். பதினெட்டு வயதிற்குப் பிறகு, விடுமுறை காலத்திலாவது வேலை அனுபவம் மேற்கொள்ளாமல் இருப்பதே வியப்பானதாகும்.

நாங்கள், காலைச் சிற்றுண்டி அருந்தி விட்டு, மாநாட்டுக்குச் சென்று விடுவோம். மாலையில் மாநாட்டிலிருந்து திரும்புவோம். பகல் உணவோ, மாநாட்டுக்குப் பக்கத்திலேயுள்ள கூடத்தில்.

மாலை, தங்கள் தங்கள் அறைக்குத் திரும்பினால், அறை துப்பரவு செய்யப்பட்டிருப்பதைக் காணலாம். படுக்கையைத் தட்டி ஒழுங்காகப் போட்டிருப்பார்கள். கற்றுக்குட்டிகளாயினும் வேலையில் குறையிராது; பொறுப்போடு, செம்மையாக செய்யப்பட்டிருக்கும்.

யார் எந்த அறையைத் துப்புரவு செய்தார் என்பது தெரியாது. தெரிந்து கொள்ள தேவையும் ஏற்படாது. அவ்வளவு அமைதியாக அந்தந்த வேலை முறைப்படி நடந்து கொண்டிருக்கும்.

நூற்றுக்கு எண்பது மாணவ மாணவியர்களுக்கு ஏதாவதொரு உபகாரச் சம்பளம் கிடைக்கும். அந்நாட்டில், அவர்கள் பகுதிநேரமோ விடுமுறையிலோ வேலை செய்வானேன்? இப்படித் தோன்றலாம்.

ஒவ்வோர் சமுதாயத்தில் ஒவ்வோர் போக்கு. போக்குமட்டுமல்ல தேவையும் உண்டாம். என்ன தேவை? என்ன தேவையென்று சில நாட்களுக்குப் பிறகு தெரிந்தது. அதை உரிய இடத்தில் எழுதுகிறேன்.

# 6

ரெவெரெண்ட் மெக்னிகல் தயவால்,ஸ்காட்லாண்டின் நாட்டுப்புற பகுதிகளைக்காண நேர்ந்ததைப்பற்றி நாங்கள் மகிழ்ந்தோம். நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்ட சுவையான கதையைக் கேட்டோம். அடிப்படை வசதிகளைப் பொருத்தமட்டில், நாட்டுப்புறங்களுக்கும் நகரங்களுக்கும் அதிக வேறுபாடு இல்லையென்பதைத் தெரிந்து கொண்டோம்.

நன்மையோ தீமையோ தனித்து வருவதில்லை. இரண்டில் எது வந்தாலும், அது அடுத்தடுத்து வரும். எங்களுக்கு நன்மை அடுத்தடுத்து வந்தது. அந்நாட்டில் கிராமப் பகுதிகளைக் காணும் வாய்ப்புகள் மீண்டும் மீண்டும் கிடைத்தன.

எடின்பரோ பல்கலைக்கழகத்தில், மொழியியல் துறையில், பேராசிரியர் ஆஷர் என்பவர் பணிபுரிகிறார். அவர் தமிழறிந்த மொழியியல் வல்லுனர். சில ஆண்டுகளுக்கு முன்னர் சென்னைக்கு வந்திருந்து தமிழ் ஆய்ந்தவர். அவர் கோலாலம்பூர், சென்னை, பாரிசு ஆகிய நகரங்களில் நடந்த உலகத் தமிழ் மாநாடுகளில் பங்கு கொண்டுள்ளார். எனவே

எனக்கு அறிமுகமானவர். டாக்டர் மு. வ. விற்கு மிகவும் வேண்டியவர்.

ஓர்நாள் பிற்பகல், எங்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு போய், ஊரைச் சுற்றிக் காட்ட, வந்தார். அவரோடு, அவரது மனைவியும் இரு மகன்களும் இருந்தார்கள். மூத்த மகனுக்கு ஏழு வயது. மூன்றாவது வகுப்பிற்குப் போயிருக்கிறான். இளையவனுக்கு ஐந்து வயது. பள்ளியில் சேரப்போகிறான்.

அவர்கள் நாங்கள் தங்கியிருந்த விடுதிக்கு வந்த பிறகே எங்கே போவதென்பதைப் பற்றி சிந்தித்தோம். எடின்பரோவிற்கு அப்பால் ஐம்பது அறுபது கிலோ மீட்டர் தொலைவில் 'சிங்கப் பண்ணை' இருப்பதாகக் கேள்விப்பட்டிருந்தோம். சுற்றுலாக்காரர்கள், அங்கே சென்று சிங்கங்களை இயற்கைச் சூழ்நிலையில் காண்பார்களாம். அதைப் பார்க்க அவாவினோம்.

'போய் வரலாமே' என்றார் பேராசிரியர் ஆஷர். அவரது குடும்பம் அதை வரவேற்றது.

தனது குடும்பத்தையும் எங்களையும் காரில் அழைத்துக் கொண்டு, 'சிங்கப்பண்ணை' இருக்கும் 'டிரம்மண்ட்' என்ற ஊருக்கு விரைந்து சென்றார். காரை பேராசிரியரே ஓட்டினார்.

விடுதியை விட்டுப் புறப்படும்போது, காரில், தன் இருக்கைக்கு எதிரில், ஸ்காட்லண்ட் நாட்டின் நெடுஞ்சாலைப் பட நூலை திறந்து வைத்தார். அது என்ன என்று கேட்டேன்.

இந்நாட்டின் நெடுஞ்சாலைகள் அனைத்தும் இப்பட நூலில் அச்சிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு நெடுஞ்சாலைக்கு ஒவ்வொரு எண் உண்டு. நாம் போக வேண்டிய இடத்திற்கு எந்த நெடுஞ்சாலையில் செல்ல வேண்டுமோ அந்த நெடுஞ்சாலைப் படத்தை எதிரில் திறந்து வைத்துக் கொள்வோம். எங்கே, சந்திப்பு

எங்கே திருப்பம், எங்கே மெல்லச் செல்லுதல், என்றெல்லாம் படத்தில் குறிப்புகள் உள்ளன. அதைக் கவனித்துக் கொண்டே காரை ஓட்டுவோம். கார்மூலம் பயணஞ் செய்யும் ஒவ்வொருவரிடமும் இத்தகைய சாலைப் படநூல் இருக்கும்'' என்று சொல்லிக் கொண்டே, காரை ஓட்டினர். எடின்பரோவைக் கடந்ததும், 'மோட்டார் பாதை' எனப்படும் விரைவுச்சாலையில் புகுந்து பறந்தோடினோம்.

வழிநெடுகிலும் பலப்பல பண்ணைகளைக் கண்டோம். மந்தை மந்தையாக செம்மறியாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. ஆனால் பண்ணையைத் தாண்டி நெடுஞ்சாலைக்குள் நுழைந்துவிட்ட ஆட்டையோ மாட்டையோ நாங்கள் எங்கும் காண வில்லை. இது வியப்பாக இருந்தது. குறுக்கும் நெடுக்கும் பாய்ந்தோடும் நாய்களைக்கூட, நாங்கள் காணக் கொடுத்து வைக்கவில்லை. அது அது அதன் அதன் இடத்தோடு, கட்டுப்பட்டுக் கிடந்தது. இருப்பினும் சிற்சில இடங்களில் 'ஆடுகள்' என்ற அறிவிப்புப் பலகைகளை நெடுஞ்சாலையில் கண்டோம்.

அழகிய இயற்கைக் காட்சிகளையும் கட்டுப் பாடுடைய செம்மறியாடுகளையும் பார்த்து, மகிழ்ந்து கொண்டே, சென்ற நாங்கள், சிற்சில ஊர்களைக் கடக்க நேர்ந்தது. நெடுஞ்சாலையில் பல பக்கங்களி லிருந்தும் விரைந்து ஓடும் வண்டிகளின் சந்திப்பிற்கு முன்னரே தக்க குறிகளைக் காட்டி காரோட்டிகளை எச்சரிப்பதால், விபத்து ஏதும் இன்றி போய்க் கொண் டிருந்தோம். வழிநெடுகிலும் சிறுவர்கள் பலப்பல கேள்விகளைக் கேட்டார்கள். தாயார் பொறுமையாகப் பதில் கூறிக் கொண்டே வந்தார்.

ஓர் பெரு நகரை நெருங்கியபோது, பேராசிரியர் ஆஷர், காரை சாலையோரம் கொண்டு போய் நிறுத் தினர். நடைபாதையில் இருந்தவரிடம் 'டிரம்மண்ட்'

பண்ணைக்கு போகும் வழியைக் கேட்டார். அவர் காட்டிய அடையாளத்தை மனதில் வாங்கிக் கொண்டு, மீண்டும் புறப்பட்டார்.

“இது ‘ஸ்டர்லிங்’ என்னும் நகரம். இது எனக்குப் பழக்கமில்லாத ஊர். முன்னர், ஒரே முறை இவ்வழியாக, சிங்கப்பண்ணைக்குச் சென்றிருக்கிறேன். ஊரைத் தாண்டிச் செல்லும் சாலைபற்றி, தவறு நேர்ந்து, காலதாமதமாகிவிடக் கூடாதே, என்பதற்காக வழியைக் கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டேன்” என்று திரு ஆஷர் விளக்கினார்.

“இங்கே ஒரு பல்கலைக்கழகம் இருக்கிறதாமே”, என்றேன்.

“ஆம். புதிய பல்கலைக்கழகம். நன்றாகக் கட்டியிருக்கிறார்களாம்”

“அப்படியா! எவ்வளவு மாணுக்கர்கள் இருப்பார்கள்?”

“திட்டவட்டமாகத் தெரியாது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தாறில் தொடங்கப்பட்டது, இப்பல்கலைக்கழகம். இரண்டாண்டு சென்ற பிறகே மாணவர்களைச் சேர்த்தார்கள். சில ஆயிரம் மாணவர்களோடு நிற்கும் இது” என்றார்.

அப்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவரை அடுத்த நாள் எடின்பரோ விருந்தில் கண்டேன். அவரிடம் விசாரித்தேன்.

“எழுபத்தாறில் மூவாயிரம் பட்டப் படிப்பாளிகளும் நானூறு மேற்பட்டப் படிப்பாளிகளும் இருக்கும் வண்ணம், பத்தாண்டு திட்டமிட்டு, பல்கலைக்கழகத்தைத் தொடங்கியுள்ளார்கள்.

“வேலு! உங்கள் பல்கலைக்கழத்தில் எத்தனை மாணுக்கர்கள்?” என்று என்னைக் கேட்டார்.

"இலட்சத்து அறுபத்தெட்டாயிம் மாணுக்கர் கள்" என்றேன்.

"உண்மையாகவா? ஒரு பல்கலைக்கழகத்திற்கு இத்தனையா? நம்ப முடியாத இந்த எண்ணிக்கை உங்கள் நாட்டின் விசித்திரங்களில் ஒன்று."

ஒரு நொடி தயங்கினுர்.

"வேலு! மன்னியுங்கள். நான் இவ்வளவு பச்சை யாகச் சொல்லியிருக்கக் கூடாது" என்று என்னை அமைதிப்படுத்த முயன்ருர்.

ஆஷர், பல கிலோ மீட்டர்கள் ஓட்டிய பிறகு, மீண்டும் காரை ஒரு பக்கமாக நிறுத்தி, சிங்கப் பண்ணைக்குப் போகும் வழியை, பாதசாரி ஒருவரிடம் கேட்டார்.

"அதைத் தாண்டி இரண்டு மூன்று கிலோ மீட்டர் தூரம் வந்து விட்டீர்களே! வந்த வழியே திரும்பிச் செல்லுங்கள். இடது பக்கத்தில் 'டிரம்மண்ட்' வழியைக் காட்டும் கைகாட்டியைக் காண்பீர்கள்" என்ருர் வழிப்போக்கர்.

"பண்ணையை மூடுவதற்குள் போய்ச் சேர வேண்டுமே! நம் அதிர்ஷ்டம் எப்படியிருக்கிறதோ! பார்க்கலாம்", என்று கூறிக் கொண்டே, வந்த வழியே திரும்பினுர். சொன்னபடி 'டிரம்மண்ட்' கைகாட்டி இருந்தது. அது காட்டிய வழியில் நுழைந்தோம். இரண்டு கிலோ மீட்டர் தூரம் இருமருங்கிலும் ஓங்கி வளர்ந்த நெடுமரங்களுக்கு ஊடே, சாலை சென்றது.

கார் சட்டென்று நின்றது. யரோ ஒருவர், டிக்கட் கட்டோடு காரை நெருங்கினுர்.

அனைவருக்கும் உரிய பணத்தை பேராசிரியர் ஆஷரே கொடுத்தார். டிக்கட்டைப் பெற்றுக் கொண்டார்.

"தயவு செய்து காரின் எல்லா சன்னல்களையும் முழுவதும் அடைத்து விடுங்கள். சிங்கப்பண்ணைக் குள்ளே காரிலோ, பேருந்து வண்டியிலேயோ போகலாம். யாரும் இறங்கி நடக்கக் கூடாது. கார், பேருந்து வண்டியின் சாளரத்தைத் திறந்து வைத்துக் கொண்டு வேடிக்கைப் பார்க்கக் கூடாது. அப்படிச் செய்வது விதிமுறைக்குப் புறம்பானது மட்டுமல்ல. பேராபத்து விளைவிக்கக்கூடியது" என்றார் திரு ஆஷர்.

சொன்னபடி செய்தோம். கார் புறப்பட்டது. இரண்டு நிமிடங்கள் ஓடின.

எதிரில், மிக உயர்ந்த இரும்புக் கதவுகள் அடைத்து நின்றன. எங்கள் காரைக் கண்டதும், கதவிற்கு வெளியே நின்று கொண்டிருந்த காவலர், கதவு ஒன்றைத் திறந்து எங்கள் காரை உள்ளே விட்டார். கார் மெல்ல ஓடிற்று.

சிங்கப்பண்ணை பல நூறு ஏக்கர் பரப்புள்ளது. பண்ணையைச் சுற்றி பெரிய மதிற்சுவர் உண்டு. அதற்கு மேல் இருப்பு முள் கம்பி வேலி போட்டிருக்கிறார்கள்.

படபடக்கும் நெஞ்சோடு உட்கார்ந்திருந்தேன். எல்லோர் கண்களும் சிங்கத்தைக் காண, நாலா பக்கங்களிலும் சுழன்றன.

"*அப்பா: அதோ பார்!*" என்ற குரல் கேட்டது. ஆஷரின் இளைய மகன் காட்டிய பக்கம் திரும்பிப் பார்த்தோம். கண்டோம். என்ன கண்டோம்?

பெரிய ஆண் சிங்கமொன்று, மரத்தடியில் பெருமிதத்தோடு உட்கார்ந்து கொண்டிருந்தது. எங்கள் காரையோ அதற்கு முன்னே சென்ற காரையோ கண்டு அது அஞ்சவில்லை. அலட்சியப்படுத்தி விட்டது, பொழுது போகாத பெரிய மனிதர்கள் என்று ஒதுக்கி விட்டது போல்!

இன்னும் சிறிது தூரம் நகர்ந்ததும், மூன்று பெண் சிங்கங்கள் ஒரு பக்கம் தரையில் படுத்துக் கிடந்தன. தூங்காமல் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தன. பிறகு, வேறு இரண்டொரு இடங்களில் இப்படியே சிங்கங்கள் இருக்கக் கண்டோம். மற்ருெரு சிங்கம் தாழ்ந்த மரக்கிளையின் மேல் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தது. இவை, உள்ளே சென்று தங்க, பண்ணைக்குள் கூண்டுகள் அமைத்துள்ளார்கள். இராக் காலங்களில் அவற்றில் அடைத்து விடுவார்களாம்.

இப்படி வேடிக்கைப் பார்த்துக் கொண்டு, காரில் நகரும் போது, முதலில் கண்ட ஆண் சிங்கம், எழுந்து, மெல்ல பெருநடை நடக்கக் கண்டோம்.

எங்கள் பக்கம் வந்து தொல்லை கொடுத்தால் என்ன செய்வதென்ற அச்சம் எழுந்தது. அதை வெளியிட்டேன்.

பண்ணைக்குள் சாலையோரம் நடப்பட்டிருந்த அறிவிப்புப் பலகையைக் காட்டினுர்.

"இப்பண்ணையிலுள்ள மிருகம் எதுவும் சாலையை மறைத்து நின்ருல், பதருதீர்கள். சன்னல் கதவைத் திறக்காதீர்கள். அதை விரட்ட முயலாதீர்கள். காரை நிறுத்திவிட்டு, முன் விளக்குகளைப் போடுங்கள். 'ஹார்னை' அடியுங்கள். காவல்காரர்கள் வந்து சிங்கத்தை ஓட்டும் வரையில் அப்படியே ஒலியெழுப்பிக் கொண்டு இருங்கள்' என்றது, அந்த அறிவிப்பு. நல்ல வேளை. எங்களுக்கு அப்படியொன்றும் நேரிடவில்லை. வெளியே வரும் வாயல் வழியாக பாதுகாப்பாக வெளியேறினேம்.

அது அடுத்து பண்ணைக்குள் இட்டுச் சென்றது.

"அதோ எவ்வளவு நீண்ட கழுத்து" என்ற ஆஷரின் மூத்த மகன் கூற அப்பக்கம் திரும்பினேம். ஒட்டைச்சிவிங்கிகள் சில போய்க் கொண்டிருந்தன. ஒவ்வொன்றையும் ஒரு பெண்மணி, ஓட்டிக் கொண்டு

போகக் கண்டோம். கூண்டுக்குள் அடைக்க ஓட்டிச் செல்வதாகத் தெரிந்து கொண்டோம். மற்ளுெரு பக்கம், சில குட்டியானைகள் கட்டப்பட்டிருந்தன.

வரிக்குதிரைகளும் அப் பண்ணையில் திரிந்து கொண்டிருந்தன. சிறுத்தைகள் சில கூண்டுகளில் இருந்தன.

“பலே! எதிரே பாருங்கள்”. எதிரே பார்த்தோம். முன்னே மூன்று கார்கள் சாலையில் நிற்கின்றன. இரண்டு கார்காரர்கள் சாளரத்தை மூடிவிட்டு வேடிக்கைப் பார்த்தார்கள். கார்களைச் சுற்றி பெரிய ‘சிம்பன்ஸி’ குரங்குகள். சில குரங்குகள் கார்களின் மேலே ஏறி உட்கார்ந்து கொண்டிருந்தன.

எல்லாவற்றிற்கும் முன்னே இருந்த காரில் காரோட்டி, சாளரத்தை அரை சென்டி மீட்டருக்கு இறக்கியிருந்தார். உள்ளேயிருந்தபடியே, பிஸ்கோத்தை ஒவ்வொன்ளுக வெளியே நீட்டினர். ஒரு பெரிய குரங்கு, உரிமையோடு, வலப்புற முன் சக்கர மூடியின் மேல் அமர்ந்து கொண்டு, செல்லமாக, ஒவ்வொரு பிஸ்கோத்தாக வாங்கி, சாப்பிட்டுக் கொண்டிருந்தது. மற்ளுெரு குரங்கு, அதோடு போட்டி போட அஞ்சியோ என்னவோ, ‘ரேடியேட்டர்’ மேல் உட்கார்ந்து ஏக்கத்தோடு பிஸ்கோத்து தானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது.

# 7

சிங்கவனத்தில், இயற்கைச் சூழ்நிலையில், சிங்கங்களைக் கண்ட பிறகு, புறவனத்தில் பிற காட்டு விலங்குகளையும் குரங்குகளையும் பார்த்து விட்டு, வெளியே வந்தோம்.

'டால்பின்' சர்க்கஸைப் பார்க்க விரும்பினார்கள், இரு பையன்களும். நாங்களும் அதற்கு உடன் பட்டோம். திரு ஆஷர் குடும்பமும் நாங்களும் டால்பின் சர்க்கஸிற்குள் நுழைந்தோம். 'டால்பின்' என்பது ஒருவகை கடற்பிராணி. சிறிய திமிங்கலம் போன்றது. அதைப் பயிற்றுவிக்க இயலும். பயிற்றுவிக்கப்பட்ட 'டால்பின்'களைக் கொண்டு விளையாட்டுகள் காட்டுகிறார்கள். எங்களுக்கான கட்டணத்தையும் பேராசிரியர் ஆஷரே கொடுத்து விட்டார்.

டால்பின்ஸ் சர்க்கஸ் வட்டமான கட்டடத்திற்குள் நடந்தது. அக்கட்டடத்தின் நடுவில், பெரிய நீர்த் தொட்டி. அது நிறைந்திருந்தது. அதைச் சுற்றி பார்வையாளர்கள் அமர்ந்து வேடிக்கை பார்க்க, காலரிகள் அமைத்திருந்தார்கள்.

நூற்றுக்கணக்கானவர்கள் உள்ளே இருந்தும், படியிருக்கைகள் பாதியே நிறைந்திருந்தன. அது அன்றைக்குக் கடைசிக் காட்சியாம்.

குறிப்பிட்ட நேரத்தில் ஒரு இளம் பெண் வந்து நின்றாள். விசில் அடித்தது. சர்க்கஸ் தொடங்கிற்று. இரு 'டால்பின்கள்' நீர் விளையாட்டுகள் காட்டின.

நீரிலிருந்து எகிறிக் குதித்து இரும்பு வளையத்திற்குள் புகுந்து, பாய்ந்து போய் நீரில் வீழ்தல் ஒரு விளையாட்டு. இவ்விளையாட்டில் இரண்டிற்கும் போட்டி.

அடுத்த விளையாட்டு என்ன? இரண்டும், நீர்த் தொட்டியின் இரு கோடிகளிலே மிதந்து நின்று, இரப்பர் பந்து ஆடின. சர்க்கஸ் பெண்மணி, பந்தை உயர எறிவார். அது நீரில் விழும். விழவிடுவதில்லை டால்பின். விழும் இடத்திற்குத் தாவிச் சென்று, பந்தை தன் மூக்கால் தள்ளும், ஒரு டால்பின். அடுத்த கோடியிலுள்ள டால்பின் முன்னேறி வந்து அப்பந்தை மூக்கால் உதைத்துத் தள்ளும். பந்தாட்டமும் வளையத்தில் நுழைதலும் கவர்ச்சிகரமாக இருந்தன. அவை நீரில் விழும் அதிர்ச்சியில், தொட்டி நீர் எழும்பி அருகிலிருந்த பார்வையாளர்கள் மேல் விழும். அம் முழுக்கை சிறுவர் சிறுமியர் பெரிதும் வரவேற்று, ஆரவாரஞ் செய்தனர்.

டால்பின் சர்க்கஸைப் பார்த்து விட்டு, வெளியே வந்தோம். எதிரில் பெட்டிக் கடை தென்பட்டது. ஐஸ்கிரீம் விளம்பரம், திரு ஆஷரின் மகன்களைக் கவர்ந்தது. "அப்பா! ஐஸ்கிரீம்" என்று தந்தையைக் கேட்டனர். அவர்களை அழைத்துக் கொண்டு பெட்டிக் கடைக்குச் சென்றார்.

பெட்டிக் கடை பலகை மேல், அட்டை டப்பாக்களில் ஐஸ்கிரீம் இருந்தது. இரு டப்பாக்களுக்குரிய காசைக் கொடுத்தார் திரு ஆஷர்.

பெட்டிக் கடை பெண்மணி,

"இனி விற்பனை இல்லை. மணியாகிவிட்டது" என்று கூறிவிட்டு, காசை வாங்கிக் கொள்ளாமலே மறுத்து விட்டார்! கண்டிப்பான பெண்மணி.

இதைப் பார்த்த எங்களை வருத்தம் கௌவிக் கொண்டது. குழந்தைகள் முகமோ சுண்டவில்லை.

"அப்பா! வீட்டுக்குப் போய் ஐஸ்கிரீம் சாப்பிடலாம்" என்று சொல்லியவண்ணம், காருக்குத் திரும்பினார்கள்.

எல்லோரும் கார் ஏறி, எடின்பரோவை நோக்கி விரைந்தோம். திருமதி ஆஷருக்கு கார் ஓட்டும் பழக்கம் இல்லை. எனவே திரு ஆஷரே மீண்டும் சாரதியாக இருந்தார்.

வழிநெடுகிலும் சிறுவர்கள், கேள்வி மேல் கேள்வி போட்டு, தாயாருக்கு வேலை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அம்மாவும் சளைக்காமல் பதில் கூறிக் கொண்டே வந்ததை எங்களால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

இரண்டாம் மகனைச் சுட்டிக்காட்டி, "இவன் இக்கால சாக்ரடீஸாக உயர்ந்தால், வியப்பில்லை' என்று நான் பாராட்டினேன்.

"சாக்ரடீஸ் என்றால் என்ன?" என்று மடக்கினான் அப்பையன்.

பழைய கால அறிஞர் என்று விளக்கம் கிடைத்தது.

நஞ்சுண்ட பகுதியைக் கூறாமல் விட்டது நல்லதாயிற்று.

பேச்சின் சுவையில், நேரம் போனது தெரிய வில்லை. எடின்பரோ நகருக்குள் வந்த பிறகே அதை உணர்ந்தோம்.

“டாக்டர் உங்கள் விடுதிக்குச் சென்று, அங்கே இரவு உணவு உண்ண நேரம் தவறிவிட்டது. எங்கள் வீட்டிற்கு வந்து உண்ணலாம். வீட்டில் உணவை ஆயத்தஞ் செய்ய சிறிது காலதாமதம் ஆகும். பசி வேளை தவறி உண்பது நல்லதல்ல. எனவே, வழியில் உள்ள, இந்திய உணவுச்சாலைக்கு அழைத்துச் செல்லு கிறேன். அங்கே எல்லோரும் உண்போம். பிறகு எங்கள் வீட்டிற்கு வந்து, சிறிது நேரம் பேசிவிட்டுப் போகலாம்” என்றார்.

‘அது நல்ல யோசனை’ என்று திருமதி ஆஷர் வழி மொழிந்தார். நாங்களும் சரியென்று ஒப்புக் கொண்டோம்.

எடின்பரோவில், இந்திய உணவு பரிமாறும் உணவுச்சாலைகள் மூன்று நான்கு இருப்பதாகக் கேள்விப்பட்டோம். அதில் ஒன்று, ஆஷர் வீட்டிற்குப் போகும் வழியில் இருந்தது. அவ்வுணவுச்சாலைக்குச் சென்றோம்.

அது வட இந்தியரால் நடத்தப்படுகிறது. ஸ்காட்லாண்டுக்காரர்களும் சிலர் பணியாளர்களாக இருக்கிறார்கள்.

உணவுப் பட்டியலைக் கண்டோம். சோறு, சப்பாத்தி, பருப்பு, “சப்ஜி” அதாவது காய்கறிப் பதார்த்தம், இறைச்சி பதார்த்தம் ஆகியவை கிடைக்கு மென்று தெரிந்தது. ‘ரசம்’ கூடக் கிடைக்குமென்று பட்டியல் காட்டிற்று.

நம்மூர் உணவுப் பண்டங்களை உண்டுவிட்டு, உடம்பிற்கு ஒத்துவராமல் போனால், வந்த இடத்தில் சங்கடப்பட நேருமே என்று அஞ்சினோம்.

எனவே, சப்பாத்தியும் கத்திரிக்காய் சப்ஜியும், வெண்டைக்காய் கறியும் மட்டும் கேட்டு வாங்கி உண்டோம். எல்லாம் சுவையாக இருந்தன.

பையன்கள் இருவரும் எங்களோடு மேசையில் அமர்ந்து உண்டார்கள். திரு ஆஷர் பெரிய பையனைப் பார்த்துக் கொண்டார். திருமதி ஆஷர் கடைக்குட்டி யைக் கவனித்துக் கொண்டார். இருவருமே ஒழுங்காக நடந்து கொண்டார்கள். வெளியே, ஓட்டல்களில், பெரியவர்களோடு உட்கார்ந்து, தொல்லை கொடுக் காமல், உண்பது, அவர்களுக்குப் பழக்கமாகி விட்ட தாகத் தோன்றிற்று. அதைக் கண்டு மகிழ்ந்தோம்.

மறுமுறை திரு ஆஷர் எங்களை வெளியூர்களுக்கு அழைத்துக் கொண்டு போனபோது, இவர்களைவிட வயதில் குறைந்த குழந்தைகளைக்கூட, ஓட்டலில் பெற்றோர்களோடு இருந்து, உண்ணப் பழக்கி விடு வதைக் கண்டு வியந்தோம். மூன்று நான்கு வயதுக் குழந்தைகளைக்கூட, தங்களோடு இட்டுக் கொண்டு, வார முடிவு நாட்களில், வெளியூர்களுக்குச் சுற்றுலா சென்று விடுவது, மேனாடுகளில், இக்காலத்தில் சாதாரணம்.

மேனாடுகளில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில், தாங்கள் குடியிருக்கும் ஊரிலேயே முடங்கிக் கிடப் போர் எண்ணிக்கை ஆண்டிற்கு ஆண்டு குறைந்து கொண்டே வருகிறது, நாடோடி உணர்ச்சி இளைஞர் களை மட்டும் ஆட்டிப் படைக்கவில்லை. எல்லா வயதினரும் சுற்றுலா உணர்ச்சியால் உந்தப்படு கிறார்கள். வாரத்திற்கு இரு நாட்கள், அன்றாட வேலை பற்றிய எரிச்சல்களை அடியோடு மறந்துவிட்டு, புதுச் சூழலில் புத்துணர்ச்சியோடு வாழ்வது, மேனாட் டாரின் இக்கால வாழ்க்கை முறை.

வார விடுமுறைகளில் சுற்றுலா போவது போதா தென்று, ஆண்டிற்கு ஒரு முறை நீண்ட பயணத்தை

மேற்கொள்வது அவர்களுடைய நோக்கம். நாம், திருமணச் செலவிற்கு, திருவிழாச் செலவிற்கு திட்ட மிட்டு சேமிப்பதைப்போல், அவர்கள் நீண்ட சுற்றுலா விற்காக ஆண்டு முழுவதும் திட்டமிட்டு சேமிப் பார்கள்.

அலுவலகங்களிலும் தொழிற்சாலைகளிலும் வேலை செய்வோருக்கு, வேலைக்கால அளவையொட்டி, சம்பளத்தோடு கூடிய விடுமுறை உண்டு. அந்த விடுமுறை இங்கும் - நம் நாட்டிலும் உண்டு. இங்கு, அந்த விடுமுறையை சில ஆண்டுகள் வரை சேமித்து வைக்கலாம். பிறகு, சில நாட்கள் விடுமுறை எடுத்துக் கொண்டு, பெரும்பகுதியை விட்டுக் கொடுத்து பணமாக்கிக் கொள்ளலாம். விடுமுறையும் எடுக்காமல் அதைப் பணமாகவும் மாற்றிக் கொள் ளாமல் போகும் ஏமாளிகள் சிலர் இங்கே உள்ளனர். ஆனால் பெரும்பாலோர், பணம் பண்ணத் தெரிந்த வர்கள்.

பிரிட்டனில், விடுமுறையைப் பணமாக்கிக் கொள்ள முடியாது. ஆண்டுக்கொரு முறை விடுமுறை எடுத்துக் கொள்வது கட்டாயம். வெளியூருக்குப் போகமுடியாத சூழ்நிலையில் உள்ளவர்கள்கூட, அந்தந்த ஆண்டில் குறிப்பிட்ட காலத்திற்கு, அலுவல் தொழில் ஆகியவற்றிலிருந்து, விடுமுறை பெற்றுக் கொண்டு, வீட்டோடு நிற்க வேண்டும்.

இயந்திரத்திற்கு ஓய்வு கொடுக்காவிட்டால், அது காலத்திற்கு முன்பு தேய்ந்து விடும். மனிதனும் ஒருவகை இயந்திரமே. அப்போதைக்கப்போது, ஓய்வு கொடுக்காவிட்டால் நாமும் விரைந்து தேய்ந்து, ஒடிந்து போவோம். ஆகவே ஆண்டுக்கு ஆண்டு விடுமுறை எடுப்பதை வற்புறுத்துகிறார்கள்.

விடுமுறைக் கட்டாயம், சுற்றுலா உணர்ச்சியின் உந்தல் ஆகியவை, பல இலட்சக்கணக்கானவர்களைப்

பயணிகளாக்கி விட்டன. விரைவு வாகனங்கள், அனைத்தும் இதற்குப் பயன்படுகின்றன. மோட்டார் சைகிள் கார், பேருந்து ஆகியவை போதவில்லை. எனவே, 'ஓடும் வீடு'களைக் கண்டு பிடித்துப் பயன் படுத்துகிறார்கள்.

'ஓடும் வீடு' என்பதென்ன? அடுப்பு, மேசை, குழாய், படுக்கை ஆகிய வீட்டு வசதிகளைக் கொண்ட பெட்டி வண்டிக்கே, 'ஓடும் வீடு' என்று பெயர். அதற்கு இரப்பர் சக்கரங்கள் இருக்கும். அதை ஆங்கிலத்தில் 'கேரவன்' என்பார்கள். அது தானியங்கி அல்ல. ஓடும் காரின் அல்லது சாமான் வண்டியின் பின்னால் இந்த பெட்டி வீட்டை இணைத்து விடு வார்கள். காரைப் பிடித்துக் கொண்டு அது போகும் இடத்திற்குப் போய்ச் சேரும். பெரிய குடும்பமோ அல்லது உடன்வரும் நண்பர்களோ நிறைய உடைய வர்கள் அத்தகைய 'ஓடும் வீடு'களை வாடகைக்கு வாங்கி கோத்துக் கொண்டு வெளியூர் செல்வார்கள். அவற்றை விற்பதற்கும் வாடகைக்குத் தருவதற்கும் பல நிறுவனங்கள் உள்ளன.

# 8

ஓடும் வீடுகளை விற்பதற்கும் வாடகைக்குக் கொடுப்பதற்கும் பல நிறுவனங்கள் உள்ளன என்று கேள்விப்பட்டதும்,

'ஓடும் வீட்டின் விலை எவ்வளவு இருக்கும்?' என்று திரு ஆஷரைக் கேட்டோம்.

"கேரவனின் விலை இருபதாயிரத்திலிருந்து இருபத்தைந்தாயிரம் வரை இருக்கும்" என்பது பதில்.

"காரின் விலை எவ்வளவோ?" அடுத்த கேள்வி.

அதுவும் அதே அளவில் இருக்குமென்று தெரிந்து கொண்டோம்.

"அறிவிப்பைப் பாருங்கள்", என்று சாலையோரம் நடப்பட்டிருந்த அறிவிப்புப் பலகையைக் காட்டினார். திருமதி ஆஷர்.

'கேரவன்சைட்' என்றது அறிவிப்புப் பலகை.

அப்படியென்றால் என்ன?

நம்முடைய தொன்மையான நகரங்களில் 'வண்டிப் பேட்டை' என்ற பெயரில் ஓர் பகுதியிருப்

பதை அறிவோம். வெளியூர்களிலிருந்து வரும் வண்டிகள் அப்பேட்டைக்கே வந்து தங்கும். அதைப் போல் மேனுடுகளில், பல நகரங்களில் புதிய வண்டிப் பேட்டைகள், அதாவது 'ஓடும் வீடுகள்' வந்து தங்கும் நிலையங்கள் உள்ளன.

அந்நிலையங்கள், நகராட்சிக்குச் சொந்தமாக இருக்கலாம்; அல்லது தனிப்பட்ட நிறுவனங் களுக்கோ நபர்களுக்கோ உரியனவாக இருக்கலாம். பெரும்பாலும் மாலையிலோ அல்லது இரவிலோ அத்தகைய நிலையத்திற்கு வந்து தங்கி, இராப்பொழுது ஓய்வெடுத்துக் கொள்வார்கள். அடுத்த நாள் பயணத் தைத் தொடர்வார்கள். வந்து தங்கியுள்ள ஊர், அழகிய இயற்கைக் காட்சிகளுக்கோ, நீந்தலுக்கோ, மீன் பிடித்தலுக்கோ, விளையாட்டுகளுக்கோ, வேறு வகை சுற்றுலாக்களுக்கோ பெயர்போன இடமாக இருந்தால், அங்கேயே சில நாட்கள் தங்கிவிட்டுப் போவதும் உண்டு.

கேரவன் பேட்டையில் தங்குவதற்குக் கட்டணம் வாங்கிக் கொள்வார்கள். தங்க இடம் கொடுப்பதோடு, பேட்டையில் குடிநீர் குழாய்கள் அமைத்திருப்பார்கள் மின்னுற்றல் பெற ஏற்பாடு செய்துள்ளார்கள். வண்டி வந்து தங்கியதும், மின் முனையோடு பொருத்து வதற்கு ஏற்பாடுகள் உண்டு. எனவே நிலைய மின்னுற்றலைக் கொண்டு சமைக்க முடியும். 'ஆவி' அடுப்பைப் பொருத்தியுள்ள கேரவனுக்கு 'ஆவி' விற்கும் ஏற்பாடும் கேரவன் பேட்டைகளில் உண்டு.

நகர நெருக்கடிகளுக்குப் புறம்பே, நச்சுக் காற்று குறைந்த இயற்கைச் சூழலில், சுற்றுலாக்காரர்கள் தங்குவதற்கு இத்தகைய கேரவன் பேட்டைகள் உதவு கின்றன. இதனுல் ஓட்டல் வாடகையும் மிச்சம்.

ஊருக்கு வெளியே, பெட்டி வீடுகளில் இப்படித் தங்குவது ஆபத்தானதல்லவா? இந்த ஐயம் நமக்கு எழும்.

பாதுகாப்பான ஓட்டல் கட்டடங்களிலேயே அறையில் வைத்த பொருள் சிலவேளை காணமற் போய்விடும், அற்புதங்களை நாம் அறிவோம். அத் தகைய அற்புதங்கள் மேனாடுகளில் நிகழ்வதில்லை.

ஒரோவேளை வழிப்பறிகளும் வங்கிக் கொள்ளை களும் நிகழ்வதுண்டு. அன்றாடக் களவாணிகளுக்கு அஞ்சி அஞ்சி ஒதுங்கும் நிலை பிரிட்டனில் இல்லை.

நானும் டாக்டர் மு. வ. வும் ஓர் நாள் காலை அஞ்சல் நிலையத்திற்குச்செல்ல நேரிட்டது. வேடிக்கை பார்த்துக் கொண்டே நடந்தோம். தெருவிலோ நட மாட்டம் அதிகம். மூடிக்கிடந்த ஓர் வீட்டின் வெளி வாயிற்படியில் பால் புட்டிகளைக் கண்டோம். காலி புட்டிகள் அல்ல. பால் நிறைந்த புட்டிகளே.

இன்னொரு வீட்டின் வெளி வாயில்படியில், காய் கறிகள் ரொட்டி ஆகியவை ஓர் 'பிளாஸ்டி'க் கூடை யில் இருக்கக் கண்டோம்.

நிறைய நடமாட்டம் உள்ள தெருவில் வீட்டுக் காரர் பார்க்காத நேரத்தில், மூடிக்கிடக்கும் வீட்டுக்கு வெளியே, வைக்கப்பட்ட உணவுப் பொருள்கள் மற்ற வர்களால் தொடப்படாமல், பத்திரமாக இருப்ப தைக் கண்டோம். வியந்தோம்.

'நீங்கள், இத்தகைய காட்சியை முதன்முறை இங்கிலாந்திற்கு வந்தபோதே, கண்டு, அதைக் குறித்து எழுதியிருப்பதாக நினைவு. அப்படித்தானே?' என்று நண்பர் டாக்டர் மு. வ. என்னைக் கேட்டார்.

ஆம். உண்மை. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தோராம் ஆண்டு நானும் என் மனைவியும்

பிரிட்டனில் நான்கு திங்கள் சுற்றுப் பயணம் செய்தோம்.

இலண்டனில் திரு மாத்ருபூதம் என்ற தமிழர் வீட்டில், பல வாரங்கள், பணம் கொடுத்துச் சாப்பிடும் விருந்தாளியாக இருந்தோம். அப்போது, அன்றாடம் இந்த அற்புதத்தைக் கண்டு மகிழ்ந்ததுண்டு.

பண்டங்களை வீட்டிற்குக் கொண்டு வந்து கொடுப்போர், வீட்டுக்காரர்கள் யாரையாவது கூப்பிட்டு அவர்கள் கையெழுத்தை வாங்கிக் கொண்டு கொடுக்கும் பழக்கமே பிரிட்டனில் கிடையாது. அது இயலவும் இயலாது.

அதிகாலையில் வந்தால், வீட்டுக்காரர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பார்கள். எவரையாவது எழுப்புவது தொந்தரவாயிருக்கும்.

காலை ஏழரை அல்லது எட்டு மணியாகி விட்டால் பல வீடுகளில் ஆண் பெண் அனைவருமே, படிப்பிற்கோ, தொழிலுக்கோ, அலுவலகத்திற்கோ, போய் விடுவார்கள்.

பத்துமணிப் பள்ளி, பத்தரை மணி அலுவல் என்பது சோம்பல் மிகுந்த நம் நாட்டு முறை.

கொட்டும் பனியிலும் எட்டு எட்டரை மணிக்கே கல்விக்கூடங்களும் தொழிற்கூடங்களும் அலுவலகங்களும், தொடங்கிவிடுவது, பிறநாட்டு முறை.

இச்சூழ்நிலையால், பண்டங்களை அந்தந்த வீட்டிலே, நம்பி வைத்துவிட்டுவர மட்டுமே முடியும். நேரில் கொடுத்து விட்டு வர முடியாது. வெளியே கிடக்கும் பொருட்களை இப்படி அப்படி போவோர் எடுத்துக் கொண்டு போய்விட மாட்டார்கள்.

குழந்தைகள்கூட, குறும்புக்காக, அவற்றை அப்பால் எறிவதும், பாழாக்கி வடுவதும் கிடையாது.

செக்கச் சிவந்த மணம் வீசும் ஆப்பில் பழங்கள், வீட்டிற்கு வெளியே வைக்கப்பட்டிருக்கும். அவற்றிலே ஒன்றை எடுக்கக்கூட, அந்நாட்டுக் குழந்தைகள், முயல்வதில்லை. அப்படி வளர்ந்து வந்துள்ளது அச் சமுதாயம். அப்படி வளர்க்கப்படுகிறார்கள், அந்நாட்டு இளைய தலைமுறையினர்கள்.

இதைப் போலவே, தெரு மூலைகளில் நாளிதழ்களையும் வார வெளியீடுகளையும் கொண்டு வந்து போட்டு விட்டு, அருகில் அட்டைப் பெட்டியையோ; தகர டப்பாவையோ வைத்து விட்டுப் போவார்கள். இதழையோ, வெளியீட்டையோ எடுத்துக் கொண்டு அதற்குரிய காசை டப்பாவில் போட்டு விட்டுச் செல்வதே அந்நாட்டு முறை. ஆள் இருந்து, விற்று, காசு வாங்கிக் கணக்குச் சொல்ல வேண்டியது இல்லை.

இத்தகைய நாணய நடைமுறை சாதாரண காலங்களிலேயே போற்றுதற்குரியதாகும்.

நாங்கள் முதன்முறை இங்கிலாந்து சென்றிருந்த காலமோ, உலகப் போரின் நலிவிலிருந்து விடுபடாத காலம். எங்கும் எதிலும் பற்றாக் குறைக் காலம். மிகக் கடுமையான பங்கீட்டுக் காலம். பங்கீட்டு அளவும் மிகக் குறைவு. அப்போது, ஆளுக்கு வாரத்திற்கு இரண்டு முட்டைகளே பங்கீட்டில் கொடுத்தார்கள் என்றாலே எவ்வளவு பற்றாக் குறை வாழ்வு என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.

அப்படிப்பட்ட நெருக்கமான காலத்தில் கூட, உணவுப் பண்டங்களுக்கு ஆலாய்ப் பறக்கும் நிலையில் கூட, வீட்டிற்கு வெளியே கிடக்கும் உணவுப் பொருள்கள் களவாடப்படாமல் இருந்ததைப் போற்றாமல் இருக்க முடியுமா?

சுவையான, இந்த அனுபவத்தைக்கூறி முடிக்கும் வேளை அஞ்சல் நிலையத்தை அடைந்து விட்டோம். உள்ளே நுழைந்தோம். அஞ்சல் அட்டைகள் வாங்கி,

இலண்டனில் உள்ள அன்பர்களுக்கு எழுதவே அங்கு சென்றோம்.

அஞ்சல் நிலையம் பெரியதல்ல. நான்கு சாளரங்கள். ஒவ்வொன்றிற்கும் உள்ளே, ஒருவர் அலுவல் பார்த்துக் கொண்டிருந்தார்.

'அஞ்சல் அட்டைகள்' என்ற அறிவிப்பு இருந்த சாளரத்தை நெருங்கினோம். முன்னே மூவர் வரிசையாக நின்று இருந்தனர். முதலில் நிற்பவருக்கு அஞ்சல் அட்டைகளையும் அஞ்சல் உறைகளையும் கொடுப்பதற்காக எண்ணிக் கொண்டிருந்தார். அவர் நிறையக் கேட்டிருப்பார் போலும்!

நாங்களும் வரிசையில் நின்றோம். அஞ்சல் அட்டை விற்கும் சாளரத்திற்கு அடுத்த சாளரத்தில், 'சமுதாயப் பாதுகாப்பு' (Social Security) என்ற அறிவிப்பு இருந்தது. அங்கேயும் அலுவலர் ஒருவர் உள்ளே இருந்தார்.

அந்த சாளரத்திற்கு வெளியே யாரும் காத்துக் கொண்டிருக்கவில்லை.

அஞ்சல் அட்டை விற்கும் இடத்தில் ஐந்து பேர் காத்திருப்பதை, 'சமுதாயப் பாதுகாப்பு' அலுவலர் கவனித்தார். கடைசியாக நின்றிருந்த எங்கள் இருவரையும் தன் சாளரத்தண்டை வரும்படி சாடை காட்டினார்.

இந்நாட்டு 'சமுதாயப் பாதுகாப்பு'ப் பெற நாம் இங்கே வரவில்லையே என்று எங்களுக்குள் சொல்லிக் கொண்டோம். ஆயினும் அலுவலர் காட்டிய சாடைப்படி அடுத்த சன்னலுக்குச் சென்றோம்.

'அஞ்சல் அட்டையா, உறையா எது வேண்டும்? எவ்வளவு வேண்டும்?' என்று அலுவலர் கேட்டார்.

எங்கள் பதிலைக் கேட்டதும், நாங்கள் கையில் வைத்திருந்த நோட்டுகளை வாங்கிக் கொண்டு, அடுத்தவரிடம் போனார். அங்கிருந்த உறைகளில், நாங்கள் கேட்ட எண்ணிக்கையை எடுத்துக் கொண்டார். நோட்டுகளை அடுத்தவருக்கு முன்னர் வைத்துவிட்டு, எங்களுக்குச் சேர வேண்டிய சில்லரைக் காசுகளை மேசையின் மேலிருந்து எடுத்துக் கொண்டார். எங்கள் சாரளத்திற்கு வந்து, உறைகளையும் சில்லரைகளையும் தனித்தனியே கொடுத்து விட்டு,

'நன்றி' என்று புன்முறுவலோடு கூறினார்.

என்ன! மெய்யா என்று மலைக்காதீர்கள்.

கதை சொல்லத் தெரியாது எனக்கு.

எங்களை வரிசையில் காக்க வைத்து, நேரத்தைப் பாழாக்காமல், உடனுக்குடன் எங்கள் தேவையை நிறைவேற்ற முன்வந்த அலுவலர் - வாடிக்கைக் காரர்களில் நலத்தை மட்டுமே கருத்திற் கொண்டு, அடுத்தவர் வேலையை, அவர் வேண்டிக் கொள்ளாத போதும், மேலே வீழ்ந்து, உதவியதோடு நிற்காமல், எங்களுக்கு 'நன்றி'யும் கூறி அனுப்பினார். நாங்கள் சொல்ல வேண்டிய நன்றியை அவர் முதலில் சொல்லி விட்டார். அதைக் கேட்டப் பரவசத்தில் பதில் சொல்லாமலேயே, பின்னடைந்தோம்.

அன்னிய நாட்டவரிடம் நல்லபெயர் எடுப்பதற் காக இப்படிச் செய்கிறார்களா? தங்கள் நாட்டவர் காத்து நிற்கும்போது, வேலையில்லாமல் நிற்கும் அடுத்தவர் உதவிக்கு வருவாரா என்று ஐயப்பாடு எழுந்தது.

அதையும் தீர்த்துக் கொள்ள முடிவு செய்தோம். ஒருபக்கமாகச் சென்று, மூலையில் நின்றபடி கவனித் தோம். சில வினாடிகளில் விளக்கம் கிடைத்தது.

சேமிப்பு வங்கிச் சாளரத்திற்கு, ஒரே சமயம், ஐந்தாறு பேர்கள் மடமடவென்று வந்து வரிசையில் நின்ருர்கள். அவர்கள் அனைவரும் வெள்ளைக்காரர்கள். உரிய அலுவலர் விரைந்து பணிபுரிந்தார்.

சும்மா இருந்த அடுத்தவர். சேமிப்புக்காரருக்கு உதவியாகக் கை கொடுக்க முனைந்தார். சிலருடைய, 'பாரங்க'ளை ஒவ்வொன்ருக வாங்கிக் கொண்டார். அதிற் குறிப்பிட்டுள்ள தொகையும், அவர்கள் கொடுத்த பணமும் சரியாக இருக்கிறதாவென்று பார்த்து வைத்துக் கொண்டு, சரியாக இருக்கிறது' என்று சொல்லி வாடிக்கைக்காரர்களை உடனுக்குடன் அனுப்ப உதவி செய்தார்.

ஒருவர்கூட சேமிப்பு வங்கியில் கட்டிய பணத்திற்கு இரசீது வாங்கிக் கொண்டு போகவில்லை. கையை வீசிக் கொண்டு போய்விட்டார்கள்.

# 9

'அது அவர் வேலை; அப்பளுவை அவரே சமாளிக்கட்டும். எனக்கென்ன வந்தது?' என்னும் தன்னலப் போக்கை மேற்கொள்ளாமல், அஞ்சலக ஊழியர்கள், பொதுநலக் கண்ணோட்டத்தோடு, ஒருவருக்கொருவர் கைகொடுப்பதால், பொதுமக்களுக்கு ஆற்ற வேண்டிய தொண்டினை விரைவாக ஆற்ற முடிகிறது என்பதை உணர்ந்து வியப்பிலே ஆழ்ந்திருந்தோம். வங்கியில் கட்டும் பணத்திற்கு இரசீது கொடுப்பதில்லை; கேட்பதுமில்லை என்பதைக் கண்டதில் மேலும் வியப்பில் ஆழ்ந்தோம்.

என் நினைவு, இருபத்திரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு ஏற்பட்ட பட்டறிவிற்குத் தாவிற்று.

நான் முதன்முறை பிரிட்டனுக்குச் சென்றபோது, நான்கு திங்கள் அந்நாட்டில் பயணஞ் செய்ய நேர்ந்தது. தமிழக அரசின் செலவிலேயே அப்போது சென்றேன். என் சம்பளத்தை திங்கள் தோறும் பிரிட்டனில் கொடுக்க ஏற்பாடு செய்தது, அரசு. பயணச் செலவுக்கான பணத்தையும் பதினைந்து

நாட்களுக்கொரு முறை இலண்டனில் கொடுத்தார்கள்.

பணத்தை வங்கியில் போட்டு வைத்து, வேண்டும் போது அதிலிருந்து பெறுவதே சிறந்தது என்று தெரிந்தவர்கள் கூறியதால், இலண்டனில் வங்கியொன்றில் கணக்கு வைத்திருந்தேன். ஒரு முறை, என் கையிலிருந்த ரொக்கப் பணத்தை வங்கியில் போடுவதற்காக அங்கு சென்றேன். உரிய படிவத்தை பூர்த்தி செய்து, அதையும் பணத்தையும் வங்கி அலுவலரிடம் கொடுத்தேன். அவர் இரண்டையும் வாங்கி, சரி பார்த்துவிட்டு,

"எல்லாம் சரியாக இருக்கிறது" என்று கூறினார்.

அதைக் கேட்ட பிறகும் அங்கிருந்து நகராமல், பின்னால் இருப்பவர்களின் அலுவலுக்கு இடையூறாக நின்றேன்.

அலுவலர், முகங் கோணாமல், மீண்டும்

"எல்லாம் சரியாக இருக்கிறது" என்று மட்டுமே கூறினார்.

"இரசீது?" என்று நான் கேட்டேன்.

அலுவலர் அப்போதும் முகத்தைச் சுளிக்கவில்லை.

"இரசீது கொடுக்கிற பழக்கம் எங்கள் வங்கிகளில் கிடையாது.

"நீங்கள் படிவத்தில் குறிப்பிட்ட தொகையும் என் கையில் கொடுத்த பணமும் சரியாக உள்ளன.

இப்பணம், தவறாமல், உங்கள் கணக்கில் வரவு வைக்கப்படும். நீங்கள் காத்திருக்க வேண்டாம்" என்று பதிலுரைத்தார்.

அசடு வழியும் முகத்தோடு, அவநம்பிக்கை சுரக்கும் உள்ளத்தோடு வீட்டிற்குத் திரும்பினேன். திரு மாத்ருபூதத்திடம் நடந்ததைக் கூறினேன்.

அவர் கொல்லெனச் சிரித்தார்.

'இந்நாட்டு வங்கிகள், கட்டும் பணத்திற்கு இரசீது கொடுப்பதே இல்லை. ஆயினும், யாருடைய கணக்கிலும் வரவு விட்டுப்போனதாகவோ, குறைவாக வரவு வைத்திருப்பதாகவோ, புகார் கிளம்பியதே இல்லை. பொறுப்பும் நாணயமும் பிரிட்டன் நாட்டு லேவாதேவியின் அடிப்படை. உங்கள் பணத்தில் ஒரு காசும் குறையாமல் உரிய காலத்தில் கணக்குக் கொடுப்பார்கள்.'' என்று தேற்றினர், மாத்ருபூதம்.

ஆயினும் அவநம்பிக்கை அடியோடு கிள்ளி எறியப்படவில்லை. நான்கு மாதப் பயணத்தில், இந்தியர்களைக் கண்டு, அளவளாவிய ஒவ்வொரு போதும்,

'இரசீது கொடுக்காமல் வாங்கிக் கொண்ட பணம், கணக்கில் முழுதாகவும் பத்திரமாகவும் இருக்குமா', வென்று கேட்கத் தவறவில்லை. எல்லோரும் மாத்ருபூதம் கூறியதையே உறுதிப்படுத்தினர்கள்.

பிரிட்டனில், அநேகமாக, ஒவ்வொருவருக்கும் வங்கிக் கணக்கு இருக்கும். அலுவலர்களோ, ஆசிரியர்களோ, எளிய தொழிலாளிகளோ, சம்பளத்தை ரொக்கமாக வாங்கிக் கொள்வதில்லை. எனவே பட்டுவாடா செய்பவரோ, கல்விக்கூடத் தலைவரோ, முதலாளியோ, கையூட்டு கேட்டார் என்னும் புகாருக்கு இடமில்லை.

ஒவ்வொருவருக்கும் சேரவேண்டிய சம்பளத் தொகையைக் குறிப்பிட்டு, அத்தொகையை சம்பளம் கொடுக்கும் நிறுவனத்தின் கணக்கில் பற்று எழுதிக் கொண்டு, அந்த நபரின் வங்கிக் கணக்கில் வரவு வைத்து விடுங்கள் என்று அலுவலகங்களிலிருந்தும், கல்விக்கூடங்களில் இருந்தும், தொழிற்கூடங்களில் இருந்தும், ஆணை செல்லும். வங்கிகள் அப்படியே நடவடிக்கை எடுக்கும்.

தனி நபர், தேவைப்படும்போதெல்லாம், சில்லரைப் பணத்தை வங்கியிலிருந்து வாங்கி வைத்துக் கொண்டு செலவு செய்வார்.

மாதப் பால்கணக்கிற்கோ, மளிகைக்கடை கணக்கிற்கோ, வாடகைக்கோ, பிற செலவுகளுக்கோ செலுத்த வேண்டிய பணத்தை, பணமாக எடுத்துக் கொடுக்காமல் 'செக்'காகக் — காசோலையாகக் கொடுப்பார்.

கையிலே அதிக பணப் புழக்கம் இல்லாததால் என்ன இலாபம்?

கையிலே பணமாக இருந்து செலவு செய்வதை விட, வங்கிக்கு காசோலை கொடுத்து செலவு செய்யும் போது, தன்னையறியாமலேயே சிக்கன உணர்ச்சி புகுந்துவிடும். எனவே மாதா மாதம் சிறுசிறு தொகை மிச்சமாகி ஆண்டுக் கடைசியில் கணிசமான கையிருப்பு சேர்ந்து விடும்.

கோடிக்கணக்கான மக்கள் தலைக்குதலை, மாதச் செலவு முழுவதையும் மாத முதலில் வாங்கி வீட்டில் வைத்துக் கொண்டால், நாட்டில் பணப் புழக்கம் குறைந்துவிடும். மாருக எல்லாச் சம்பளமும் வங்கிகளுக்குப் போய், வாரா வாரம் ஓரளவு மட்டும் வெளியே வந்தால், பண ஓட்டம் தடைப்படாது. உடலில் உள்ள இரத்தம் இரண்டொரு இடங்களில் கட்டுமானுல், அது உயிருக்கு ஆபத்து. கோடிக்கணக்கான இடங்களில் பணம் கட்டிப்போவது நாட்டின் பொருளாதார உயிருக்குத் தீங்கு. எனவே எல்லோரும் வங்கியின் மூலம் வாங்கல் கொடுக்கல் வைத்துக் கொள்வது பொருளாதார நலத்திற்கு உதவும். இதை அறிந்திருக்கிருர்கள் பரிட்டிஷ் மக்கள்.

சென்றமுறை, நான்கு திங்கள் பிரிட்டனில் இருந்து விட்டு கப்பல் மூலம் தாய்நாடு திரும்பினேம். சென்னைக்கு வந்ததும், இலண்டனிலிருந்து வந்து காத்

துக் கிடந்த அஞ்சல் உறையைப் பிரித்துப் பார்த்தேன். என்ன கண்டேன்?

கணக்கைக் கண்டேன். இலண்டன் 'இலாயிட்ஸ் வங்கி' கிளையொன்றில் நான் வைத்திருந்த வரவு செலவு கணக்கை விவரமாக அனுப்பியிருந்தார்கள். அக் கணக்கை முடித்து, நிலுவைப் பணத்தை சென்னைக் கிளைக்கு மாற்றியிருந்தார்கள். நான் வைத்திருந்த தனிக் குறிப்போடு ஒப்பிட்டுப் பார்த்தேன். கட்டிய பணம் அத்தனையும் சரியாக வரவு வைக்கப்பட்டிருந்தது. பற்றுப் பணத்திலும் எவ்வித தவறும் இல்லை, பாராட்டுக்குரியதல்லவா? அந்த நாட்டில் அது அன்றாட மூச்சு, குறிப்பிடத்தக்கவொன்றல்ல.

மேலும் இரு கடிதங்கள் இலண்டனிலிருந்து வந்திருந்தன. அவை என்ன? நண்பர்களின் அன்புக் கடிதங்களல்ல.

ஒன்று இலண்டன் மாநகராட்சி அலுவலக முத்திரையோடு இருந்தது.

"என்ன! வரியைக் கட்டாமல் வந்து விட்டோமென்று அறிவிப்பு வந்துள்ளதோ!" என்று அஞ்சியபடி அக்கடிதத்தைப் படித்தேன்.

அக்கடிதம் அறிவிப்புதான். என்ன அறிவிப்பு? வரி கேட்கும் அறிவிப்பல்ல. கட்டிய வரியில் ஒரு பகுதியைத் திருப்பியனுப்பிய அறிவிப்பு அது.

யானை வாய்ப்பட்ட கரும்பில் ஒரு பகுதியை திரும்பப் பெற்று விட்டேன் என்றால் நம்புவீர்களா? நம்பமாட்டீர்கள். 'பித்தன்' என்பீர்கள்.

இலண்டன் மாநகராட்சியின் அறிவிப்புக் கடிதத்தைப் படித்து முடித்தபோது, என் கண்களை நம்ப முடியவில்லை.

'நீங்கள் இலண்டனில் வாங்கிப் பதிவு செய்த, ஆஸ்டின் காருக்காக மோட்டார் வரி கட்டியிருக்

கிறீர்கள். நீங்கள் இந்தியாவிற்குத் திரும்பும்போது அக்காரை, இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்துவிட்டீர்கள். இங்கே இருந்த காலத்திற்கான மோட்டார் வரியை மட்டும் இலண்டன் மாநகராட்சி எடுத்துக் கொண்டது. பாக்கியை உங்கள் வங்கிக் கணக்கில் வரவு வைத்துக் கொள்ளும்படி உங்கள் வங்கிக்கு எழுதிவிட்டோம். நீங்கள் விரைவில் அதைப் பெறுவீர்களென்று நம்புகிறேன்' என்று அக்கடிதம் அறிவித்தது.

மகிழ்ச்சியோடு இலண்டனிலிருந்து வந்த மற்றொரு கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்.

பலே! அதுவும் பணம் திரும்பி வருவதைக் கூறும் கடிதம். அது என்ன கூறிற்று?

"உங்களுக்கு ஆஸ்டின் காரை நாங்கள் விற்ற போது, தவறுதலாக, பத்து பவுண்டு கூடுதலாக வாங்கி விட்டோம். அதிக பணம் வாங்கிவிட்டதை எங்கள் 'ஆடிட்டர்'கள் சுட்டிக் காட்டினார்கள். தவறுக்காக வருந்துகிறோம். கூடுதலாக வாங்கிய பத்து பவுண்டை, உங்கள் கணக்கில் வரவு வைத்துக் கொள்ளும்படி உங்கள் வங்கிக்கு எழுதிவிட்டோம். அப்பணத்தை எங்கள் கணக்கில் பற்று வைத்துவிட்டு எவ்வித கழிவுமின்றி உங்கள் கணக்கிற்கு வரவு வைத்து விடுவார்கள். தவறுக்கு வருந்துகிறோம்."

இப்படி அறிவித்தது இலண்டனில் ஆஸ்டின் காரை விற்ற கம்பெனியின் கடிதம்.

இலண்டன் மாநகராட்சி திருப்பிக் கொடுத்த வரியில் பகுதிப் பணமும், கார் வணிகர் திருப்பிக் கொடுத்த பணமும், காசும் குறையாமல், என் கணக்கில் வரவு வைத்துவிட்டதாக, சென்னை லாயிட்ஸ் வங்கியின் மையநிலையத்திடமிருந்து அறிவிப்பு வந்து காத்துக் கிடந்தது, என் வீட்டில்,

5

இலண்டனிலிருந்து இந்தியாவிற்குப் புறப்படும் நாளைக்கு முன்னாலே, காரை, வணிகரிடம் ஒப்படைத்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யச் சொன்னேன். அப்படியே செய்தார்கள். அது மட்டுமா?

மாநகராட்சியிடமிருந்து திருப்பிப் பெற வேண்டிய வரிப்பணத்தின் பகுதியைப் பெற்று எனக்கு அனுப்பி வைக்கவும் ஏற்பாடு செய்துவிட்டார்கள். நான் இந்தியா வந்து சேர பதினைந்து நாட்களாயிற்று. அதற்குள் திருப்பிக் கொடுக்க வேண்டிய தொகையும் சென்னைக்கு வந்து சேர்ந்து விட்டது.

இலண்டனில் நாள்தோறும் பல நூற்றுக் கணக்கான கார்கள் வெளிநாட்டாரால் பதிவு செய்யப் படுகிறது சிறிது காலம் பயன்படுத்திவிட்டு, வெளி நாட்டார் தங்கள் தங்கள் தாய்நாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் கார்களின் எண்ணிக்கையும் நூற்றுக்கணக் கில் இருக்கும். நாள் தவறாமல் நூற்றுக்கணக்கான கார்களின் வரிப் பணத்தில் ஒரு பகுதியைத் திருப்பிக் கொடுக்கும் பொறுப்பில் உள்ளது, இலண்டன் நகராட்சி. யாரும் வந்து பார்க்காமலேயே, அதற்குரிய மனுவைப் பார்த்ததுமே, திறமையான இயந்திரம் போல் இயங்கி, கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்துவிடுகிறார்கள். நாம் அசதியாக இருந்தாலும் நம் பணம் போய்விடாது என்னும் நம்பிக்கை ஆணி வேரிலிருந்தே, சிறிய பிரிட்டனின் உலகளாவிய பெரிய வாணிகம் தழைத்துள்ளது என்பதை உணர்ந்தேன்.

காலதாமதமின்றி, யார் யாருக்கு எது எது போய்ச் சேர வேண்டுமோ அதை அதை அப்போதைக் கப்போது அனுப்பிவிடும் வழக்கத்தில் ஊறிப்போயி ருப்பதால்தான், சின்னஞ்சிறு பிரிட்டன், உலகத்தின் நூற்றுக்கணக்கான நாடுகளோடு, ஏதோ ஒருவகை

வணிகத் தொடர்பை வைத்துக் கொண்டு நலத்தோடு வாழ முடிகிறது.

நாம் இருக்கும் நாடு நமது. நாம் பார்க்கும் வேலை, நம் மக்களுக்காக; அன்னியருக்காக அல்ல. நாம் விரைந்து அலுவல் பார்த்தால் நன்மையடையப் போவது, சீனனல்ல; சிங்களவனல்ல. நம்முடன் பிறந்து, நம்முடன் வாழும், நமக்காக உளைச் சேற்றிலே உழலும், வெய்யிலிலே காய்ந்து அறுத்துக் குவிக்கும் நம் இன மக்களே நன்மையடையப் போகிறார்கள். எனவே, நம் அலுவலகங்களிலே, ‘அவர் வேலை’ ‘இவர் வேலை’ ‘என் வேலை’ என்று தாமரை இலைத் தண்ணீராக இருப்பது மாறி, ‘நம் வேலை’ என்னும் கூட்டு முயற்சிக்காற்று வருமானால், நமக்கு வளர்ச்சியுண்டு.

இருபத்து இரண்டு ஆண்டுகளாக அப்புதிய காற்றுக்கு ஏங்கிக் கிடக்கிறேன்.

# 10

நம் முன்னோர்கள், மனதை குரங்கிற்கு ஒப்பிட்டு அழைப்பார்கள். அது எவ்வளவு உண்மை பாருங்கள்; என் மனக் குரங்கு, எடின்பரோ அஞ்சல்நிலையமொன்றி லிருந்து கொண்டே, எவ்வளவு தூரத்திற்குத் தாவி விட்டது பார்த்தீர்களா! காலத்தால் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தோராம் ஆண்டிற்குத் தாவியது இடத்தால், இலண்டனுக்கும் சென்னைக்கும் தாவி, உங்களை அலைக்கழித்தது. இப்போது, மீண்டும், உங்களை எடின்பரோ அஞ்சல் நிலையமொன்றிற்கு அழைத்துப் போகிறேன். ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்யாமலேயே, அங்குள்ள நிலையைக் காட்டுகிறேன்.

நீண்ட வரலாற்று ஓட்டத்தில், அரசுகளின் இயல்புகளும் மாறி விட்டன. ஆதியில், பாதுகாப்பிற் காகவே ஏற்பட்டன அரசுகள். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள், குடிமக்களை அடித்து உதைத்து துன்புறுத்தாதபடி காக்கவும், ஒருவர் பொருளை ஒருவர் கவர்ந்து கொள்ளாதபடி சட்ட திட்டங்கள் வகுத்து அவற்றை ஒழுங்காகச் செயல்படுத்தவும்,

வெளிநாட்டுப் படையெடுப்புகளிலிருந்து உள்நாட்டு மக்களைக் காக்கவும் ஆங்காங்கே இராச்சியங்களும் அவற்றை ஆளும் அரசுகளும் உருவாகின.

பேசத் தெரியாமல் அழுது கொண்டே பிறந்த குழந்தைகள் பையப்பைய மழலை மொழியைக் கற்றுக் கொள்வதையும் பிறகு பேருரை ஆற்றும் அளவிற்கு வளர்ந்து விடுவதையும் கண்டிருக்கிறோம். அதைப் போலவே காவலுக்கு மட்டும் தோன்றிய அரசுகள் அதோடு நிற்கவில்லை. பழைய காவல் கடமையோடு அரசுகளின் அலுவல்கள் நின்றுவிட்ட நிலையை இன்றைய உலகில் எங்கும் காண முடியாது.

உற்பத்தி உடமைகளையெல்லாம் அரசுடமை யாக்கிவிட்ட அரசுகள் ஒரு கோடியில். அவ்வளவு தூரத்திற்குப் போகாத அரசுகள்கூட, பலப்பல பொதுநலப் பொறுப்புகளை மேற்கொண்டிருக்கின்றன. சமுதாய நல்வாழ்வைக் கருத்திற் கொண்டு, தங்கள் கால்களில் முழுதும் நிற்க முடியாமல், சமுதாயத்தில் தனியுதவி தேவைப்படுவோர்களுக்காக, பல நலத் திட்டங்களை அரசே முன்னின்று நடத்துவது இக் காலப் போக்கு.

பிரிட்டனும் இப்போது நல அரசு (Welfare State) ஆக இயங்குகிறது. நலத் திட்டங்களில் பலவற்றை மைய அரசே நேரடியாக நடத்துவதற்குப் பதில், உள்ளாட்சித்துறைகளின் மூலம் நடத்துவது அந்நாட்டு முறை.

தனித்தனி உள்ளாட்சிகளால் பலவகையான நலத் திட்டங்கள் நடத்தப்பட்டாலும், பெரும்பாலும் அவை, நாடு முழுவதற்கும் ஒரு சீராகவே இருக்கும். அத்தகைய பொதுநலத் திட்டங்கள் சிலவற்றைக் கவனிப்போம்.

'பாலோ! பால்!'

தாய்ப் பாலைத் தவிர பிற பாலைக் கண்டறியா தவர் எண்ணற்றவர் நம் நாட்டில். அப்படிப்பட்ட நிலை, பிரிட்டனிலும் இருந்தது, ஒரு காலத்தில். இப்போது முற்றிலும் மாறிவிட்டது.

பால், இன்றியமையாத உணவு. எல்லா வயதின ருக்கும் தேவையான உணவு. குறிப்பாக வளரும் குழந்தைகளுக்கு மிகத் தேவையானது.

முதலாளித்துவப் பொருளியலைப் பின்பற்றுகிற பிரிட்டனில், குழந்தைகளுக்குப் போதிய அளவு பால் வாங்கிக் கொடுக்க முடியாதவர்கள் ஏராளமானவர்கள் இருந்தார்கள். இன்றும் இருக்கிறார்கள். அவர் களுடைய குழந்தைகள் உடல் வளத்தோடு வளர மாட்டார்கள். மூளையிலும் 'சூடபுத்தி' இராது.

'அதற்கு நாம் என்ன செய்ய முடியும்? அது அது அவர்கள் வந்த வழி. விதியோடு போராட வேண்டாம்' என்று பிரிட்டிஷ் ஆட்சி சும்மா இருக்கவில்லை.

குறிப்பிட்ட மாத வருவாய்க்குக் குறைந்த சம்பளம் பெறும் குடும்பங்களிலுள்ள, பள்ளிக்கூட வயது அடையாத எல்லாக் குழந்தைகளுக்கும் இலவச பால் வழங்கும் ஏற்பாடு நாடு முழுதும் உள்ளது. அது மட்டுமா? அத்தகைய குடும்பங்களில் கருவுற்றிருக்கிற தாய்மார்களுக்கும் குறிப்பிட்ட காலம் வரை இலவசப் பால் வழங்குவார்கள்.

ஏழைக்கு மட்டுமே இலவசப் பால். மற்றவர் களுக்கு இல்லையே! என்று குறைபட வேண்டாம்.

குடும்பத்தின் மாத வருவாய் அதிகமாக இருப் பினும், பள்ளிக்கூட வயதடையாத குழந்தைகள் இருவர் இருந்து, மூன்றாம் குழந்தையை கருவுற்றி ருக்கும் தாய்க்கு இலவசப்பால் உண்டு.

நிறைய வருவாய் உள்ள குடும்பங்களில்கூட, பிள்ளைகள் நிறைய இருந்தால், முதல் இரண்டு

குழந்தைகள் நீங்கலாக, மற்ற குழந்தைகளுக்கு அரசே இலவசப்பாலுக்கு ஏற்பாடு செய்கிறது.

பள்ளிக்கூடம் போக முடியாத ஊனக் குழந்தைகளுக்கும் பதினாறு வயது முடியும் வரை இலவசமாக பால் வழங்குவார்கள்.

பால் மட்டுமா கிடைக்கிறது?

கருவுற்ற அல்லது பாலூட்டும் நிலையில் உள்ள தாய்மார்களுக்கு, வருவாய்க் குறைவின் அடிப்படையில், ஏ. பி. ஸி. வைட்டமின் மாத்திரைகளையும் காசின்றிக் கொடுக்கிறார்கள்.

மருத்துவத் தொழில் இங்கிலாந்தில் தேசியமயமாக்கப்பட்டு விட்டது. எனவே ஏழைகள் மருத்துவம் பார்த்துக் கொள்ள காசிற்கு அலைய வேண்டாம். பதினைந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளைச் சோதித்து மருந்து எழுதிக் கொடுக்கவும், அறுபத்து ஐந்து வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு அத்தகைய உதவி செய்யவும் கட்டணம் கிடையாது.

பல் மருத்துவமும் பல் கட்டும் உதவி, இன்னின்னாருக்கு இலவசம் என்று தெளிவாக விதிமுறைகள் வகுத்துள்ளார்கள்.

அதேபோல், யார் யாருக்கு கட்டணம் இன்றி மூக்குக் கண்ணாடி கொடுப்பதென்றும் ஏற்பாடு செய்திருக்கிறார்களாம்.

தமிழ்நாட்டு தொடக்கப்பள்ளிகளில் இலவச பகல் உணவுத் திட்டம் நடப்பதும் அன்றாடம் பதினெட்டு இலட்சம் குழந்தைகள் உண்பதும் நாமறிந்ததே. பிரிட்டனிலும் பள்ளிக்கூடத்திலேயே பகல் உணவு கொடுக்கிறார்கள். எல்லா பிள்ளைகளுக்கும் வேண்டுமானாலும் உணவு பள்ளிக்கூடத்திலேயே கிடைக்கும். ஆனால் எல்லோருக்கும் இலவசமல்ல.

வருமானத்தையும் குடும்பத்தின் அளவையும் அடிப்படையாகக் கொண்டு பலருக்கு இலவச உணவு கொடுக்கிறார்கள். வருவாய்க் குறைவைப் பொறுத்து, ஒரே குடும்பத்திலிருந்து ஆறு குழந்தைகள் வரைகூட இலவச உணவு பெறலாம். மற்றவர்களிடம் ஓரளவு சாப்பாட்டுக் கட்டணம் வாங்கிக் கொள்கிறார்கள். அப்படி வசூலிக்கும் கட்டணம், சாப்பாட்டுச் செலவில் பாதிக்குமேல் இராது. ஆகவே எல்லாருக்குமே, ஓரளவு அரசின் செலவில் சாப்பாடு போடுகிறார்கள்.

இத்தனைச் சலுகைகளைப்பற்றி கேள்விப்பட்ட போது என் சிந்தனை சீருடையின் மேல் தாவிற்று. அந்நாட்டுக் குழந்தைகளுக்கு, உடைக் கொடை தேவைப்படுகிறதா? அதற்கு ஏற்பாடு உண்டா என்ற கேள்விகளைக் கேட்டேன்.

பிரிட்டனிலும் உடைக் கொடையை எதிர் பார்ப்பவர்கள் உண்டு. குறைந்த வருவாயுடைய வீட்டுக் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூட உடை வாங்கி கொடுக்கும் பொறுப்பை உள்ளாட்சி மன்றங்கள் ஏற்று கொண்டுள்ளன. ஆண்டுக்கு ஆண்டு நன்கொடை திரட்டத் தேவையில்லை.

பல வயதான பென்ஸனர்களுடைய ஓய்வு காலப் பணம், வாழ்க்கைச் செலவுக்குப் போதாததாக இருக்கலாம். விலைவாசி உயர்ந்து, பென்ஸன் பணத்தின் மதிப்புக் குறைந்துவிடுவது, அவர்கள் செய்த தீங்கல்லவே. எனவே அவர்களும் போதிய பாதுகாப்பிற்கு உரியவர்கள் என்பதை பிரிட்டன் உணர்ந்திருக்கிறது. அத்தகைய குறைந்த வருவாயுடைய பென்ஸனர் தனியாளாக இருந்தால் இவ்வளவு ‘கூடுதல் பணம்’. கணவன் மனைவி ஆகிய இருவராக இருந்தால் இவ்வளவு ‘கூடுதல் பணம்’, சம்பாதிக்காத குழந்தைகள் குட்டிகள் உடையவராக இருந்தால் இத்தனை ‘கூடுதல்

பணம்' என்று திட்டவட்டமாக ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

தொட்டிலிலே தொடங்கும் உதவி, கல்லறை வரை பலவகையாக பலருக்குத் தொடர்கிறது. எண்ணற்ற பொறுப்புகளை ஏன் தூக்கிப் போட்டுக் கொள்ள வேண்டும், அரசு?

ஓர் நாட்டின் மெய்யான செல்வம் அந்நாட்டின் மக்கட் செல்வமே. குழந்தை நன்றாக இருந்தால் மட்டுமே குமரன் நன்றாக இருப்பான். குமரன் நன்றாக இருப்பதே, குடிமகன் நன்றாக இருப்பதற்கு முன்னேற்பாடு.

இலட்சக்கணக்கான தனி நபர்களின் நலிவே ஒட்டு மொத்தமாகச் சேர்ந்து, நாட்டை நலியச் செய்து விடும்.

அன்று உழைத்தவனுக்கு-இன்றைய பென்ஸனருக்கு-கூடுதல் பணம் கொடுப்பது ஈகையால் அல்ல. நாளைய பென்ஸனருக்கு இன்றைய அலுவலில் நாணயமாக நடந்து கொள்ள உறுதிப்பாடு.

# 11

தொட்டிலில் தொடங்கும் உதவி, கல்லறை வரை, பல உருவங்களில் நீடிப்பதை, எடின்பரோ அஞ்சல் நிலையத்திலிருந்தபடியே காட்டினேன்.

இப்போது பிரிட்டிஷ் மக்கள் சிலரை உங்களுக்குக் காட்டுகிறேன்.

'காமன்வெல்த்' நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்கள் சேர்ந்து ஓர் கழகம் அமைத்துள்ளன. அக் கழகத்தின் சார்பில், ஐந்தாண்டிற்கு ஓர் முறை, பொது மாநாடு நடக்கும். உயர்கல்வி மட்டத்தில் பல்வேறு நாடுகளில், நடந்து வரும் புதிய முயற்சிகள், சோதனைகள், ஆங்காங்கே ஏற்படும் சிக்கல்கள் ஆகியவற்றைப் பற்றி நேரில் அறிந்து கொள்ள, ஓர் அரிய வாய்ப்பாக அமைகிறது, அப்பொது மாநாடு. அம் மாநாடு, ஒரே நகரத்தில் நடப்பதில்லை. இம்முறை, எடின்பரோ நகரில் நடந்தது. இவ்வாண்டு ஆகஸ்டு பதினேராம் நாள் தொடங்கி, ஒரு வார காலம் நடந்தது. அதிற் கலந்து கொள்ள, இருபத்தைந்து இந்தியப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் சென்றிருந்தோம். அதில் நானும் ஒருவன்.

எடின்பரோ விமான நிலையத்தில் இறங்கி, பயணி கள் கூடத்திற்கு வந்தபோது, எங்களுக்கு சிவிக் கென்று போய்விட்டது. மாநாட்டை நடத்துவோர் சார்பில் யாரும் விமான நிலையத்தில் தென்படவில்லை. 'அம்போ'வென்று விட்டுவிட்டார்களே, என்ற ஏமாற் றத்தோடு, எங்கள் பெட்டிகளை எடுத்துக்கொண்டு, வெளியே வந்தோம்.

விமான நிலையத்திலிருந்து எடின்பரோ நகருக்குள் செல்வதற்கு, பேருந்து வண்டிகள் வரிசையாக நின்று கொண்டிருந்தன. மற்றொரு பக்கம் 'வாடகைக்கார்' கள் நின்று கொண்டிருந்தன. சாரலாகச் செல்லும் சிற்றெறும்பின் ஒழுங்கோடு, ஆனால் விரைவாக, பயணிகள், விருப்பப்படி பேருந்து அல்லது வாடகை கார்களில் ஏறிக் கொண்டார்கள்.

நாங்கள் பேருந்து வண்டியில் ஏறச் சென்றோம். அருகில் நின்று கொண்டிருந்த நல்ல உடை உடுத்தி யிருந்த ஒருவர், எங்களை நெருங்கினர். எங்கள் பெட்டிகளை வாங்கி, பேருந்து வண்டியில் ஏற்றினர். ஏற்றிய பிறகு, எங்களை வண்டியில் ஏறிக்கொள்ளச் சொன்னர். அப்படியே ஏறிக் கொண்டதும், எங்க ளிடம் வந்து, 'நகரில் எங்கே செல்ல வேண்டும்' என்று கேட்டார்.

"நாங்கள் நகருக்குப் புதியவர்கள். பல்கலைக் கழக மாநாட்டிற்காக வந்துள்ளோம் எடின்பரோ பல்கலைக்கழகத்தின் மாணவர் இல்லங்களுக்குச் செல்ல வேண்டும். அதற்கு எங்கே இறங்க வேண்டு மென்று சொல்லுங்கள்". இது எங்கள் பதில்.

"அப்படியா! இப்பேருந்து வண்டியில், பேருந்து மைய நிலையம் வரை வந்து, அங்கிருந்து வேறு வாட கைக் கார்களில் செல்லுங்கள். அங்கே, நான் உங்க ளுக்கு உதவுகிறேன்", என்று பதிலும் உறுதியும் அளித்தார்.

எங்களிடம் கட்டணத்தைக் கேட்டு வாங்கிக் கொண்டார்.

மேலும் சிலர் அவ்வண்டியில் ஏறினர்கள். சில நிமிடங்கள் பறந்தன.

பேருந்து வண்டியின் கதவை மூடிவிட்டு, அந்த ஆள் முன்னே சென்ருர்.

'வண்டியோட்டியைக் காணுேமே! எப்போது புறப்படுமோ' என்று எங்களுக்குள் பேசிக் கொண் டோம்.

அப்போதே புறப்பட்டது அவ்வண்டி. வண்டி யோட்டி இல்லாமலா புறப்பட்டது? அது எப்படி முடியும்?

பெட்டிகளை ஏற்றிய அவரே, கட்டணங்களை தண்டல் செய்த நபரே, பேருந்து ஓட்டியாகவும் பணி புரிந்தார். ஒருவரே பல பணிகளையும் ஏற்று நிறை வேற்றுவதால், வாழ்க்கைக்குப் போதிய சம்பளம் கொடுக்க முடிகிறது, அந்நாடுகளில்.

நம் நாட்டைப்போல், 'ஓட்டி' ஒருவரும், 'நடத்து வோர்' ஒருவரும் ஆக இரு ஆட்கள் தேவைப்பட்டால் இரண்டு ஆட்களுக்கும் குறைச் சம்பளமே கொடுக்க இயலும் என்ற எண்ணம் பளிச்சிட்டது.

'மக்கட் பெருக்கம் மிகுந்த நம் நாட்டில், ஓர் ஆள் வேலைக்கு ஈராள்-சிலவேளை நான்கு ஆட்கள்- அமர்த்துவதால் முழுச் சம்பளம் யாருக்கும் கொடுக்க முடியவில்லை. இப்போதைய நிலையில் எல்லோருக்கும் வேலை என்ருல் அரையாள் காலாள் சம்பளமே கொடுக்க இயலும். வேலையில்லாத் திண்டாட்டம் மிகுந்திருந்தாலும், ஓராள் வேலைக்கு இரண்டு ஆட்களை அமர்த்துவதிலலை என்ற புதுநெறி உருவானுல் மட்டுமே வேலைத்திறன் உயரும். சம்பள உயர்வும் கட்டுப்படியாகும்' என்று உடன் பயணஞ் செய்த மற்ருெரு துணைவேந்தர் கருத்துரைத்தார்.

பேருந்து வண்டி, ஹார்ன் ஒலி எழுப்பாமலேயே, நெரிசல் மிக்க தெருக்களின் வழியே ஓடி மைய நிலையத்தை விரைவில் அடைந்தது. மூடிக்கிடந்த கதவு திறந்தது.

ஒருவர்பின் ஒருவராக இறங்கினேம். ஓட்டி. தன் இடத்திலிருந்து இறங்கி வந்து, பெட்டிகளை எடுத்துக் கொடுத்தார். எங்கள் முறை வந்ததும்,

"பல்கலைக்கழக வண்டிகள் உங்களுக்காக வந்து காத்திருக்கின்றனவாவென்று பார்க்கிறேன். அவ் வண்டி இராவிட்டால், வாடகைக் காரை அழைத்து அதில் அனுப்புகிறேன். இரண்டு நிமிடங்கள் பொறுங்கள்" என்ருர்.

அடுத்த நிமிடம். யாரோ ஒருவர் எங்களை நெருங்கி,

'பல்கலைக்கழக மாநாட்டிற்கு வந்தவர்களா நீங்கள்?' என்று வினவினுர்.

'ஆம்' எனருேம்.

'ஒரே நிமிடம். இங்கே வண்டியைக் கொண்டு வந்து விடுகிறேன். எங்கும் செல்லாமல், பெட்டிகளோடு இங்கேயே இருங்கள்' என்று கூறிக் கொண்டே சிட்டெனப் பறந்தார்.

நொடியில் சிறிய பேருந்து வண்டியொன்று வந்து நின்றது. 'எடின்பரோ பல்கலைக்கழகம்' என்று அதன் முகப்பில் எழுதப்பட்டிருந்தது.

சில நிமிடங்களுக்கு முன் எங்களைக் கண்டு விசாரித்தவர், கதவைத் திறந்தார். அதற்குள் 'ஓட்டி' இறங்கி வந்து, பெட்டிகளையெல்லாம் உள்ளே ஏற்றினுர்.

கதவைத் திறந்தவர், தன் கையிலிருந்த பட்டியல் படி, வர வேண்டியவர்கள் எல்லோரும் வந்து விட்டார்களா என்பதைச் சரி பார்த்தார்.

எல்லோரும் வந்தடைந்து விட்டோம் என்று தெரிந்து கொண்டு எங்களை அவ்வண்டியில் இட்டுக் கொண்டு போனார். அவர் பல்கலைக் கழக அலுவலர் களில் ஒருவர்.

இந்தியத் துணைவேந்தர்கள் அனைவரையும் ஒரே மாணவர் இல்லத்தில் இருக்கும்படி செய்யவில்லை. மாறாக, வெவ்வேறு இல்லங்களில் இடம் ஒதுக்கியிருந் தார்கள். ஒவ்வொருவரையும் உரிய இல்லத்தில் இறக்கி விட்டுப் போனார். அந்தந்த இல்லங்களில் இருந்த மாநாட்டுத் தொண்டர்கள், எங்களை கவனித்து உதவி செய்தார்கள்.

எனக்கு ஒதுக்கிய இல்லமும் டாக்டர் மு. வ. வுக்கு ஒதுக்கிய இல்லமும் அருகில் இருந்தன.

என் பெட்டிகளை என் அறையில் போட்டு விட்டு, கை கால்களைக் கழுவிக் கொண்டு, திரு. மு. வ. வின் அறைக்குச் சென்றேன். அவரும் ஆயத்தமாக இருந்தார்.

இருவரும் பல்கலைக்கழக மாணவ இல்லங்களின் வளைவுக்குள் சுற்றி, காற்று வாங்கத் திட்ட மிட்டோம். காலை பத்து மணி வெய்யில் இதமாகவே இருந்தது.

திட்டமிட்டபடி, இல்லத்தை விட்டு வெளி யேறும் வேளை, இரு பெண் தொண்டர்கள் விரைந்து வந்து வழி மறித்தார்கள்.

"உங்களுக்கு தாகமாயிருக்காதா?"

"பார், திறந்திருக்கிறது. சென்று, வேண்டிய பானங்களை பருகலாமே", என்றார்கள்.

மூஞ்சியிலடித்தபடி மறுப்பதற்குத் துணிவில்லை.

"நாம் குடிக்கக் கூடியது என்ன கிடைக்கப் போகிறது. இருந்தாலும் 'பார்' கூடத்திற்குள் சென்று விட்டு வரலாம்", என்று நாங்கள் ஒருவருக்

கொருவர், ஆண்மையூட்டிக் கொண்டு 'பார்' உள்ள கூடத்திற்குள் நுழைந்தோம்.

பெரிய, உயர்ந்த மேசை கண்ணைக் கவர்ந்தது. அம்மேசை நிறைய கொலு வீற்றிருந்தவை எவை? 'புட்டிகள்'

வகை வகையான மதுப் புட்டிகள், வெவ்வேறு அளவில், உருவில், நிறங்களில் காட்சியளித்தன.

"எத்தனை இன்பங்கள். நமக்கு எள்ளளவும் பயனில்லை". என்று முணுமுணுத்துக் கொண்டே, ஓரிடத்தில் அமர்ந்தோம்.

இரு பெண் தொண்டர்கள் எங்களை அணுகினார்கள்.

"காலை வணக்கம்"

"பீர் கொடுக்கட்டுமா?"

வேண்டாமென்று தலையை ஆட்டினோம்.

வாய்ப்பாடு ஒப்பிவிப்பது போல, பல மதுவகைகளைச் சொல்லி அவற்றில் எதைக் குடிக்க விரும்புகிறோம் என்று கேட்டார்கள்.

அப்பெயர்களெல்லாம் புதுமையாக இருந்தன. ஒன்றுக்கு ஒன்று என்ன வேற்றுமை என்பது புரியவில்லை.

அந்தக் குழப்பத்தில், அவர்களை மேற்கொண்டு பேசவிடாமல், முந்திரிக்கொட்டை போல், நானே "நாங்கள் இருவரும் எவ்வகை மதுவும் அருந்தாதவர்கள். ஆகவே மதுபானம் வேண்டாம்." "நாங்கள் குடிக்கக் கூடிய 'மெதுபானம்' ஏதாவது கிடைக்குமா?" என்றேன்.

"மெதுபானங்கள் பல உண்டு. ஆரஞ்சுச் சாறு, கிச்சிலிச் சாறு, அன்னாசிச் சாறு, எலுமிச்சச் சாறு ஆகியவை கிடைக்கும். உங்களுக்கு எது விருப்பம்?" என்று உபசரித்தார்கள் தொண்டர்கள்.

ஆரஞ்சுச் சாறு கேட்டோம்.

நொடியில் வந்தது. இரு பெரிய கண்ணாடிக் குவளைகள் நிறைய ஆரஞ்சுச் சாற்றைக் கொண்டு வந்து பரிமாறினார்கள்.

பொது இரயில் வண்டிகளிலோ, பேருந்து வண்டிகளிலோ பயணஞ் செய்யும் இந்தியர்கள், அருகிலிருப்பவர்களிடம் தாமே அறிமுகஞ் செய்து கொண்டு, அன்னியோன்யமான கேள்விகளைக்கூட கேட்டு, சங்கடப் படுத்தி விடுவது வியப்பல்ல. அப்படி மேலே வீழ்ந்து உரிமை கொண்டாடுவது, பிரிட்டிஷ் மக்களின் பழக்கமல்ல. இதைப் பற்றி படித்திருக்கிறேன். பலரிடமிருந்து கேள்விப்பட்டுமிருக்கிறேன். முன்னர் பிரிட்டனுக்குச் சென்றபோது, அதை நேரில் தெரிந்து கொள்ளவும் வாய்ப்புகள் கிடைத்தன.

புதியவர்களிடம் அத்தகைய 'உரிமை' கொண்டாடாத பிரிட்டானிய மக்கள், தங்கள் 'விருந்தாளிகளாக வந்துள்ளவர்களிடம் கலகலப்பாக பழகுவார்கள் என்பதை அந்த 'பாரி'ல் தெரிந்து கொண்டேன்.

எங்களுக்கு ஆரஞ்சுச் சாறுகளைப் பரிமாறின பெண்கள், பிஸ்கோத்துகளையும் சாக்லெட்களையும் ஓர் தட்டில் கொண்டு வந்து வைத்து விட்டு, மளமள வென்று பேச்சுக் கொடுக்கத் தொடங்கினார்கள்.

"உங்கள் பயணம் நலமாக இருந்ததா?" என்று தொடங்கிய கேள்வி,

"இந்தியாவிலிருந்து இங்கே வர எத்தனை மணி நேரம் பிடிக்கிறது?" என்று கிளைத்தது.

"உங்கள் ஏர் இந்தியாவின் ஜம்போ ஜெட் விமானத்தைப்பற்றி எல்லோரும் பிரமாதமாகச் சொல்லுகிறார்கள். அதிலேதான் வந்தீர்களா?" இது இன்னொரு கிளை.

"ஆம்" என்று நாங்கள் கூறியபோது,

“பலே” என்ன அருமையான வாய்ப்பு:

“நாங்களும் ஒருமுறை அவ்விமானத்தில் இந்தியாவிற்கு வந்து சுற்றிப் பார்க்க வேண்டும்” என்ற ஆசைத் துளிரை வெளிப்படுத்தினர்கள்.

“வாருங்கள்: இந்தியா உங்களே வரவேற்கும்” என்று நாங்கள் இருவருமே ஒரு குரலாய் பதில் அளித்தோம்.

“வருகிறோம். இந்தியாவின் எப்பகுதியிலிருந்து நீங்கள் வருகிறீர்கள்?” என்று கேட்டார்கள், அப்பெண்மணிகள்.

“மதராஸ்” என்று நான் சொன்னதும்,

“ஆ! மதராஸ்! அருமையான கறி! அதைச் சாப்பிடும் போது, என் கண்கள் நீரைச் சிந்தினலும், நாக்கு ருசி அதை அடிக்கடி அவாவுகிறது”, என்று இருவரும் ஒரே பதிலேக் கூறினர்கள்.

“மதராஸ் கறியை” எங்கே சாப்பிட்டு இருக்கிறீர்கள்!”

“இங்கே எடின்பரோவின் இரண்டு மூன்று ஓட்டல்களில் கிடைக்கிறது. நீங்களும் சென்று சாப்பிட்டுப் பாருங்கள்.”

# 12

காமன்வெல்த் பல்கலைக்கழகங்களின் மாநாட்டிற்கு யார் தலைமை வகித்தார்?

கழகத் தலைவராக இருந்த சர். சார்ல்ஸ் வில்சன் என்பவர் தலைமை வகித்தார். இவர் கிலாஸ்கோ பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர்.

தொடங்கி வைக்கும் மரபு உண்டா? உண்டு.

தொடங்கி வைத்தது யார்? பிரிட்டிஷ் கௌன்சில் என்றழைக்கப்படும் அமைப்பின் தலைவரான பாலண்ட்ரே பிரபு தொடங்கி வைத்தார்.

குறிப்பிட்ட நேரத்தில், சிறிது தாமதமுமின்றி, மாநாடு தொடங்கிற்று. தொடங்குவதற்கு ஒரு நிமிடம் முன்னதாக, எடின்பரோ பல்கலைக்கழகத் துணைவேந்தராகிய சர். மைக்கேல் சுவானும் மாநாட்டுத் தலைவரான வில்சனும் பாலண்ட்ரே பிரபுவும் மண்டபத்துள் நுழைந்தனர்.

அவர்கள் உள்ளே நுழையும்போது, இரண்டாம் பேருக்குத் தெரியாமல் வந்துவிடவில்லை. மண்டப

வாயிலிலிருந்து, படாடோபத்தோடு அழைத்து வரப் பட்டார்கள்.

எடின்பரோ பல்கலைக்கழக 'சார்ஜென்ட்' முன்னே வழி விலக்கிக் கொண்டு வர, எடின்பரோ பல்கலைக் கழகத் துணைவேந்தர் சர். சுவான் அடுத்து பெருநடை நடந்தார். அவருக்குப் பின்னால் மாநாட்டுத் தலைவர் சர். சார்ல்ஸ் வில்சன் புன்முறுவலோடு வந்தார். அவருக்கு அடுத்து பாலன்ட்ரே பிரபு வந்தார்.

'சார்ஜென்ட்' உள்ளே வந்து, மேடையை நெருங் கியதும், அணி வகுத்து வரும் மூவரின் பதவிகளையும் குறிப்பிட்டு, உரத்த குரலில் கட்டியம் கூறினார். அவையில் உட்கார்ந்திருந்த எங்களை, எழுந்து நின்று, மரியாதை செய்யும்படி சாடை காட்டி ஆணையிட்டார்.

சமதர்ம வாடை வீசும் இக்காலத்திலுமா, இவ்வளவு படாடோபம் என்று பலர் உள்ளுக்குள் முணு முணுத்தாலும், எல்லோரும் நொடியில் எழுந்து நின்றோம்.

மூவரும் மேடையில் அமர்ந்ததும், எங்களை அமரும்படி சாடை காட்டப்பட்டது. அப்படியே அமர்ந்து அமைதி காத்தோம்.

"அடேயப்பா! எத்தனை 'ஜபர்தஸ்து'? இப் பெரியவர்கள் எட்டி நின்று பார்க்கப்பட வேண்டிய வர்களா? பலரிடமும் கலகலப்பாகப் பழகக் கூடியவர் களா?" இப்படி அலைமோதியது என் எண்ணம்.

"எல்லோரும் ஓர் நிறை; எல்லோரும் ஓர் விலை" என்ற இலட்சியப் பாடல். என் ஊண் கலந்து உயிர் கலந்து போனதன் விளைவு, மேற்கூறிய சங்கடமான எண்ணங்கள்.

மாநாட்டு வரவேற்புரையை எடின்பரோ பல் கலைக்கழகத் துணைவேந்தர் நிகழ்த்தினார். எழில்மிகு எடின்பரோவின் சிறப்பினைச் சுட்டிக் காட்டினார்.

'பெருந்தொழில் நாகரிகத்தின் விளைவாக மனிதன் வாழும் இடத்தைச் சுற்றியுள்ள புறச் சூழ்நிலையில் நஞ்சுக் காற்று ஆண்டுக்கு ஆண்டு அதிகமாவதைச் சுட்டிக் காட்டி, இப்புதிய தொல்லையைப் பற்றி பல் கலைக்கழகங்கள் அக்கறை கொள்ள வேண்டும்; அதற்கு மாற்றுக்காண வேண்டும்' என்றார், தலைமை உரை ஆற்றிய வில்சன்.

பெட்ரோலியம், நிலக்கரி போன்ற எரிபொருள்கள், உலகம் உள்ளவரை போதிய அளவு கிடைக்குமென்று எதிர்பார்த்து ஏமாறக் கூடாது. அக்கருப் பொருட்களும் அளவைக்கு அடங்கியவை. அவை அரு பொருளாகப் போவதற்கு முன், மாற்று எரி பொருள்களை, விஞ்ஞானிகள் கண்டு பிடிக்க வேண்டும், என்று பாலன்ட்ரே பிரபு தொடக்க உரையில் கூறினார்.

ஆழ்ந்த கருத்துகளை மூவருமே தூவிய போதிலும், ஒருவரும் போர் அடிக்கவில்லை. காரணம்? ஒன்றல்ல. இரண்டு.

முதற் காரணம்? யாரும் பதினைந்து நிமிடங்களுக்கு மேல் பேசவில்லை. இரண்டாவது காரணம்? ஒவ்வொருவர் பேச்சிலும் நகைச்சுவை கலந்து இருந்தது. பத்துப் பன்னிரண்டு நிமிடப் பேச்சுக்குள், இரண்டு மூன்று முறை நகைச்சுவைகளைத் தெளித்தனர், ஒவ்வொருவரும். எனவே, ஆழ உழுதச் சாலில் விதைப்பது போல் இருந்தது, அவர்கள் பேச்சு. எளிதாக ஏற்றுக் கொண்டோம்.

பேச்சுக் கலையை தனியாகப் பேணி வளர்ப்பது மேனாட்டு முறை. யாரும் எப்போதும் எதைப்பற்றியும் பேசிவிடலாமென்று நினைப்பது இல்லை, அவர்கள்.

எந்தெந்த நேரங்களில் எதைச் சொல்லி அவையோரின் கவனத்தை தம் பக்கம் இழுக்கலாமென்று

அறிவுறுத்தும் பல நூல்கள் ஒவ்வொரு மேனாட்டு மொழியிலும் உண்டு. பொதுமக்கள் கூட அவற்றில் முக்கியமானவற்றைப் படித்திருப்பார்கள். ஆகவே, அவையோரை ஆத்திர மூட்டி அனுப்புவோர் எங்கோ ஒருவர்.

பெரும்பாலோர், கேட்டார் பிணிக்கும் தகைய ராய் கேளாரும் வேட்ப மொழிவதை பயிற்சியால் பெறுகிறார்கள்.

படாடோபப் பிரவேசத்தால் 'பெரியவர்கள்' மேல் எரிச்சல் கொண்டிருந்த எங்களுக்கு, சிரிக்க வைத்த அவர்களுடைய உரைகள், பன்னீர் தெளிப் பாக இருந்தன.

தொடக்க விழா முடிந்ததும், 'காப்பி இடை வேளை விட்டார்கள்.

மாநாட்டு மண்டபத்தைச் சுற்றியுள்ள தாழ் வாரங்களில் சில மேசைகளில், கோப்பைகள் வைக்கப் பட்டிருந்தன. இரண்டு மூன்று மேசைகளில், காப்பிக் கஷாயமும் தேனீரும் பாலும் தனித்தனி யாக குழாய்ப் பாத்திரங்களில் வைத்திருந்தார்கள். அடுத்து தட்டுகளில் பிஸ்கோத்துகள் சாக்லட்டுகள் நிரம்பி இருந்தன.

பானகப் பாத்திரங்களுக்கு அருகிலேயே தட்டு களில் சர்க்கரைக் கட்டிகள் இருந்தன. பழுப்பு சர்க்கரைக் கட்டிகளும் இருந்தன. வெள்ளை சர்க் கரைக்குப் பதில் பழுப்பு சர்க்கரையை விரும்புவோர் பலர் உண்டு என்பதை நாங்கள் கண்டோம்.

ஒவ்வொருவரும், தானே காலிக் கோப்பையை எடுத்துக் கொண்டு போய், வேண்டிய பானத்தைப் பிடித்துக் கொண்டு, நின்றபடியே அருந்தினோம். பானத்தைப் பருகியபடியே, இங்கும் அங்கும் சுற்றி,

பலரோடும் தாங்களும் அறிமுகஞ் செய்து கொண்டவர்கள் பலர்.

வில்சனும், பாலன்ட்ரே பிரபுவும் பெரிய புள்ளிகள். ஆயினும் அவர்கள் தனித்து விலகி நிற்கவில்லை. யாருடனும் பேசினால், 'முத்துச் சிந்தி விடும்' என்று கருதி, பேசா மடந்தைகளாக இல்லை. ஒவ்வொரு இடைவேளையிலும் எல்லோரோடும் கலந்து உறவாடினார்கள். கலகலப்பாகச் சிரித்துப் பேசி, உற்சாகப் படுத்தினார்கள்.

"இங்கே ஏன் வந்தோம்?" என்று உள்ளுக்குள் ஏங்கும் முறையில் யாரையும் விட்டு வைக்கவில்லை. ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரை பலரோடும் பேச்சுக் கொடுத்துக் கொண்டே இருந்தார்கள். இடைவேளை காப்பி அடக்கமாக இருந்தாலும், கலந்துரையாடல் மகிழ்வூட்டும் முறையில் இருந்தது.

அப்போது நம் நாட்டு விருந்துகள் நினைவிற்கு வந்தன.

விருந்தளிப்போர் அரசியல் தலைவர்களைத் தவிர வேறு யாரையும், 'வா' என்றுகூட அழைக்காத சில விருந்துகளில் யானும் பங்கு கொள்ள நேர்ந்துள்ளது. அதற்கு மாறாக இருந்தது, மேனாட்டு விருந்தோம்புங் கலை.

அங்கே, கேட்பாரற்றுத் திரும்பும் நிலையை உருவாக்கவில்லை.

மாநாட்டுத் தலைவரும் திறப்பாளரும் பகல் உணவு வேளையில் மற்றவர்களைப் போலவே, வரிசையில் நின்று, உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொண்டதைக் கண்டு மகிழ்ந்தேன்.

விலகி நிற்கும் படாடோபமல்ல, பிரிட்டனிலுள்ள பெரிய மனிதர்களின் இயல்பு என்பதை உணர்ந்தேன்

பிரிட்டனில் காலம் காலமாக வரும் சில மரபு களில் பகட்டுகள் தென்பட்டாலும் அவை நொடியில் விலகிவிடுவதைப் பார்த்து, என் சமதர்ம உள்ளம், உவகையில் திளைத்தது.

அலுவலக, சிற்றுண்டிச் சாலைகளில் கூட, எழுத்தர் முன்னே நிற்க, அலுவலர் பின்னே வந்தால், அவருக்கு முன்னே இடம் கொடுப்பதில்லை. அவர் வரிசையில் பின்னால் நிற்பதையே, முன்பு பிரிட்ட னுக்குச் சென்ற போதும் கண்டிருக்கிறேன்.

எதிர்ப்பு தெரிவிப்பதையும் நாகரிகத்தோடு தெரி விப்பதைக் காணும் வாய்ப்பு இம்முறை எங்களுக்குக் கிட்டிற்று.

தென் ஆப்பிரிக்காவும் ரொடேஷியாவும் ஓர் காலத்தில் 'காமன் வெல்த்'தைச் சேர்ந்த நாடுகளா யிருந்தன. அப்போது அந்நாடுகளின் பல்கலைக் கழ கங்களும் காமன்வெல்த் பல்கலைக் கழகத்தில் உறுப் பினர்களாக இருந்தன. இப்போது உறுப்புகள் அல்ல.

ஆயினும் கழகத்தின் விதியிலொன்று விசித்திர மானது. முன்னாள் உறுப்பாக இருந்த பல்கலைக் கழகம், பொது மாநாட்டிற்கு பிரதிநிதியை அனுப்பக் கூடாது; பார்வையாளரை அனுப்பலாம்.

அவ்விதியின் துணை கொண்டு, ரோடேஷியப் பல் கலைக்கழகமும் தென்னாப்பிரிக்காவில் உள்ள ஒரு பல்கலைக்கழகமும் பார்வையாளர்களை அனுப்புவ தாகத் தகவல் கொடுத்தார்கள்.

அந்நாடுகள் இரண்டும் நிறவேற்றுமைக் கொள் கையை நடைமுறைப் படுத்துகின்றன. வெள்ளையர் கள் வாழும் பகுதிகள் கறுப்பர்களும் பிறரும் வாழக் கூடாது. இரு இனத்தவரும் சேர்ந்திருந்து படம் பார்க்கக் கூடாது. வெள்ளையர்களோடு மற்றவர்கள்

சேர்ந்து உண்ணக் கூடாது; சேர்ந்து படிக்கக் கூடாது, என்ற இனப்பிரிவினைச் சட்டங்களை நடைமுறைப் படுத்துகின்றன, அந்நாடுகள். ஆகையால் அந்நாடு களின் சார்பில் பொது மாநாடுகளில் கலந்து கொள் வதை, கொள்கை அடிப்படையில், சில நாடுகள் ஆட் சேபிக்கின்றன.

அந்த ஆட்சேபணையின் எதிரொலி இம்மாநாட்டி லும் கேட்டது.

மாநாட்டின் செயற்குழு கூட்டத்தில், அந் நாட்டுப் பார்வையாளர்கள் கலந்து கொள்வதை ஆட் சேபிக்கப்பட்டது.

ஆப்பிரிக்க நாடுகள் சிலவும் இந்தியாவும் எழுப்பிய ஆட்சேபணையை, கனடா, ஆஸ்திரேலியா, நியூஜிலண்ட் ஆகிய நாடுகள் ஆதரித்தன. எடின்பரோ பல்கலைக்கழக மாணவர்களும் ஆட்சேபித்தனர். தங்கள் எதிர்ப்பை எழுத்து மூலம் எல்லோருக்கும் தெரிவித்தனர். எதிர்ப்பையும் மீறி, நிற வேற்றுமைக் கொள்கையினர் கலந்து கொண்டால், தாங்கள் மாநாட்டின் போது எதிர்ப்பைக் காட்ட நேரிடும் என்று அறிவித்தனர்.

எதிர்ப்பை எவ்வாறு சமாளித்தனர், கழகத்தவர்.

விதிமுறையின்படி, வர உரிமையுடையவர்கள், தென்னாப்பிரிக்க, ரொடேஷிய பல்கலைக்கழகப் பார்வையாளர்கள். அந்நாட்டு அரசுகளின் நிற வேற்றுமைக் கொள்கைகளை அங்கேயே எதிர்க்கும் மையங்களாக விளங்குபவை பல்கலைக்கழகங்கள். அவற்றின் பார்வையாளர்கள் வந்து கலந்து கொள் வதைத் தடுப்பது, முற்போக்கு கொள்கையினருக்கு இரு பக்கமும் இடியாக முடியம்.

இந்நிலையில் 'இராஜ தந்திரம்' கை கொடுத்தது.

கழகத் தலைவர், சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்த வர்களோடு தனிப்பட்ட முறையில் பேசி,

"எங்கள் சகாக்கள் வேண்டாமென்கிற மாநாட்டிற்கு நாங்கள் வலிய வந்து புகுவதாக இல்லை" என்று சொல்லும்படிச் செய்து விட்டார். இந்த சுமுகமான முடிவை எண்ணி எல்லோரும் மகிழ்ந்தோம்.

அதற்கும் ஓர் குறை ஏற்பட்டது.

நாங்கள் பகல் உணவு உண்ண மாநாட்டு மண்டபத்திற்கு எதிரே இருந்த உணவுக் கூடத்திற்கு வரிசையாகச் சென்றோம். கூடம் மாடியில் இருந்தது. கூடப் படிகளின் இருமருங்கிலும் அழகிய பெண்கள் சிலரும் இளைஞர்கள் சிலரும் ஒழுங்காக நின்று கொண்டிருந்தார்கள். நாங்கள் படியேற ஏற, புன்சிரிப்போடு, எங்கள் கைகளில் அச்சிட்ட துண்டு வெளியீட்டினை வழங்கினர். வழங்கும் போது, முகத்தில் சிடுசிடுப்பு இல்லை. முழக்கம் ஏதும் இல்லை. வாங்கிய தாளைப் படித்தோம்.

'பல்லாயிரக்கணக்கான மைல்கள் பயணஞ் செய்து வந்து, ஆயிரக் கணக்கானவர்கள் இப்படிக் கூடி, மாநாடு நடத்துவது தேவையற்றது; பெரும் பணச் செலவிற்குக் காரணமானது.

'இலட்சக்கணக்கான பவுன்களைச் செலவு செய்து பெரும் விருந்துகள் கொடுத்தனுப்புவதும் பொருத்தமற்றது. மாநாட்டுப் பணத்தையெல்லாம் சேர்த்து வைத்து, நிறவேற்றுமைக் கொடுமைக்குள்ளாகியுள்ள மாணவ மாணவிகளின் உயர் கல்விக்கு வழிவகை செய்வதே அறிவுடைமை, நியாயமானது'.

இப்படிக் கூறிற்று இளைஞர்களின் அறிவிப்பு. புதிய தலைமுறையின் கருத்தோட்டத்தை உணர்ந்த நாங்கள், 'இளைஞர்கள், தங்கள் கொள்கைகளை இவ்வளவு இனிமையாகச் சொன்னால், எளிதாக உலகைத் திருத்தி விடுவார்களே', என்று பேசிக் கொண்டே, உண்ணச் சென்றோம்.

# 13

எழில்மிகு எடின்பரோ நகரில் கூடிய காமன் வெல்த் பல்கலைக்கழக மாநாடு, பொது அவையாக, முதல் நாள் காலையில் நடந்தது. அன்று பிற்பகல் முதல், அது பல குழுக்களாகப் பிரிந்தது. ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு பொருள் பற்றிக் கருத்தரங்கு நடத்திற்று.

நான்காம் நாள் அன்று காலை ஒன்பது மணிக்கு, கருத்தரங்குகள் தொடங்கின. திடுக்கிட்டுப் போகாதீர்கள். ஒன்பது மணிக்கு அலுவல்களைத் தொடங்குவது மேனாடுகளில் அன்றாட நிகழ்ச்சி.

காலை பத்தரை மணிக்கு காப்பி இடைவேளை உண்டு. அதற்காக வெவ்வேறு அறைகளில் கூடியிருந்த நாங்கள், பொது மண்டபத்திற்குள் நுழைந்தோம்.

மண்டபம் நிறைந்து வழிந்தது. எள் போட்டால் எள் விழ இடமில்லை. அவ்வளவு நெருக்கமாகக் கூடியிருந்தவர்கள் யார்? மாநாட்டுப் பிரதிநிதிகளே. கருத்தரங்குகளிலிருந்து முன்னர் வெளியே வந்தவர்கள், மண்டபத்தைப் பிடித்துக் கொண்டார்கள்.

மாடி அறைகளில் கூடிய குழுக்கள் ஒன்றில் நான் இருந்தேன். மாடித் தாழ்வாரத்திற்கு நான் வந்ததும் வராததுமாக,

''வேலு! அதோ பார்! அதோ பார்'' என்றார்கள் நண்பர்கள். பலர் கை காட்டிய பக்கம் என் கண்கள் பாய்ந்தன.

'பளிச்' 'பளிச்' சென்று மின்னல் ஒளி (Flash Light) கண்ணைப் பறித்தது. தொலைக் காட்சிக் 'காமிரா' ஒன்றும் புகைப்படக்காரர்கள் சிலரும் தென்பட்டனர்.

மண்டபத்தில் இருந்தவர்கள் கைகளில் கோப்பைகள் இருந்தன. அவர்கள் பானம் அருந்திக் கொண்டிருந்தது தெரிந்தது.

அதோ மாநாட்டுத் தலைவர் சர். சார்ல்ஸ் வில்சன்!

அவர், மண்டபத்திலிருந்தவர்களை ஒவ்வொருவராக அழைத்து, 'யாரு'க்கோ அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார்.

என் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒருவர்,

''அவர் யார் தெரிகிறதா?'' என்று என்னைக் கேட்டார்.

'கூட்டத்தில் அடையாளம் தெரியவில்லை' என்றேன்.

''சர் சார்ல்ஸ் வில்சனுக்குப் பக்கத்தில் நிற்கிறாரே, அவர் பிலிப் கோமகனாகும். அவர் இப்பல்கலைக்கழகத்தின் வேந்தர். அவருக்கே பிரதிநிதிகளை அறிமுகப் படுத்துகிறார்'' என்றார் பிரிட்டானிய நண்பர்.

''அப்படியா! கோமகன் பிலிப், இன்று நம் கருத்தரங்குகளில் ஒன்றில் கலந்து கொள்ளுவார் என்று

நிகழ்ச்சி நிரல் கூறுகிறது. எந்தக் கருத்தரங்கிற்குச் சென்ருரோ? நம் கருத்தரங்கிற்கு வராமல் போய் விட்டாரே?'' என்று என் ஏமாற்றத்தை வெளி யிட்டேன்.

''இன்னும் உங்களுக்கு வாய்ப்பு இருக்கலாம். இப்போதே வந்தார். இதுவரை எந்தக் கருத்தரங் கிற்கும் போகவில்லை. காப்பி இடைவேளைக்குப் பிறகு போவார். நீங்கள் விரும்புகிறபடி உங்கள் கருத்தரங்குக்கு வரவேண்டுமென்று நானும் விரும்பு கிறேன்'' என்ருர்.

இதற்கிடையில் மண்டபத்தில் கோமகனைச் சுற்றியிருந்தவர்கள், ஒவ்வொருவராக, இரண்டொரு உரையாடலுக்குப் பிறகு விலகிப் போய் நின்ருர்கள்.

எவ்வளவு பெரியவரோடு இருந்தாலும் அவரை, அவ் வேளை, தங்களுக்கே சொந்தமாக்கிக் கொள்ளும் வழக்கம் அந்நாட்டில் அநாகரீகமாக கருதப்படும். பலரும் கண்டு விசாரிக்க விடுவதே அவர்கள் பண்பாடு. இதைக் கண்டோம்.

மாடித் தாழ்வாரத்திலிருந்த பிரதிநிதிகள், படி யிறங்கி கோமகனை நெருங்கினேம். கோமகனைக் கண்டோம். ஆம் இப்போதைய பிரிட்டிஷ் அரசி எலிசபெத்தின் கணவராகிய பிலிப் கோமகனை நேருக்கு நேர் கண்டோம். எவ்வித படாடோபமும் இல்லை. எல்லோரிலும் ஒருவராகவே காட்சியளித் தார். கோமகன் என்று காட்டிக் கொள்ளும் நடை யுடை பாவனை எதுவும் இல்லை. சுற்றும் முற்றும் பார்த்தேன். காவல் உடையில் யாரும் இல்லை. சாதாரண உடையில் காவல் துறையினர் இருந்திருக் கலாம். அவர்களும் அவரை வளைத்துக் கொள்ள வில்லை.

ஒவ்வொருவரையும் வில்சன் அறிமுகப்படுத்தும் போது, கோமகன் விரைந்து கையை நீட்டி, ஆர்வத்

தோடு கைகுலுக்கினர். பொருத்தமான கேள்விகளைக் கேட்டார். இப்படியே ஒவ்வொருவரிடமும் கலகலப்பாக நடந்துகொண்டார்.

மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் மு. வ. வை அறிமுகப்படுத்தியபோது,

"மதுரை எங்கே இருக்கிறது?" என்று வினவினர்.

"சென்னைக்கு முன்னூறு மைல் தொலைவில் இருக்கிறது" என்று மு. வ. சொல்ல,

"அங்கே என்ன மொழி பேசுகிறார்கள்?" என்று கோமகன் கேட்டார்.

'தமிழ்' என்று பதில் சொன்னதும்,

'ஆ! அப்படியானால் அது தமிழ் நாட்டைச் சேர்ந்தது!' என்று கோமகன் முடித்தார்.

மைசூர் பல்கலைக்கழகத்தின் சார்பில் வந்திருந்த, 'அடிகா' அவர்களை அறிமுகப்படுத்தியபோது,

'இன்னும் உங்கள் இராச்சியத்திற்கு மைசூர் என்னும் பெயரை வைத்திருக்கிறீர்களா?' என்று கோமகன் கேட்க எல்லோரும் வியப்பில் ஆழ்ந்தோம்.

'கர்நாடகம்' என்று அழைக்க முடிவு செய்து விட்டோம். விரைவில் அது நடைமுறைக்கு வரும்' என்று 'அடிகா' அறிவித்தார்.

பிரிட்டிஷ் பேரரசியின் கணவரான கோமகன் பிலிப், உள்ளூர் துணைவேந்தருக்குக் கூறிய கட்டியம் கூட இல்லாமல், பொது மக்களிலே ஒருவராக வந்து கலந்து கொள்வதை வியந்து கொண்டே அவரவர் கருத்தரங்கிற்குச் சென்றோம்.

நான் இருந்த குழுவிற்கு கோமகன் வரும் பேறு இல்லை. அவர் மற்றோர் குழுவிற்குச் சென்றார். எல்லோரைப் போலவே பலருக்கும் இடையில் அமர்ந்தார். கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

கோமகனின் வருகையைப் பெற்ற குழு, 'பல்கலைக்கழகங்களும் இக்காலக் கலாச்சாரமும்' என்பதைப் பற்றி கருத்தரங்கு நடத்திற்று. அதிற் பங்கு கொண்ட பிலிப் கோமகன்,

"நாட்டுப் பற்று ஒவ்வொருவருடைய இயல்பிலும் இருக்கிறது. தன்னுடைய பிரிவினர் மற்ற பிரிவினரைவிட சிறந்தவர்கள் என்ற எண்ணம் எல்லா மனிதருக்கும் இயற்கையானது. இதற்கிடையில், பல்வேறு பிரிவினர்களுக்குள் சகிப்புத்தன்மையையும் மாற்றுக் கருத்துகளையும் மதிக்கும் இயல்பையும் கற்றுக் கொடுப்பதே நல்லது.

"தேசியம், உலகத்தை எங்கே கொண்டு போய் விட்டிருக்கிறது?

"ஜெர்மனியில் இருந்த நாஜிக் கட்சியை நினைவு கூறுங்கள். அது அந்நாட்டின் தேசியத்தை வளர்த்தது தெரியும்.

"அயோக்கியனின் கடைசிப் புகலிடம் தேசபக்தி என்று டாக்டர் ஜான்சன் சொன்னதை நினைவு படுத்திப் பாருங்கள்.

"தேசியமும் பல்கலைக்கழகமும் முரண்பட்டவை. பல்கலைக்கழகங்கள் உலகக் கண்ணோட்டத்தை வளர்க்க விட்டால், இறைவனே நம்மைக் காப்பாற்ற வேண்டும்" என்று துணிச்சலாக ஒரு போடு போட்டார் அக்கோமகன்.

உணவுக் கூடம், கருத்தரங்குக் கூடத்திற்கு எதிரில், சில நூறு மீட்டர்கள் தூரத்தில் இருந்தது. எனவே எல்லோரும் நடந்தே சென்றோம்.

வழியில் போக்குவரத்துத் தீவு இருக்கிறது. அதற்கு இரண்டு பக்கத்திலும் ஒரு வழித் தெருக்கள் இரண்டு உள்ளன. இவற்றைக் கடந்தே செல்ல வேண்டும்.

அன்று, கோமகனும் நடந்தே வந்தார். அப்போதும் எவ்வித ஜபர்தஸ்தும் இல்லே.

கருத்தரங்கு கட்டடத்து வாயிலில், மூன்று நான்கு காவல் துறை அதிகாரிகள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் கோமகன் தெருவைக் கடக்கும்போது, வண்டிப் போக்குவரத்தை நிறுத்துவதற்கு உதவினுர்கள். அந்த உதவி கோமகனேத் தொடர்ந்து பின்னுல் நடந்து சென்ற எங்கள் அனைவருக்கும் பயன்பட்டது. தெருக்களேக் கடக்கும்போது அக்கம்பக்கத்தில் நடந்து கொண்டிருந்த பொது மக்களேக் கவனித்தேன். யாரும் கோமகனேக் காண, விழுந்து அடித்துக்கொண்டு, ஓடி வரவில்லே. காணும் தூரத்திலிருந்தவர்கள், அப்படி அப்படியே நின்று,

“அதோ கோமகன் போகிருர்” என்று சுட்டிக் காட்டி மகிழ்ந்தார்கள். அவர்பால் மதிப்புக் காட்டுவது தெரிந்தது.

சர் வில்சன் பக்கத்தில் வர, கோமகன் அவரோடு பேச்சுக் கொடுத்துக் கொண்டே உணவுக்கூட வாயலண்டை போய்ச் சேர்ந்தார்.

பகல் உணவு உண்பதற்கு முன், ஏதாவது பானம் அருந்துவது மேனுட்டு முறையல்லவா? அதற்காக, பான மேசையை நோக்கி எல்லோரும் வரிசையாக நடந்தோம்.

மதுபானம் அருந்தாத என்னேப் போன்றவர்களுக்கு மெதுபானமும் மேசையின் ஒரு பக்கத்தில் இருந்தது.

கோமகன் பிலிப்பிற்கு முன்னே, பலர் வரிசையாக நகர்ந்து கொண்டிருந்தார்கள். கோமகனும் வரிசையில் நின்று, நகர்ந்து, பானத்தை எடுத்துக் கொண்டு போனுர். நின்றபடியே பலரோடும் பேசிக் கொண்டே பானத்தைக் குடித்து முடித்தார். கையி

லிருந்த கண்ணுடி டம்ளரை வைப்பதற்காக மேசைப் பக்கம் திரும்பினுர். சர் வில்சன் சட்டென்று வழி மறித்து, அந்த 'டம்ளரை' தான் வாங்கிக் கொண்டு போக முனைந்தார். கோமகன் அதற்கு ஒப்பவில்லை.

'ஆகாது' என்று சிரித்தபடியே கூறிக் கொண்டே கோமகன் தானே சென்று மேசையின் மேல் வைத்து விட்டு வந்தார்.

பின்னர் உணவு எடுத்துக் கொள்ள நகரும் வரிசையில் நின்ருர். பத்து நிமிடங்கள் மெல்ல நகர்ந்த பிறகு அவருடைய முறை வந்தது. அதை அவர் பொருட்படுத்தவில்லை. பத்து நிமிடங்களும் சள சளவென்று பேசி அருகில் இருந்தவர்களைச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தார். தானே தட்டை எடுத்து, தனக்கு வேண்டிய உணவை எடுத்து வைத்துக் கொண்டு வந்தார். அவருக்காக யாரும் எடுத்துவர விடவில்லை.

பிரதிநிதிகளில் பலர், இரண்டு முறை வரிசையில் நிற்பதற்கு சோம்பற்பட்டு முதல் முறையே, கடைசி யாகச் சாப்பிடும் இனிப்பையும் தங்கள் தட்டுகளில் கொண்டு வந்தார்கள்.

கோமகனே, முதல் முறை, இனிப்பல்லாத மற்ற உணவுகளை எடுத்துக் கொண்டு வந்து, மேசை யண்டை உட்கார்ந்து உண்டார். தனியாக உண்ண வில்லை. நாலுபேரோடும் சேர்ந்து உண்டபின், இனிப்பு வாங்கிக் கொண்டு வர, மறுபடியும் போய் வரிசையில் நின்ருர். அப்போதும், அவரோடு இருந்து சாப்பிட்ட ஒருவர், தான் வாங்கி வருவதாகச் சொல்லியும் கோமகன் கேட்கவில்லை.

"எல்லோரும் ஓர் நிறை; எல்லோரும் ஓர் விலை" என்னும் முழக்கம், எடின்பரோவில் செயல்படுவதைக் கண்டு பரவசமானேம். இளவரசர் பிலிப், எடின் பரோவின் (Duke) கோமகனல்லவா?

# 14

பல்கலைக்கழக மாநாட்டிற்கு வந்தவர்களோடு, இருந்து, பகலுணவு உண்ட எடின்பரோ கோமகன், பிரிட்டிஷ் அரசியாம் எலிசபெத்தின் வாழ்க்கைத் துணைவர், சாதாரண மனிதரைப்போல், உணவுக்குப் பின்னர், தங்கியிருந்து, பலரோடும் பேசிப்பழகிய பிறகு, தன்னுடைய மாளிகைக்குச் சென்றார்.

எங்கள் உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்ட கோமகன் பிலிப், அன்று மாலை, தனது மாளிகைத் தோட்டத்தில், எங்களுக்கு வரவேற்பு கொடுத்தார். அந்த மாளிகையின் பெயர் 'ஹாலிராட் மாளிகை' என்பதாகும். அது தொன்மை வாய்ந்த மாளிகை. பெரிய மாளிகையும், அதோடு இணைந்துள்ள தோட்டமும் பெரியது; அழகியது.

தேனீர் விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்த நாங்கள், பல பேருந்துகளில் அழைத்துச் செல்லப் பட்டோம். மாநாட்டிற்கு வந்திருந்தோர் ஆயிரத்து நூறு பேர்களுக்கு மேல். ஆகவே பேருந்துகள் இரண்டு முறை ஓட நேர்ந்தது.

நானும் டாக்டர் மு. வ. வும் முதலில் போன பேருந்து ஒன்றில் ஏறிக் கொண்டோம். எனவே விருந்து நேரத்திற்கு இருபது நிமிடங்களுக்கு முன்னரே, மாளிகைத் தோட்டத்தில் இருந்தோம்.

தோட்டம் நன்ருகப் பராமரிக்கப்படுகிறது என்று சொல்லவா வேண்டும்? பரந்த புல்வெளியின் விளிம்பிலும், நடுவில் பல இடங்களிலும் வண்ண மலர்ச் செடிகளின் கூட்டம் கண் சிமிட்டி எங்களே வரவேற்றன. தோட்ட நுழைவாயிலில், கோமகனின் சார்பில் அதிகாரிகள் எங்களே வரவேற்ருர்கள்.

தோட்டத்தைச் சுற்றிப் பார்த்து மகிழ்ந்தோம். விருந்தினர் கூட்டம் பெருகிற்று. பலரும்-குறிப்பாக எடின்பரோ நகரத்தவர்கள் - தாங்களே முன்வந்து, கூட்டம் கூட்டமாக நின்றிருந்த எங்களிடம் அறிமுகப் படுத்திக் கொண்டார்கள். எங்கள் நலன்களே விசாரித்துத் தெம்பூட்டினுர்கள்.

பேச்சு சுழன்றது. மாளிகை பற்றி வளர்ந்தது.

அப்பெரிய மாளிகையின் பெரும் பகுதி பளிச் சென்று கண்ணேக் கவரும் வகையில் இருந்தது. ஒரு பகுதி பொலிவிழந்த பழமையோடு இருந்தது. இது எங்களுக்கு வியப்பாயிருந்தது; புரியாத புதிராகவும் இருந்தது. பிரதிநிதிகளாகிய எங்களுக்குள் கலந்துரையாடியபோது, காரணம் கண்டு பிடிக்க முடியவில்லே.

எடின்பரோக்காரர் ஒருவர் எங்களேக் கண்டு பேசியபோது, ‘இருவேறு’ தோற்றமளித்த அம் மாளிகையை அவருக்குச் சுட்டிக் காட்டினுேம். தோற்ற வேறுபாட்டிற்கு விளக்கம் கேட்டோம், விளக்கினுர். புதிர் புரிந்து விட்டது.

என்ன விளக்கம்?

இதோ அவர் கூறியது:

"ஓ! அதுவா? இம்மாளிகை மிகப் பெரியது. இக்கால எடின்பரோவில் தொழிற்கூடங்கள் வெளியிடும் புகைப்படலங்களோ அதிகம். அவை இந்நகரக் கட்டடங்களின் வெளித் தோற்றங்களை புகை தோய்ந்தனவாக மாற்றிவிடுகின்றன. இம்மாளிகையின் வெளித்தோற்றமும் அப்படி மங்கியதே.

"கோமகனின் மாளிகையே ஆயினும், சில ஆண்டுகளுக்கு ஒரு முறையே இதைச் சுத்தப்படுத்த முடிகிறது. நிதி பற்றுக்குறையால், இவ்வாண்டு இம்மாளிகையின் ஒரு பகுதி துப்புரவு செய்யப்பட்டு, புது வண்ணம் பூசப்பட்டது. துப்புரவு செய்யப்படாத பகுதி மங்கலாகத் தோற்றமளிக்கிறது."

பணம் பற்றுக்குறை சாதாரண மக்களுக்குள்ள மண்டையிடி என்று எண்ணுகிறோமே, அது எவ்வளவு தவறு என்பதை அப்போது உணர்ந்தோம்.

இவ்விளக்கத்தை முடிக்கும் நேரம் கோமகன், மாளிகையை விட்டு வெளியே வந்தார்.

அவர் வெளியே வரும்போது. இருமருங்கிலும், மாளிகைக் காவல் அணியினர், அழகிய, கண்களைப் பறிக்கும் வண்ண உடையில் அணிவகுத்து வந்தனர். அவர்கள் அணிவகுத்து பெரு நடை நடந்துவர, கோமகனும் அதற்கு ஏற்றார்போல், விருந்தளிக்கும் இடம் வரை, அணியின் நடுவில், பெருமிதத்தோடு நடந்து வந்தார்.

விருந்துப் பகுதிக்கு வந்ததும், சர் சார்ல்ஸ் வில்சன், கோமகனை வரவேற்றார். அவரோடு சேர்ந்து, இளவரசர் பிலிப், சிறு சிறு கூட்டங்களாகப் பரவி நின்றிருந்த விருந்தினரைக் கண்டு உரையாடிச் சென்றார். எல்லோருடனும் ஆர்வத்தோடு கைகுலுக்கினார். சிரித்துச் சிரித்துப் பேசி, எல்லாக் கூட்டத்தையும் மகிழ்வித்தார். ஒவ்வொரு கூட்டத்திலும்

அதற்குப் பொருத்தமான உரையோடு பேசினர். இந்தியக் குழுவிடம் வந்தபோது, எல்லோரோடும் கை குலுக்கியதோடு,

"உங்களுடைய நாடு பெரிய நாடு; எனவே பெரிய 'டெலிகேஷன்,'' என்றார். எவ்வளவு இனிமையாகப் பேசுகிறார் என்று பூரிக்கும்போது,

"இன்னும் அநேகம் குழுக்களைப் பார்த்து விசாரிக்க வேண்டும். எல்லோருக்கும் தேனீர் காத்துக் கிடக்கிறது'' என்று சிரித்துக்கொண்டே சொல்லிய வண்ணம், நகர்ந்து விட்டார்.

"மாளிகையில் பிறந்து, மாளிகையில் வாழும் கோமகன் பொது மக்களிடம் சென்று வாக்குத் தேடத் தேவையில்லாத கோமகன், எவ்வளவு அன்போடும் சுமுகத்தோடும் எல்லோரோடும் பேசுகிறார். யாரையும், கண்டுங்காணாதவர்போல் போய்விடவில்லை பார்த்தீர்களா? இதுவன்றோ உண்மையான பெருந்தன்மை!

"நம் பெரியவர்கள், இப்பண்பாட்டை கற்றுக் கொண்டால், மக்களின் வெறுப்புக்கு எளிதில் ஆளாகி விடமாட்டார்கள்'', என்று, பழுத்த இந்தியத் துணை வேந்தர் ஒருவர் கூறியது எங்களை சிந்தனையில் தள்ளிற்று.

சில நிமிடங்களில், விருந்துண்ண அழைக்கப் பட்டோம்.

பல மேசைகளின் மேல், பலகாரங்கள் வைக்கப் பட்டிருந்தன. பலகார வகைகளுக்குக் குறைவில்லை. அத்தனையும் கவர்ச்சியாகத் தோன்றின. எதை எடுப்பது, எதை விடுவது என்று தெரியாது திண்டாடும் குழந்தைகளைப்போல் அப்போது திண்டாடினோம்.

தட்டுகளில் சில பலகாரங்களை எடுத்துக் கொண்டு, தோட்டத்தில் போடப்பட்டிருந்த மேசை

களைச் சுற்றி அமர்ந்து, விருந்துண்டோம். இரண்டு முறை சென்று பலகாரங்களை எடுத்துக் கொண்டு வந்தவர்களும் உண்டு.

காப்பி, தேனீர், குளிர்பானங்கள் எனப் பல வகை, கொடுக்கப்பட்டன. அங்கு கிடைத்த 'ஐஸ் கிரீம்' நன்றாக இருந்தது.

சுவையாக உண்ணும்போதும் பேச்சுக்குக் குறை வில்லை.

"ஸ்காட்லண்டுக்காரர்கள், கையழுத்தக்காரர்கள். சிக்கனத்திற்குப் பெயர்போனவர்கள்", என்று பலரும், பரிகசிப்பதைக் கேட்டிருக்கிறோம்.

"பல அவதூறுகளைப்போல, இதுவும் பொய் என்பதை இம் மாநாட்டின் போதே உணர்ந்தோம்:

"கோமகன் கொடுக்கும் இவ்விருந்தில் மட்டு மல்ல. எல்லாநாளும் எல்லா வேளையும், திக்குமுக் காட வைக்கும் பலமான விருந்தையே அளித்து வரு கிறார்கள். எந்த விருந்து, இளைத்த விருந்து" என்று கேட்டார், ஆப்பிரிக்க நண்பர் ஒருவர்.

"எதுவும் இளைத்ததல்ல. எல்லாமே பலமான விருந்துகளே" என்று ஒருமித்த முடிவு செய்தோம்.

"கோமகன் இனிய இயல்பினராக மட்டும் இல்லை, அதிகம் அறிந்தவராகவும் இருக்கிறார். எந்த நாட்ட வரைக் கண்டாலும் ஏதாவது பொருத்தமாகச் சொல் லுகிறார்; பொருத்தமாகக் கேட்கிறார். எவ்வளவு திறமைசாலி", பாருங்கள் என்றார் ஒரு துணைவேந்தர்.

"திறமைசாலியே, அதோடு ஆயத்தசாலியும்" என்றார் பிரிட்டிஷ் துணைவேந்தர் ஒருவர்.

"அப்படியென்றால்?" என்று, நான் கேட்க, அவர் கூறிய பதிலைப் படியுங்கள்.

"கோமகன், எத்தகைய நிகழ்ச்சியை ஏற்றுக் கொண்டாலும், அந்நிகழ்ச்சிக்குச் செல்லுமுன், அந் நிகழ்ச்சிக்கு வருவோர் யார் யார், அவர்கள் எந்தெந்த நாட்டவர், அந்தந்த நாட்டின் பொதுத் தன்மையும் தனித்தன்மையும் எவை எவை என்பதையெல்லாம் தெரிந்து கொண்டே வருவார். அவர் அப்படி ஆயத் தஞ்செய்து கொள்வதற்கு வேண்டிய தகவல்களைச் சேகரித்துக் கொடுக்க, சிலரை ஏற்பாடு செய்திருக் கிறார். எனவே எங்கு செல்லும்போதும் என்ன சொல்வதென்று தெரியாமல், ஊமையாக உலாவ மாட்டார்.''

இச்செய்தி சிந்தனைக்கு உரியது. மதிப்பீட்டுக்கு உரியதல்ல.

தேனீர் விருந்து முடிய ஒரு மணிக்கு மேல் ஆயிற்று. நல்ல வேளையாக, 'சொற்பொழிவு' ஏதும் இல்லை. விருந்து முடிந்ததும் விடை பெற்றுக் கொண்ட கோமகன் பிலிப் மாளிகைத் தோட்டத்தின் ஒரு பக்கத்தில் காத்திருந்த 'எலிகாப்டரி'ல் ஏறி, விமானியை பக்கத்தில் இருக்கச்சொல்லி விட்டு, தானே, எலிகாப்டரை ஓட்டிக்கொண்டு, இலண்ட னுக்குத் திரும்பினார்.

எங்களைப் பெருமைப்படுத்தும் நிகழ்ச்சிக்கு மட்டுமே எடின்பரோவிற்கு வந்து, விருந்தளித்த தோடு, எங்கள் கருத்தரங்கில் பங்கு கொண்டு, ஒளிவு மறைவின்றி கருத்துரைத்த அக்கனவானைப் போற்றா மல் இருக்குமோ எங்கள் மனம்!

# 15

எடின்பரோ கோமகன் அளித்த அருமையான தேனீர் விருந்திலிருந்து,எங்கள் விடுதிகளுக்குத் திரும்பி னோம். வழியில் வெள்ளைச் செம்மறியாட்டு மந்தை யொன்றைக் கண்டோம். ஆடுகள் மேய்ந்து கொண் டிருந்தன. சுற்றுமுற்றும் பார்த்தோம். மேய்ப் பனைக் காணவில்லை. மேய்ப்பனில்லாத இம்மந்தையை நாள்தோறும் கண்டு வந்தோம். மேய்ப்பனில்லாத ஆட்டு மந்தை எங்களுக்கு வியப்பைத் தந்தது. ஆடு களும் கண்ட பக்கம் ஓடி, காரில், பேருந்து வண்டி களில் அடிபடவில்லை. யாரும் அவற்றை விரட்டி தொல்லை கொடுக்கவில்லை. இந்த விசித்திரத்தை மனதில் தேக்கி வைத்திருந்த ஒரு துணைவேந்தர்,

"வேலு! ஆடுகளுக்குக் கூட மேய்ப்பன் தேவைப் படாத ஊருக்கு வந்திருக்கிறோம். அவ்வளவு ஒழுங் கிலே வளர்க்கப்படுகின்றன செம்மறியாடுகளும்" என்று ஆட்டு மந்தையை சுட்டிக் காட்டினார்.

மற்றொரு துணைவேந்தர் பேச்சை நீட்டினார்.

"அது உண்மை. மூடிக்கிடக்கும் வீட்டு வாயலில் வைக்கப்படும் பொருள்களும் அன்னியர்களால்

தொடப்படாமல் பத்திரமாக உள்ளன. மைதானத்தில் மேயும் ஆடுகளுக்கும் காவல் இல்லை. இந்நாட்டின் நாணயம் அவ்வளவு பெரியது; போற்றுதற்குரியது. ஆனால்....''

அவர், ஆனால் என்றதும் என்னால் பொறுக்க முடியவில்லை. எண்ணெயில் வீழ்ந்த பணியாரம் போல், சட்டென்று, சற்று உரத்த குரலில்,

“ஆனால் என்ன?'' என்று மடக்கினேன்.

“வேலு! அதைத்தானே சொல்லப்போகிறேன்.

''களவு இல்லாத, பரவலான பொது நாணய உணர்ச்சி, இந்நாட்டு மக்களுக்கும் காலம்காலமாக வந்த போக்கு அல்ல.

''இதோ பாருங்கள் எடின்பரோவில் வெளியான ஆங்கில நாளிதழை'', என்று என் கையில் செய்தித் தாளொன்றைத் திணித்தார்.

அவர் காட்டிய பகுதியைப் பார்த்தேன்; படித்தேன். கண்டதென்ன?

எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் எடின்பரோ நகரம் எப்படியிருந்தது என்பதைக் காட்டும் சில புகைப்படங்களை வெளியிட்டிருந்தார்கள். அவற்றின் அடியில் ஏற்ற குறிப்புக்களையும் கொடுத்திருந்தார்கள்.

அந்நகரத்தின் நெடுஞ்சாலை ஒன்றின் படத்தைப் பார்த்ததும் சிந்தனை அதிற் பதியாமல் அடுத்த படத்திற்குப் பாய்ந்தது. எடின்பரோவின் ‘புல்லங்காடி’யின் படமும் என்னைக் கவரவில்லை. எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு எடின்பரோவில் ஏராளமான குதிரைகள் இருந்ததால், அவற்றிற்கு வேண்டிய தீவனத்தை விற்க மட்டும் தனி அங்காடியிருந்தது. அதைப்பற்றி எனக்கு என்ன அக்கறை. அடுத்த

படத்தின் மேல் சிந்தையைச் செலுத்தினேன். பல படங்களின் நடுவில் அச்சிடப்பட்டிருந்த அப்படம் என்ன சொல்லிற்று?

காவல் துறையினர் ஒருவர் படத்தில் இருக்கிறார். அவர், சிறுவன் ஒருவனைப் பிடித்துவிட்டார். காவல் துறையினரிடம் சிக்கிக் கொண்ட சிறுவனை ஏளனத் தோடு பார்க்கிறார்கள், சற்று விலகி நிற்கும் இரு சிறுவர்கள். பிடிபட்ட சிறுவன் கையில் தெரிவது என்ன? முள்ளங்கி போன்ற செடி!

படத்தைப் பற்றிய செய்தி என்ன சொல்லிற்று?

யாரோ ஒருவருடைய பங்களாத் தோட்டத்தில் ஒரு 'டர்னிப்'பைத் திருடியபோது அச்சிறுவன், கையும் களவுமாக பிடிபட்டதாக படத்தின் அடியி லுள்ள தகவல் கூறிற்று.

அதைக் கண்டதும் என் நெஞ்சம் அதிர்ந்தது. அதிர்ச்சியை என் முகம் காட்டிற்று.

அப்பத்திரிகையை என்னிடம் கொடுத்த துணை வேந்தர், என்னைக் காப்பாற்ற முனைந்தார்.

"வேலு! பார்த்தீர்களா? இந்நாட்டில் கூட எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர்கூட களவு இருந்தது. சிறுவர்கள்கூட அதில் ஈடுபட்டார்கள். இதைச் சுட்டிக்காட்டும் இப்படத்தைப் பார்த்த பிறகாவது, நாணயம் என்பது இயற்கை உணர்வல்ல; முயன்று பெற்ற ஒழுங்கு என்பதை உணரலாம்" என்று விளக்கஞ் சொன்னார்.

என் சிந்தனை சிறகடித்துப் பறந்தது. பழைய னூருக்குப் பறந்தது. பழங்காலத்திற்குப் பாய்ந்தது.

விருந்தாக வந்து ஓரிரவு தங்கியவரின் பொருள் களவு போனதற்குக் கழுவாயாக அத்தெருவின் ஆண்

கள் அனைவரும் தீக்குளித்த செய்தியை நினைவுபடுத்திக் கொண்டது. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே, மானம் என்பதும் நாணயம் என்பதும் தனிமனிதப் பிரச்சினையல்ல; சமுதாயத்தின் கூட்டுப் பொறுப்பு என்பதைச் சுட்டிக் காட்டியவர்கள் ஆயிற்றே நம் முன்னோர்கள். அவர்களுடைய சிறந்த எடுத்துக் காட்டை, பொது மேடைகளிலும் பொதுக்கட்டுரை களிலும் முன்வைத்துப் போற்றுமல், சமயப் போரில் மறைத்து விட்டோமே. களவாணியையும் காமுகனை யும் கொலைகாரனையும் கற்பனை கலந்து, விளம்பரப் படுத்துகிறோமே. தீயதைக் கேட்டு, தீயதைப் படித்து, தீயதையே பார்த்து வாழும் வண்ணம் வளர்க்கப்படுகிற நமக்கு எதிர்காலம் எப்படி யிருக்கும்?

அன்று நம் முன்னோர்கள் வாழ்ந்த உயர்வாழ்வு எங்கே? இன்று மூலை வீட்டுப் புளியமரத்தின் மேல் புளியம்பழத்திற்காகக் கேட்பாரற்றுக் கல்லெறியும் நிலைக்கு வீழ்ந்துவிட்டோமே?

திருடு பரவியிருந்த நிலையைத் தாண்டி, உறுதி யால், உயர்ந்து, நாணயமுடையவர்களாக மாறிவிட்ட பிரிட்டிஷாரைப்போல், என் தாய்த்திரு நாட்டவரும் திருந்தி உயர்ந்து, வாழ முடியுமா? முடியும், எழுத் தாளரும் பேச்சாளரும், உயர்ந்த பாத்திரங்களைப் படைத்துக் காட்டினல், என்றது என் வெள்ளை உள்ளம்.

உயர்ந்த பாத்திரங்களை எண்ணும்வேளை, எங்கள் பேருந்து வண்டி, நாங்கள் தங்கியிருந்த விடுதியண்டை வந்து நின்றது. எண்ண வானிலிருந்து இறங்கிற்று என் கருத்தோட்டம்.

நாங்கள் எடின்பரோவில் கூடியிருந்த போது, 'எடின்பரோ இசை விழா' நடந்தது. நம் சென்னை யில் டிசம்பர் திங்களில், பல கழகங்களின் சார்பில்

இசை விழாக்கள் நடப்பதை அறிவோம். நம் இசை விழாக்களில் இசைக் கச்சேரிகளோடு, நடனம், நாடகம் ஆகியவை சேருவதும் தெரியும். அதைப் போல், ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்டு திங்களில் பதினைந்து நாட்களுக்கு எடின்பரோ இசை விழா நடக்கும். அதிலும் பலவித இசைகளோடு, நடனம், நாடகம் ஆகியவற்றை கலந்து அளிப்பார்கள். இவ் விழாக்களைக் கண்டு மகிழ வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமானவர்கள் வருகிறார்கள்.

எடின்பரோ நகரசபையின் சார்பில் நடக்கும் இந்த இசை விழாவின் தொடக்க விழாவிற்கு, பல் கலைக்கழக மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு அழைப்பு வந்தது. தொடக்க விழா எடின்பரோ நகரின் பழம் பெரும் கிருத்துவக் கோயிலில் நடக்கும்.

எடின்பரோ இசை விழா தொடங்கும் நாளன்று, ஊரில் மழை பெய்யும் என்பது நெடுநாளாக வரும் மரபாம். அப்படியே இவ்வாண்டும், அன்று, பகல் முழுவதும், சிறு தூரலாக மழை பெய்து கொண்டிருந் தது. அதைப்பொருட்படுத்தாமல், துணைவேந்தர் களில் பலர், தொடக்க விழாவிற்குச் சென்றோம். அழைக்கப்பட்ட அனைவருக்கும் இடம் ஒதுக்கி, எண் போட்டு வைத்திருந்தார்கள்.

தொடக்க விழாவின் முதல் நிகழ்ச்சியாக, நகர மேயரும் மற்ற பெரியவர்களும், அணிவகுத்து, ஊர் வலமாக கோயிலுக்குள் நுழைவார்கள். அவ்வூர் வலத்தில் முதலில் இருப்பவர் மேயரே. ஷெரிப், ஆகியோர் பின்னாலே வருகிறார்கள். எடின்பரோ பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கும், அந்நகரத்தி லுள்ள கல்லூரி முதல்வர்களுக்கும் அந்த அணி வகுப்பி லும் விழாவிலும் மதிப்பான இடம் உண்டு. அந்த மதிப்பும் இடமும் ஆளைப் பொறுத்து மாறுவதில்லை. யார் அப்பதவிகளில் இருந்தாலும், அவற்றிற்கு உரிய

மதிப்பின் அடையாளமாக, அந்நகரின் கலை சிறந்த அந்நிகழ்ச்சியில் அவர்களையும் சேர்த்துக் கொள்ளு கிறார்கள். கல்வியாளர்கள், ஒதுக்கப்பட்டவர்களாக ஆக்கப்படாத, அந்த ஏற்பாடு, எங்களைக் கவர்ந்தது.

தொடக்க விழாவில், இறை வழிபாட்டிற்குப் பிறகு, மூவர் சுருக்கமாகப் பேசி, விழாவை முடித்து வைத்தார்கள். விழாவின்போது சந்தடி ஏதும் இல்லை. பக்தி வழிபாடு செய்யும் அமைதி இருந்தது.

தொடக்க விழா முடிந்து, விடுதிகளுக்குத் திரும்பும்போது, வழியில் புத்தகக் கடையொன்றைக் கண்டோம். வெளியே நடப்போர்க்குக் கண்ணில் படும் வகையில், சில நூல்களைக் காட்சிக்கு வைத்திருந் தார்கள். அவை எங்கள் பார்வையையும் கவர்ந்தன. அவை என்ன நூல்கள்? மார்க்ஸ் எழுதிய 'மூலதனம்' என்னும் நூல் கவனத்தை இழுத்தது. எங்கல்ஸ் எழுதிய பொதுவுடைமை சித்தாந்த நூல், இன்னும் பல பொது உடைமை நூல்களைக் காட்சிப்படுத்தி யிருந்தார்கள்.

இந்த முதலாளித்துவ நாட்டில், பொது உடைமை பற்றிப் பேசும் நூல்களைத் தேடி அலையத் தேவையில்லை என்பதை அறிந்துகொண்டோம்.

இசை விழா தொடக்க நாள் அன்று இரவு இராணுவ அணிவகுப்பும் விளையாட்டுகளும் நடந்தன. அதற்கும் எங்களுக்கு நுழைவுச் சீட்டுகள் வந்தன. திறந்த வெளியில், நடுங்கும் குளிரில், கம்பளிக் கோட்டுகளை அணிந்து கொண்டு, பல்லாயிரக்கணக் கானவர்கள் இராணுவ விளையாட்டு விழாவைக் கண் டோம். அவ்விழா, எடின்பரோ நகரின் கோட்டைக்கு முன்னுள்ள பெரிய திடலில் நடந்தது. இரு பக்கங் களிலும், பார்வையாளர்கள் அமர, காலரிகள் அமைத் திருந்தனர்.

உள்ளே விடும் நேரத்திற்கு முந்தியே நீண்ட வரிசையில் நிற்க நேர்ந்தது. உள்ளே சென்ற பிறகு, இங்கும் அங்கும் இடத்தைத் தேடி அலைய வைக்க வில்லை. ஆங்காங்கே, ஆட்கள் நின்று, ஒழுங்காக உரிய இடத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

வரிசையில் நின்றுகொண்ட ஒவ்வொருவரிடமும், 'டைப்' அடித்த காகிதமொன்றை சில வாலிபர்களும் பெண்களும் திணித்துக்கொண்டே சென்றார்கள். எங்கள் இடங்களுக்குச் சென்று அமர்ந்த பிறகு, கையிலிருந்த காகிதத்தைப் படித்தோம்.

"யாருடைய பட்டாளத்தைக் காணப் போகிறீர் கள்?" என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அவ் வறிக்கை என்ன சொல்லிற்று?

இந்நாட்டின் சொத்தில் நூற்றுக்குத் தொண் ணூறு விழுக்காடு, நூற்றுக்கு ஐந்தாகவுள்ள செல்வர் களிடம் சிக்கியிருக்கிறது. அம்முதலாளிகளின் நலத்தை இந்நாட்டிலும் பிற நாடுகளிலும் காக்கும் பொருட்டு அந்தந்த தேச பக்தர்களைக் கொல்லும் பணியில் ஈடுபடும் பாட்டாளிப் பட்டாளத்தைக் காணப்போகிறீர்கள். பாட்டாளிகளே, பட்டாளத் திற்கு எந்தவித உதவியும் செய்யாதீர்கள். பட்டா ளத்தில் சேராதீர்கள். அயர்லாந்திலுள்ள பிரிட்டிஷ் பட்டாளத்தைத் திருப்பி அழைத்துக் கொள்ளுங்கள். அரசியல் விடுதலைக்காகவும் சுயநிர்ணயத்திற்காகவும் பாடுபடும் நாடுகளை ஆதரியுங்கள். சமதர்ம முறையை வளருங்கள்.

இப்படிக் கூறிய அவ்வறிக்கையைப் படித்து விட்டு யாரும் கீழே எறியவில்லை. எல்லோரும் மடித்து, பையில் வைத்துக்கொண்டார்கள். அதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் பலர் இருக்கலாம். அதைக் குப்பை என்பவர்களும் இருக்கலாம். அவர்களும் அதைத் தெருவில் எறிந்து, குப்பைக்கூளங்களைச் சேர்க்க வில்லை.

# 16

பிரிட்டிஷ் பட்டாளத்தில் குறைபாட்டை குறிப் பிட்டு, சமதர்ம வளர்ச்சிக்கு ஆதரவு தேடி, 'அனைத் துலக சமதர்மவாதி'கள் வெளியிட்ட அறிக்கையை அநேகமாக எல்லோருமே படித்துப் பார்த்தார்கள்.

இன்றைய முறைக்குக் கண்டனம் தெரிவித்த அவ்வறிக்கையை வழங்கியவர்கள், யாருக்கும் இடையூறு செய்யவில்லை. எத்தகைய முழக்கங்களையும் எழுப்பி, எரிச்சல் ஊட்டவில்லை.

சட்டப்படி தங்களுக்கு உரிய எழுத்துரிமையை அறிக்கையாக எழுதி வெளிப்படுத்திக் கொண் டார்கள். எதிர்ப்போர் உரிமை, மற்றவர்கள் பார்வை யாளர்கள் உரிமைக்குக் குறுக்கே செல்லாதபடி பார்த்துக் கொண்டார்கள். அடிப்படை உரிமைகள் எப்படிச் செயல்பட வேண்டுமென்பதற்கு அது நல்ல எடுத்துக் காட்டாக விளங்கிற்று. எனவே எதிர்ப்பவர் களைக் கண்டு பொதுமக்கள் எரிச்சல் கொள்வதற்குப் பதிலாக, 'ஏன் எதிர்க்கிறார்கள்; எதை எதிர்க் கிறார்கள்? என்று சிந்திக்கத் தொடங்குகிறார்கள். மக்களாட்சி முறையில் எப்படி எதிர்ப்பு தெரிவிக்

வெண்டுமென்று எங்களுக்குக் கற்றுக்கொடுத்த, அந்த சமதர்மவாதிகளின் பண்பாட்டை எண்ணிக் கொண்டிருக்கையில், பட்டாள விளையாட்டுகள் தொடங்கின.

ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம் நடந்த அவ் விளையாட்டு விறு விறுப்பாக இருந்தது. வியப்பூட்டும் வகையில் இருந்தது, வண்ணக் கவர்ச்சி உடைய தாக இருந்தது.

சீறியடிக்கும் குளிர்காற்றில், திறந்த வெளியில், உட்கார்ந்து விளையாட்டுகளைப் பார்த்துக் கொண்டி ருக்கும் மக்களுக்கு சற்றும் சலிப்புத் தட்டவிடவில்லை. ஒரு நிகழ்ச்சிக்கும் மறு நிகழ்ச்சிக்கும் இடைவேளை சில நிமிடங்களே. அவ்வேளைகளிலும் பார்வையா ளர்களை கலகலப்பாக வைத்துக் கொள்ள கையாண்ட முறை புதுமையாக இருந்தது.

நிகழ்ச்சிகளை நடத்துபவர்களில் ஒருவர், இடை வேளையின்போது, ஒலிபெருக்கி வழியாக,

'இக்கூட்டத்தில் அமெரிக்கர்கள் இருந்தால், குரல் கொடுங்கள்' என்பார்.

அமெரிக்கர்கள் குரல் கொடுப்பார்கள். அமெரிக் கர்களை வரவேற்று கை தட்டுங்கள் என்பார் அடுத்து. வானதிரக் கை தட்டலைக் கேட்டோம். அடுத்து,

'கனடாவிலிருந்து வந்துள்ளவர்கள் உண்டா?'

'ஆம்' என்று பெருங் கூச்சல்.

'கனடியர்களுக்குக் கை தட்டுங்கள்', பெருங் கைதட்டல். பிறகு,

'பிரான்ஸிலிருந்து?'

'ஆம்' என்ற பெருங் கூச்சல். பெருங் கை தட்டல்.

இப்படிப் பல நாடுகளை அழைத்தார்கள், நேரம் போவது தெரியாது, மகிழ்வித்தார்கள்.

'அப்பா! சரியான குளிர் இருந்தாலும், இப்படியொரு விளையாட்டைக் கண்டதில்லை' இதுவே பார்வையாளர் அனைவருடைய மதிப்பீடும்.

எடின்பரோ இசைவிழாவையொட்டி நடந்த நாடகமொன்றையும் பாட்டுக் கச்சேரி ஒன்றையும் துய்க்கும் வாய்ப்பு கிடைத்தது. இரண்டுமே உயர்ந்த தரத்தில் இருந்தன.

நாடகம் முடிந்ததும் விருந்து. இரவு பத்து மணிக்கு, எடின்பரோ நகர மேயர் அளித்த விருந்தில் உண்ண முடியாது திண்டாடியவர்கள் பல பேர். அவ்வளவு பலமான விருந்து. அது மட்டுமா? விருந்தின் தொடக்கத்தில் கொடுத்த பான வகைகள், தண்ணீர் பட்டபாடு பட்டது.

நிறைய தண்ணீரும் போட்டு, பலமாகவும் சாப்பிட்டுவிட்ட இரண்டொருவர், சட்டென்று வெளியேறிவிட முயன்ற போது, விருந்துக் கூடத்தின் கதவு அடைக்கப் பட்டிருப்பதையும், குறிப்பிட்ட காலத்திற்கு முன்பு, யாரையும் வெளியேறவிடவில்லை என்பதையும் கவனித்தோம்.

பல்கலைக்கழக மாநாட்டைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புவீர்கள் அல்லவா? நல்லது.

உலகம் பலவிதம். இது நமக்குத் தெரியும். பல்கலைக்கழகங்களும் பலவிதம். அதை அங்கே தெரிந்து கொண்டோம்.

ஒரே மாநிலத்தில் ஏழெட்டுப் பல்கலைக்கழகங்கள் இருப்பது நாம் அறிந்ததே. மூன்று நாடுகளுக்குமாக, ஒரே பல்கலைக்கழகம் என்றால் நீங்கள் நம்ப மாட்டீர்கள். ஆனால் அது உண்மை.

வெசோதா, போட்ஸ்வாஞ, சுவாசிலாந்து என்ற மூன்று ஆப்பிரிக்க நாடுகளுக்கும் சேர்ந்து ஒரே பல்கலைக்கழகம் உள்ளது. மூன்று நாடுகளின் மொத்த மக்கள் எண்ணிக்கை பத்து இலட்சமாக இருக்கும் போது, தனித் தனிப் பல்கலைக்கழகங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியுமா?

இதைக் கேட்டுத் திகைத்த என்னைப் பார்த்து,

"வேலு! மூர்ச்சையாகி விடாதே. பிஜியைச் சார்ந்த சுவா நகரில் உள்ள தென் பசுபிக் பல்கலைக் கழகம், பன்னிரண்டு சுதந்திர நாடுகளுக்கும் பொது. இருபது இலட்சம் சதுர மைல் பரப்பிற்கு அது ஒன்றே பல்கலைக்கழகம். மக்கள் எண்ணிக்கை குறைவாக இருக்கும்போது, தனித்தனி பல்கலைக் கழகம் அமைப்பது எப்படி?" என்ருர் ஒரு துணை வேந்தர்.

மற்ருெருவர்,

"இலட்சம், இரண்டு இலட்சம் மாணவர்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் என்று இருந்தால், எப்படி காலத்திற்கேற்ற தரமான கல்வியை வளர்க்க முடியுமென்று எனக்கு விளங்கவில்லை" என்ருர்.

இப்பல்கலைக்கழகங்களின் பணி என்ன? இதைப் பற்றியாவது கருத்து ஒருமையைக் கண்டோமா? இல்லை?

மானுடம் இதுவரை பெற்றுள்ள பல்துறை அறிவைத் திரட்டி, பாதுகாத்து வைப்பதும், அறிவின் எல்லையைத் தொடர்ந்து நகர்த்திக் கொண்டே போவதும் பல்கலைக்கழகப் பணி என்ற பழம் பாட்டைக் கேட்டோம்.

'அறிவைத் தேடுகிருேம்' என்ற சாக்கில் அந்தந்த நாட்டு அன்ருட வாழ்க்கையின் சிக்கல்களைக் கவனி

யாதிருப்பதும் அவற்றிற்கான வழி வகைகளைத் தேடாமலிருப்பதும் நல்லதல்ல என்ற கருத்தும் பலருடைய பேச்சில் இடம் பெற்றது.

'மண்டையுள்ள வரையில் சளி உண்டு. வாழ்க்கையுள்ளவரை சிக்கல்கள் உண்டு'. பல்கலைக் கழகங்கள் அன்றாட சிக்கல்களில் சிக்கிக் கொள்ளக் கூடாது. அப்படிச் சிக்கிக் கொண்டால், அறிவில் உயரும் வாய்ப்பு குறைந்து விடும். எனவே சமுதாயத்தின் சந்தையிரைச்சலுக்கு இடையிலேயும், பல்கலைக்கழகங்கள், அடிப்படை ஆராய்ச்சிகளில் முனைந்து ஈடுபட்டு, கருமமே கண்ணுயிருக்க வேண்டுமென்று வலியுறுத்தியவர்களுக்கும் குறைவில்லை. வளரும் நாடுகளின் பல்கலைக்கழகப் பிரதிநிதிகளே அப்படி வலியுறுத்தினார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கதாம்.

*மாணவர்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்?*

இக்கரைக்கு அக்கரை பச்சை என்பது பழமொழி. பெரிய வேலையில்லாத் திண்டாட்டத்தில் சிக்கித் தவிக்கும் நாம், 'கழுவிற்கேற்ற அப்பாவியாக'க் கல்வி முறையைக் காட்டுகிறோம். மற்ற நாடுகளின் கல்வித் திட்டம் அங்குள்ள வாழ்க்கை நிலையை நினைத்துக் கொண்டு, அதற்கேற்றபடி அமைக்கப்பட்டிருப்பது போலவும், நம் நாட்டில்தான் ஏதோ பொருத்தமற்றதை செய்து கொண்டிருப்பது போன்றும் அடிக்கடி பெரியவர்களே திருவாய் மலர்கிறார்கள். அடிக்கடி அப்படிக் கேட்பதால், கல்வியாளர்களுக்குக் கூட சில வேளை குழப்பம் வந்துவிடுகிறது.

*வைத்தியருக்கே பைத்தியம் பிடித்துவிட்டால் மன நோயாளியின் கதி என்ன?*

*எடின்பரோ பல்கலைக்கழக மாநாட்டில் வெளியானது என்ன?*

இதற்குமேல் சிறந்தது இல்லை என்கிற முறையில் அமைந்த பாடத்திட்டம் எங்கும் இல்லை- புதை வாணம் போல் அறிவு பொங்கி வரும் இக்காலத்தில் அத்தகைய 'எட்டிய' பாடத்திட்டத்தை அமைக்க முடியாது. அடுத்தடுத்து பாடத் திட்டங்களை திருத்தி அமைத்துக் கொள்வதன் மூலமே, ஓரளவு சமாளிக்க இயலும்.

'பாடத்திட்டம் என்னும் போது, எந்தெந்த பாடங்கள் சேர வேண்டுமென்பதை மட்டும் கவனித்தால் போதாது. திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள பாடங்களில், எதெதற்கு எவ்வளவு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதை அதிகம் கவனிக்க வேண்டும். இக்கருத்துகளுக்கு மறுப்பு சொல்ல முடியவில்லை.

மாணவர்கள் தெளிவான குறிக்கோள்களோடு, உயர் கல்வி பெற வருகிறார்களா? என்ற கேள்வி பிறந்தது. பதில் என்ன?

வீட்டுக்கு வீடு மண் அடுப்பே!

குறிக்கோள் தெளிவோடு கல்லூரிகளில் சேரும், மாணவர் மிகச் சிலரே. பெரும்பாலோர், 'நாளைக்கு உதவலாமே' என்று பொது ஆசையால் உந்தப்பட்டு வருகிறார்களே யன்றி 'இதற்கு உதவும்' என்று திட்ட வட்டமாகத் தெரிந்து வரவில்லை. இன்னதற்காகப் போகிறோம் என்று தெளிவின்மையால், கல்லூரியில் சேர்ந்த சிறிது காலத்திற்கெல்லாம், கல்லூரி வாழ்க்கை 'போர்' அடிக்கத் தொடங்குகிறது. சலிப்பினால் படிப்பை முடிக்காமலேயே பல பேர் பாதியில் விட்டு விடுகிறார்கள். இது பல நாடுகளில் உள்ள நிலை.

கல்வியில் கடைத் தேறாமல் பாதியில் போக விடுவது, வீண் செலவு அல்லவா? இக் கேள்வியும் எழுந்தது.

பட்டப்படிப்பை முடிக்காமல் நடுவில் போய்விடுவோர்களில் பலர், பிற்காலத்தில், அதிக உந்தலோடு, உயர்கல்வியை பகுதி நேரமோ, அஞ்சல் மூலமோ தொடர்வதாக, சில நாட்டுத் துணைவேந்தர்கள் சொல்லக் கேட்டு மகிழ்ந்தோம்.

"அப்படியே திரும்பவும் உயர்கல்விப் படிப்பைத் தொடராவிட்டாலும், பெரிய இழப்பல்ல; கல்லூரிக்கு வராதவர்களைவிட, கல்லூரிக்கு வந்து ஓரிரு ஆண்டுகள் மட்டுமே இருந்தவர்களின் அறிவு, மொத்தத்தில், அதிகமாகவே இருக்கும். எனவே பாதியில் விட்டு விடுவதைப் பற்றி மனம் உடையத் தேவையில்லை" என்று கனடாவிலிருந்து வந்த துணைவேந்தர்கள் சிலர் சொன்னதிலும் பொருள் இல்லாமல் போகவில்லை.

"பாடத்திட்டத்தின் நேர்த்தி மட்டும் போதாது. அதைக் கற்றுக் கொடுக்க என்னென்ன துணைக் கருவிகள், பிற வசதிகள் உள்ளன என்பதும் பெரும் கவனத்திற்குரியது. இவ்விரண்டைக் காட்டிலும் அதிகமாக கவனிக்க வேண்டியது, ஆசிரியர்-மாணவர் நல்லுறவு", என்ற கருத்து அமுதமும் கிடைத்தது. அதைக் கேட்டபோது, நம் முன்னாள் குடியரசுத் தலைவரும் தத்துவ மேதையுமான டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களது அறிவுரை ஒன்று நினைவிற்கு வந்தது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தாறும் ஆண்டு, தில்லியில் இந்தியப்பேரரசின் 'ஆசிரியர் விருந்தளிப்பு விழாவில், உரையாற்றிய அம்மேதை,

"ஆசிரியர்கள் எவ்வளவு திறமையாக பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்பதல்ல முக்கியம். அவர்கள், மாணவர்களிடம் எவ்வளவு நல்லெண்ணம் கொண்டிருக்கிறார்கள்; மாணவர்களைப் பொருத்தமட்டில்

அவர்கள் போக்கு எப்படியிருக்கிறது என்பதே முக்கியம்'' என்று சொன்னதை எடின்பரோ மாநாட்டில் நினைவுபடுத்திக் கொண்டேன்.

'தட்டிக் கொடுத்து ஊக்கும் போக்கிருந்தால், மாணவர்கள் நல்லபடி உருவாவார்கள். இடுப்பொடிக்கும் போக்கிருந்தால், வெளியேறுவார்கள்' என்பதில் பொருந்தியுள்ள உண்மையை உணர்ந்தால், இரத்தமில்லாக் கல்விப்புரட்சி ஏற்பட்டு விடும்.

# 17

"நாங்கள் போராடுவது, புகழுக்கல்ல; பொன்னுக்கல்ல; பெருமைக்குமல்ல; உரிமைக்கே; உயிரைப் பணயம் வைத்தும் தன்னந்தனியே உரிமைக்கே போராடுகிறோம்'', என்ற வீர முழக்கத்தை கல்லில் செதுக்கி வைத்திருக்கும் காட்சியினைக் கண்டு நானும் உரிமை வேட்கை கொண்டேன்.

ஸ்காட்லாந்தை 1306ஆம் ஆண்டு முதல் 1329 ஆண்டு வரை ஆண்ட, இராபர்ட் புரூஸ் என்பவரது வீர முழக்கம் மேலே குறிக்கப்பட்டது. அவரது பெரிய சிலை ஒன்றை 'பானக்பர்ன்' என்ற இடத்தில் வைத்துள்ளனர். அதன் பீடத்தில் செதுக்கப்பட்ட வீர முழக்கம் இன்றும் கருத்தில் முழங்குகிறது.

எடின்பரோவில் நடந்த மாநாடு முடிந்ததும், பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மட்டும், இங்கிலாந்திலுள்ள எக்ஸீடர் என்ற ஊரில் சில நாட்கள் கூடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

துணைவேந்தர்கள் அனைவரையும் தனி இரயிலில் இட்டுக் கொண்டு போனார்கள். புத்தம் புதிதாக,

தொழில்நுட்ப நவீனங்களையெல்லாம் பயன்படுத்தி கட்டப்பட்ட 'குளு குளு' பெட்டிகளில் பயணஞ் செய்தோம். காலை ஒன்பதரை மணி முதல் மாலை ஐந்து மணி வரை பயணஞ் செய்தும் அலுப்புத் தட்டவில்லை. வண்டியில் சிறிதும் ஆட்டம் இல்லை. பிரிட்டிஷ் இரயில்வேயின் மிகச் சிறந்த வண்டி அது வென்றும், அதன் 'முதல் ஓட்டம்' எங்களுக்காகவே என்றும், உரியவர்கள் கூறியதை எங்களால் நம்ப முடிந்தது.

வழிநெடுகிலும் இயற்கைக் காட்சிகள் அழகாக இருந்தன. இடை இடையே நகரங்கள் வந்தன. அவற்றின் புகைத் தோற்றங்கள் தெம்பைக் குறைத்தன. வழியில் பர்மிங்காம் என்னும் தொழில் நகரைக் கடந்து சென்றோம்.

பர்மிங்காமை நெருங்கியதும் என் மனக்குரங்கு ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தோராம் ஆண்டிற்குத் தாவிற்று.

அப்போது அவ்வூரில் நானும் என் மனைவியும் ஓர் பெண்கள் பள்ளியைப் பார்க்கச் சென்றோம். தலைமையாசிரியை ஒவ்வொரு வகுப்பாக, காட்டி வந்தார். மூன்றும் வகுப்பிற்குச் சென்றபோது, அவ்வகுப்பில் 'செஞ்சிலுவைச் சங்க'க் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. ஒரு பக்கமாக நாங்கள் உட்கார்ந்து கூட்டத்தைக் கவனித்துக் கொண்டி ருந்தோம். நிகழ்ச்சி நிரல்படி எல்லாம் முடிந்ததும் தலைமை வகித்த பெண், எழுந்திருந்து,

"அனைத்து நாடுகளுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்துவதும் செஞ்சிலுவை சங்கத்தின் குறிக் கோள். எனவே, வருகை தந்துள்ள நண்பர்களின் நாடாகிய இந்தியாவைப் பற்றிப் பேசும்படி அவர் களை அழைக்கிறேன்" என்றாள்.

பேச்சிலே சுவையில்லாத நான்,

‘‘நாங்கள் பேசுவதற்குப் பதில், நீங்கள் இந்தியாவைப் பற்றிக் கேள்வி கேளுங்கள். என் மனைவி பதில் கூறுவார்’’ என்று சொல்லி தப்பித்துக் கொள்ள முயன்றேன்.

குழந்தைகள் கேள்வி மேல் கேள்வி கேட்டார்கள்.

கேள்விகள், இந்தியக் குழந்தைகளைப் பற்றியே இருந்தன.

‘‘நீங்கள், குழந்தைகளுக்குப் பிறந்த நாள் கொண்டாடுவீர்களா?

‘‘எவ்விதத்தில் கொண்டாடுவீர்கள்?’’

‘‘எந்த வயதில் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பீர்கள்?’’

‘‘என்னென்ன விளையாட்டுப் பொம்மைகள் கொடுப்பீர்கள்?’’

‘‘என்னென்ன பாடம் படிப்பார்கள்?’’

‘‘நாளைக்கு எத்தனை மணி நேரம் பள்ளிக்கூடம்?’’

‘‘ஆண்டுக்கு எத்தனை நாள் பள்ளிக்கூடம்?’’

‘‘பள்ளிக்கூடப் படிப்பு எத்தனை ஆண்டுகள்?’’ இப்படியாக, குழந்தைகள் பற்றியே கேட்ட கேள்விகளுக்கு என் மனைவி பதில் கூறிக்கொண்டு வந்தார். இடையில்,

‘‘உங்கள் நாட்டுக் குழந்தைகள், தொடக்கத்தில் எதில் எழுதிப் பழகுவார்கள்?’’ என்று ஒரு மாணவி கேட்டாள்.

‘‘பலகையில் எழுதிப் பழகுவார்கள்’’ என்பது என் மனைவியின் பதில்.

அடுத்த கேள்வி,

"நோட்டுப் புத்தகத்தில் எழுதிப் பழகினுல் என்ன?"

"பலகையில் எழுதினுல், ஒவ்வொரு பாடம் முடிந்ததும் துடைத்துவிட்டு, அதே பலகையை பல மாதங்களுக்குப் பயன்படுத்த முடியும். நோட்டுப் புத்தகத்தில் எழுதுவதானுல் பல நோட்டுகள் வாங்க வேண்டுமே! அது எல்லாராலும் முடியாதே!" இப்பதிலைக் கேட்டதும், எனக்குத் தேள் கொட்டியது போல் இருந்தது. காலத்தின் கோளாறைப் பாருங்கள். தோழனேடும் ஏழமை பேசேல் என்பதை மறந்து விட்டு, இந்தியாவின் வறுமையை இங்கா விளம்பரப் படுத்த வேண்டும் என்று வெகுண்டது என் மனம். எனினும் பல்லைக் கடித்துக் கொண்டு, வெளியில் காட்டிக் கொள்ளாமல் சமாளித்தேன்.

கேள்விகளெல்லாம் முடிந்து, நாங்கள் விடை பெற்றுக் கொண்டு, ஓரடி எடுத்து வைத்தோம். முன் வரிசையில் இருந்த ஒரு மாணவி, தலைதெறிக்க எங்களை நோக்கி ஓடி வந்தாள். எங்களோடு இருந்த தலைமை ஆசிரியையைப் பார்த்து, "வந்தவர்களோடு ஒரு சொல் பேச அனுமதியுங்கள்" என்று பரிதாப மாகக் கெஞ்சினுள்.

தலைமையாசிரியை, "இவ்வளவு நேரம், எத்தனை கேள்விகளுக்குப் பதில் கூறினுர்கள்; அப்போதே கேட்டிருக்கலாமே! கூட்டம் முடிந்து போகும் போது, வழிமறிப்பது ஒழுங்காயில்லையே", என்று கடுகடுப் பில்லாமல் சிரிப்போடு பதில் அளித்தார்கள்.

நான் தலையிட்டேன். மற்ருெரு இந்தியரை இங்கே காண்பதற்கு எத்தனைநாள் காத்திருக்க வேண்டுமோ! இப்போதே பேசிவிட்டுப் போகட்டும் இக்குழந்தை' என்றேன்

தலைமையாசிரியை 'சரி' என்றார்கள்.

மூன்றும் வகுப்பு மாணவி, என் மனைவியை நோக்கி,

"அம்மா! நீங்கள் தங்கியிருக்கும் ஓட்டலுக்கு காகிதம் கொண்டு வந்து கொடுக்கிறேன். தயவு செய்து உங்களோடு எடுத்துச் சென்று அங்குள்ள பள்ளிக்கூடக் குழந்தைகளுக்குக் கொடுங்கள்" என்று கெஞ்சினாள்.

"மிகவும் நன்றி. ஆனால் வேண்டாம்", என்று என் மனைவி பதில் கூறவும்,

"நிறையக் காகிதம் கொடுக்கிறேன் அம்மா" என்று மீண்டும் கெஞ்சினாள்.

விஷயம் எனக்குப் புரிந்துவிட்டது.

சும்மா இருக்கும்படி, என் மனைவிக்கு சாடை காட்டிவிட்டு, நான் பதில் கூற முயன்றேன்.

"குழந்தாய்! ஒவ்வொரு நாட்டுக்கு ஒவ்வொரு பழக்கம். நெடுநாள் வந்த பழக்கத்தை யாரும் எளிதில் விட மாட்டார்கள். எவ்வளவு நோட்டுப் புத்தகங்கள் கிடைத்தாலும், பலகையில் எழுதிக் கற்பதை எளிதில் விடமாட்டார்கள். அது நெடு நாளையப் பழக்கம்" என்றேன்.

என் பதில் அவளுக்குத் திருப்தி அளிக்கவில்லை. மீண்டும்,

"நிறைய காகிதம் கொடுக்கிறேன்" என்றாள்.

"இதோ பார்! நான் உங்கள் நாட்டு உடையில் இருக்கிறேன், என் மனைவியோ எங்கள் நாட்டுப் புடவையிலே வந்திருக்கிறார். பழக்கத்தை எளிதாக விட முடியவில்லை என்பதற்கு அவரே எடுத்துக் காட்டு" என்று விளக்கங்களைக் கூறினேன்.

நல்லவேளை. மற்றொரு மாணவி என் உதவிக்கு வந்தாள்.

"ஜேன்! அவர் சொல்வது உண்மை. நம் நாட்டில் கூட என் தாத்தா காலத்தில் கரும்பலகை யில் எழுதியே பழகினார்கள். அவர் வைத்திருந்த கரும்பலகையை எங்கள் வீட்டில் இன்றும் பத்திர மாகப் பாதுகாத்து வைத்திருக்கிறோம். இன்று மாலை, நீ வீட்டுக்குப் போகும்போது, என் வீட்டுக்கு வா. அதைக் காட்டுகிறேன்", என்று ஒரு மாணவி கூறிய தைக் கேட்டு, வேறு வழியில்லாமல், ஜேன் ஆறுதல் பெற்றாள். நாங்கள் விட்டாற் போதுமென்று வெளி யேறினோம்.

குழந்தை உள்ளத்தின் இயற்கையான கருணை உணர்ச்சியையும் அதற்கு யாரையும் கேட்காமல் தானே உருவங் கொடுக்க முன்வந்த குழந்தையின் உரிமைச் சூழலையும் எண்ணி எண்ணி, பல முறை மகிழ்ந்தது போல், அன்றும் மகிழ்ந்தேன்.

அடுத்து, பிரிஸ்டல் நகரைத் தாண்டி, இரயில் போகும்போது, அந்நகருக்கு ஆயிரத்துத் தொள்ளா யிரத்து அறுபத்திரெண்டில் நான் மட்டும் சென்றி ருந்தது நினைவில் வந்தது.

அந்நகரில் இந்திய சமூக சீர்திருத்த இயக்கத்தின் முன்னோடித் தலைவராக விளங்கியவரும் பிரம்ம சமாஜத்தை நிறுவியவருமான இராஜாராம் மோகன் இராய் அடக்கமாயிருப்பது, நினைவிற்கு வந்தது.

கணவன் இறந்தால், மனைவியும் கணவனோடு உடன்கட்டை ஏற வேண்டும் என்னும் கொடிய பழக்கம் முற்கால இந்தியாவில் இருந்தது. அதற்கு எதிராகக் குரலெழுப்பி, இயக்கத்தை வளர்த்துப் போராடி, 'சதி'க் கொடுமையை ஒழித்துக் கட்டிய அப்பெரியவரின் நினைவுக்கு அஞ்சலி செலுத்தினேன்.

மீண்டும், இந்தியாவின் மூலை முடுக்குகளில், அண்மைக் காலத்தில் 'சதி'க் கொடுமை முளைத்த செய்தியை எண்ணி ஏங்கினேன். அத்தனைப் பெரியவர்களும் அரசியல் ஆற்றிலேயே மிதந்து கொண்டிருந்தால், சமூகக் கொடுமைகளைக் களைவதெப்படி? பொருளாதார நீதியைப் பெறுவதெப்படி? சில வல்லவர்களாவது, நல்லவர்களாகி, கவர்ச்சியில்லாத, வெறுப்புக்கும் ஆளாக வேண்டிய, ஆனால் இன்றியமையாத, சமூகப் பொதுத் தொண்டுக்கு தங்களைக் காணிக்கையாக்கிக் கொள்ளும் அந்த நாளும் வந்திடாதோ என்று ஏங்கும் நேரம். எக்ஸீடர் நகரை அடைந்தது எங்கள் இரயில். என் சிந்தனை கலைந்தது.

# 18

எக்ஸீடர் நகரில் ஓர் பல்கலைக்கழகம் இருக்கிறது. அப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் அதிகாரிகளும் இரயில் நிலையத்திற்கு வந்து, எங்களை அழைத்துக் கொண்டு சென்றார்கள்.

எக்ஸீடர் பல்கலைக்கழகம், அந்நகரின் குன்றின் மேல் அமைந்திருக்கிறது. பலநூறு ஏக்கர் பரப் பளவில் உள்ளது. எங்கும் புல்தரையும் பசுமையும் சோலையும் சூழலை இனிமையாக்கின.

மாணவர் விடுதிகளில் நாங்கள் தங்கினோம். விடுதிகளைச் சுற்றி ஆப்பில் மரங்கள் காய்த்துக் குலுங்கின. மரங்களைச் சுற்றி கனிந்த ஆப்பில்கள் வீழ்ந்திருந்தன. மாலைப் பொழுதில் வீழ்ந்து கிடந்த ஆப்பில்களை மறுநாட் காலையும் அங்கங்கே கண்டோம். போவோர் வருவோர் யாரும் ஆப்பில் களைத் தொடவில்லை.

நம் நாட்டுக் கல்விக்கூட வளைவுக்குள் பயன் தரும் பழமரங்களை வளர்க்கும்படி சொல்லிச் சொல்லி அலுத்துப் போனவன் நான்.

நெல்லி மரங்களை நட்டால், கனியடிக்கக் கல்லெறிவார்கள். அது யார் தலையிலாவது பட்டு, பெரும் கலவரமாக மாறி விடுமென்று அஞ்சி அஞ்சி, எதையும் பயிரிடாமல் இருக்கும் நம் நிலையையும் பல்கலைக்கழக வளைவுக்குள் எங்குபார்த்தாலும் பழமரங்களை வளர்த்துள்ள அவர்கள் நிலையோடு ஒப்பிட்டுப் பெருமூச்சு விட்டேன். வேறு என்ன செய்யமுடியும்?

எக்ஸீடர் என்ற நகரம் மிகத் தொன்மை வாய்ந்தது. கிருத்துவுக்குப் பிந்திய சகாப்தத்தின் நாற்பத்தொன்பதாம் ஆண்டே, ரோமப் பேராட்சியால் படையெடுக்கப்பட்டு பிடிக்கப்பட்ட கோட்டையூர் எக்ஸீடர். ரோமானியர்கள், நகரைச் சுற்றிக் கட்டிய கோட்டை மதிற் சுவர் இன்றும் இருக்கிறது. பிற்காலத்தில் டேனிஷ் மக்கள் அடிக்கடி படையெடுத்தார்களாம். பதினேராம் நூற்ருண்டு முதல் அன்னியப் படையெடுப்பு இல்லை.

இந்நகரில் உள்ள பல்கலைக்கழகம், பழமையானதல்ல. இந்நூற்ருண்டில் அமைக்கப்பட்டது. எனவே மரபுப் பாடத்திட்டங்களிலிருந்து ஓரளவு விடுபட்டு, பணி புரிகிறது.

எக்ஸீடர் பல்கலைக்கழகத்தில், காமன்வெல்த் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில் முதியோர் கல்வி பற்றி அதிகம் பேசப்பட்டது.

கனடா, ஆஸ்திரேலியா, பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருந்து வந்த துணைவேந்தர்கள், பல்கலைக்கழகங்களும் முதியோர் கல்வியில் ஈடுபடவேண்டும் என்று எடுத்துரைத்தார்கள். அந்நாடுகளில் அத்தகையப் பணி தொடங்கி விட்டதையும் விளக்கினுர்கள்.

அந்நாடுகளில் முதியோர் கல்வி, முதற் படிப்பா? இல்லை. பின் என்ன? அது தொடர் படிப்பு. அதை ஏன் பல்கலைக்கழகங்கள் மேற்கொள்ள வேண்டும்?

இக்காலத்தில், பல துறைகளிலும், அறிவுப் பெருக்கம் கட்டுக்கடங்காது ஏற்படுகிறது. பல் லாண்டுகளுக்கு முன்பே பட்டம் பெற்றவர்களுக்கு அந்தந்த துறை பற்றிய அறிவு பழமையோடு நிற்கும். அவர்களும் தங்கள் அறிவினைப் புதுப்பித்துக் கொள்ள, வாய்ப்புகள் வேண்டும்.

மற்ற அமைப்புகளில் இருப்பதைவிட, பல்கலைக் கழகங்களில்தான் அதிக அறிஞர்கள் கூடியிருக் கிறார்கள். எனவே மற்ற அமைப்புகளைவிட, பல் கலைக்கழகங்களே, புத்தறிவுப் பணிகளுக்கு ஏற்றவை. அது மட்டுமா?

கொடுத்த ரூபாய் நோட்டு மிகப் பழையதாகி விட்டால், அதைத் திருப்பிப் பெற்றுக் கொண்டு அதே மதிப்புள்ள புதிய நோட்டைக் கொடுக்கும் பொறுப்பு, நோட்டை வெளியிட்ட ரிசர்வ் வங்கி யினுடையதல்லவா? அதைப்போல், பட்டம் கொடுத்த பல்கலைக்கழகங்களே தங்கள் பட்டதாரிகளுக்கு, புத்தறிவைக் கொடுக்கவேண்டும். அப்படியானால், பட்டதாரிகளுக்கு புத்தறிவுப் பயிற்சி கொடுத்து விட்டு, பழைய பட்டங்களுக்குப் பதில் புதிய பட்டங் களைக் கொடுக்கிறார்களா? இல்லை. புதிய அறிவைக் கொடுப்பதே அவர்கள் பொறுப்பு; கொடுத்த பட்டத்தை பின்னர் மாற்றிக் கொடுப்பதில்லை.

தொடர் கல்விக்கு வருவோர் யார்? பல தொழி லினர்; பல வயதினர்.

ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியலார்கள், வீட்டரசிகள்; இப்படி பல்வேறு தொழில் புரிவோருக் காக, கனடாவிலுள்ள வின்னிபெக் பல்கலைக் கழகம் தொடர் கல்வி ஏற்பாடுகளைச் செய்துள்ளது. சேர்ந் துள்ளோர் பதினான்கு வயது முதல் எண்பத்தைந்து வயது வரை உள்ளவர்கள். முதலாண்டும் இரண்டாம் ஆண்டும் நானூறு பேர்கள் சேர்ந்தார்களாம்.

அலுவல்களிலிருந்து ஓய்வு பெற்ற தாத்தாக்களும் ஏற்கனவே பெற்ற அறிவை நவீனமாக்கிக் கொள்ளவும், புதுத்துறைகளில் அறிவு பெறவும் தொடர் கல்வி வகுப்புகளில் சேர்கிறார்களாம்.

வீட்டரசிகளுக்குத் தொடர் கல்வி எந்நேரத்தில் கொடுப்பார்கள்? பிற்பகல் இரண்டு மணிக்கு வகுப்பு தொடங்குமாம்.

பல்கலைக்கழகம் நடத்தும் இத்தகைய தொடர் கல்வி வகுப்புகள், பல்கலைக்கழகக் கட்டடத்திற்கு வெளியே, கற்போருடைய வசதிக்கு ஏற்றபடி பல இடங்களில் நடக்கும். எனவே ஒரு மணி நேரப் படிப்பிற்கு, பல மணி நேரப் பயணம் தேவைப்படாது.

முன்னேறிய நாடுகளில், கல்விச் சீட்டுகளுக்கு, மதிப்பு அதிகம் இல்லை. அவையே தெய்வமாகி விடுவதில்லை. அதுவும் தொடர் கல்வி வகுப்புகளுக்கு வருவோர், படிப்புச் சான்றிதழை நாடுவதைவிட, படிப்பைத் துலக்கிக் கொள்வதிலேயே நாட்டஞ் செலுத்துகிறார்கள். அதனால், தொடர் கல்வி, கற்போரின் அறிவுத் தேவைகளை நிறைவு செய்வதில் பெரிதும் வெற்றி பெறுகிறது.

ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னி பல்கலைக்கழகத்தில், எழுபது தொடர் கல்விப் பாட திட்டங்கள் நடத்தப்படுவதாகவும் அவற்றில் சென்ற ஆண்டில் மொத்தம் ஆறாயிரம் பேர் சேர்ந்து படித்ததாகவும் அறிவிக்கப்பட்டது. தொடர் கல்வி வாய்க்கால்கள் பல என்றார் அப்பல்கலைக்கழகத் துணைவேந்தர்.

நேருக்கு நேர் பாடங் கேட்டல், குறிப்புகளை அஞ்சல் வழி அனுப்புதல், வானொலி, தொலைக் காட்சிகள் வழி பாடம் நடத்துதல், காட்சிக் கேள்வி நாடாக்களை மாணவர்களுக்கு அனுப்பி அவற்றின்

மூலம் கற்பித்தல் ஆகிய பல வழிகளில் முதியோர் கல்வி நடக்கிறது.

வார்ப்படமாகாத, நீக்குப் போக்கு நிறைந்த, பல்வகை, பல்நிலை, தொடர் கல்வியை, முதியோருக்கு அளிப்பதைப்பற்றி இந்தியப் பல்கலைக்கழகங்கள் கால தாமதமின்றி ஈடுபட வேண்டுமென்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்டோம்.

முதியோர் கல்வி கற்பிப்போர், 'வாத்தியார் தனம்' பண்ணக் கூடாதென்பதை பல்லாண்டுகளுக்கு முன் நான் கற்றுக் கொண்டேன்.

அப்போது இலண்டனில் உள்ள முதியோர் கல்விக் கூடமொன்றைப் பார்வையிட்டேன். அறுபத்து நான்கு வகை பாடதிட்டங்களோடு நடந்த, அக் கல்வி நிலையத்தில், தத்துவப் பாடம் இரு நிலைகளில் கற்பிக்கப்பட்டது. மூத்த பெண்மணி ஒருவர், தத்துவம் பற்றி சில நூல்களைத் தாமே ஏற்கனவே படித்துவிட்டு, மூத்த நிலை தத்துவ வகுப்பில் சேர்ந்தார். அதற்குத் தகுதி உண்டா என்று பரீட்சை வைக்கவில்லை. தம் விருப்பப்படியே சில நாட்கள் மூத்த நிலை வகுப்பில் இருந்த அவருக்கு, அதைத் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அதே நேரத்தில் படிப்பை விட்டுவிடவும் மனம் வரவில்லை. எனவே, கல்வி நிலையத் தலைவரிடம் வந்து, தான் எட்டிப் பாய நினைத்தது, தவறென்று உணர்வதாகவும் அப்போது படிப்பை விட்டு விட்டு, அடுத்த ஆண்டு சேர்வதாகச் சொன்னார்.

முதல்வர், சுணங்காமல், குட்டிக் காட்டாமல் 'அறிவுரை' கூறிப் புண்படுத்தாமல் புன்முறுவலோடு அப்போதே இளநிலைக்கு மாற்ற முன் வந்து, நொடியில் அதற்கு ஆணை பிறப்பித்தார். என்ன இடர் இருந்தாலும், என் கவனத்திற்குக் கொண்டுவரத் தயங்காதீர்கள், என்றும் கூறி ஊக்க மூட்டி அனுப்

பினர். அக்காட்சியை நேரில் கண்ட நான் முதியவர் களுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்கும் உபயாத்தைத் தெரிந்து கொண்டேன். சிறுவர்கள் இளைஞர்கள் ஆகியோருக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் போதும் இதே போக்கு தேவை என்பதை நினைவில் வைக்கவேண்டும்.

பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள், எக்ஸிடரிலும் அதை அடுத்தப் பகுதிகளிலும் பல இடங்களைப் பார்த்து வர, சுற்றுலாவிற்கு ஏற்பாடு செய்திருந் தார்கள்.

ஒரு நாள் பிற்பகல் முழுவதும், கடற்கரைப் பகுதியைப் பார்த்து வந்தோம். நாங்கள் பார்த்த இடமெல்லாம் ஆழமில்லா கடற்கரை. அலை குறைந்த பகுதிகள். அங்குள்ள கடலில் மூழ்கி, நீந்தி மகிழ்ந்த ஆண்களும் பெண்களும் பல்லாயிரம். மூன்று நான்கு வயதுக் குழந்தைகள்கூட—பெண்கள் உட்பட— 'மிதவை'களின் உதவியால் கடலில் மிதந்து விளையாடினார்கள்.

ஒவ்வொருவரும் பல முறை கடலில் ஆடுவதும் அடுத்து கரை மணலில் படுத்து காய்வதுமாக இருந்தனர். இடையிடையே, தன்னோடு கொண்டு வந்துள்ள எதையாவது அருந்துவதும் கொறிப்பது மாக இருந்தார். குழந்தைகள்கூட காலிப் புட்டி களையோ, காகிதப் பைகளையோ, கண்ட பக்கம் போட்டு குப்பையாக்கவில்லை. கடலில் எறிந்தும் நீரைப் பாழாக்கவில்லை. உடனுக்குடன் குப்பைக் கூடையைத் தேடிப்போய் அதில் சேர்த்துவிட்டு வந்தது ஒவ்வொரு குழந்தையும்.

ஓர் நாள் சுற்றுலா, 'பிளைமத்' நதியில் விசைப் படகில் பயணஞ் செய்தல். பிளைமத் ஆறு கடலோடு கலக்குமிடத்திற்கு அருகிலிருந்து படகில் புறப்பட் டோம். உள்நோக்கிச் சென்றோம். இரு மருங்கிலும்

இனிய வனக் காட்சிகள். ஆற்றில் சில போர்க் கப்பல்களைக் கண்டோம். நீர் மூழ்கிக் கப்பல்களின் தளமும் அது தான் என்று கேள்விப்பட்டபோது, நொடிப் பொழுது அச்சம் மின்னி மறைந்தது.

வழியில் ஓர் ஊரில் எங்கள் படகு நின்றது. படகிலிருந்து இறங்கும் வாயில், அப்போது தரை மட்டத்திற்குக் கீழே இருந்தது. எனவே நான்கு படியேறி தரைக்கு வந்தோம்.

ஊருக்குள் சென்றோம். அரை கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பழைய மாளிகை ஒன்றைப் பார்த்து விட்டு, ஒரு மணியில் திரும்பினோம். எங்கள் படகு மிதந்து கொண்டிருந்தது. வாயற்படி மிக உயர்ந்து இருந்தது. ஏன்? அந்த ஒரு மணி நேரத்தில் கடல் அலை உயர்ந்து, ஆற்றுக்குள் பாய்ந்து, ஆற்று நீர் மட்டத்தை உயர்த்தி விட்டது. எனவே படகு அப்போது உயர மிதந்தது. உள்ளே செல்வது பெரும்பாடாகி விட்டது. இரண்டொருவரை, நீரில் நின்றபடியே தூக்கி படகுக்குள் விட்டார், மாலுமி. எவ்வளவு அளவு நீர் மட்டம் உயர்ந்து விட்டது என்று விசாரித்தோம். ஐந்தடி உயர்ந்து விட்டதாகக் கேள்விப்பட்டோம். கரையோரத்தில் நிறுத்தப் பட்டிருந்த கார்களில் சில அடித்துக் கொண்டு போகப் படுமோவென்று அஞ்சும் நேரம் எங்கள் படகுப் பயணம் தொடர்ந்தது.

மற்றொரு நாள், அழகிய புராதன மாளிகை யொன்றுக்கு அழைத்துச் சென்றார்கள். வழியில் மலைப்பகுதி. அப்பகுதியில், தேசிய பூங்கா இருந்தது. முன்னூற்று ஐம்பது சதுர மைல்கள் பரப்புள்ள அப் பூங்கா பாதுகாக்கப்படும் இடம். அங்கே யாரும் வேட்டையாடவோ, பிற அழிவு வேலைகளில் ஈடுபடவோ கூடாது. எனவே, மலையாடுகளும் குதிரைகளும் இயற்கை நிலையில் சுற்றிக் கொண் டிருக்கக் கண்டோம்.

நானூற்றுத் தொண்ணூற்று எட்டு ஏக்கர் பரப்புள்ள பூங்காவின் நடுவில் அழகாகக் கட்டப் பட்டுள்ள 'சால்ட்ரம்' மாளிகையும் அதனுள் உள்ள பொருள்களும் நன்ருகப் பாதுகாக்கப்பட்டு வருவதைக் கண்டோம். 'சாவுவரி'க்கு ஈடாக அம்மாளிகை அரசிடம் ஒப்படைக்கப்பட்டதாம். அரசு அதை தேசிய அறநிலேயத்திடம் (National Trust) ஒப்படைத்துக் காத்து வருகிறதாம்.

மாளிகைக்குச் செல்லும் பேருந்து வண்டியில், எங்கள் 'வழிகாட்டி' எனக்கு அடுத்த இடத்தில் அமர்ந்தாள். இளம் பெண்ணுகிய அவளோடு பேச்சுக் கொடுக்கத் தயங்கினேன். அவள் ஊமையாக இல்லே. கலகலப்பாகப் பேசினுள்.

அவள், நாட்டிங்காம் என்ற ஊரிலிருந்து வந்துள்ள மாணவி என்று கூறினுள். எக்ஸிடர் நகரம் தனக்குப் புதிது என்ருள். அந்த விடுமுறையின் போது, எங்கள் மாநாட்டில் வேலே செய்து சிறிது சம்பாதிக்க வந்திருப்பதாகச் சொன்னுள்.

"உங்கள் நாட்டில் பல்கலேக்கழகப் படிப்பிற்கு தாராளமாக உதவித் தொகை கிடைப்பதாகக் கேள்வி. அது உண்மையா?" என்று கேட்டேன்.

"ஆம். நான் கூட உதவித் தொகை பெறுகி றேன்", என்று பதில் உரைத்தாள்.

"அப்பணம் செலவுக்குப் போதாதா?"

"போதும். ஆனுலும் அது ஆளேப் பொறுத்தது."

"நான் சிகரெட் குடிப்பதில்லே. மது அருந்து வதில்லே. எனவே, நான், உதவித் தொகையில் சிறிது மிச்சப்படுத்தவும் முடிகிறது. சிகரெட், மதுப் பழக்கம் உடையவர்களுக்கு அது போதாது. அவர்கள் ஏதாவது வேலே செய்து சிறிது சம்பாதித்துக் கொள் வார்கள். நான் இங்கு வேலே செய்வது பணத் தேவை பற்றியல்ல. இத்தனே, பன்னுட்டுக் கல்வியறிஞர்

களைக் கண்டு பேசவும் அவர்கள் சொற்பொழிவுகளைக் கேட்கவும் அடிக்கடி வாய்ப்பு ஏற்படுமா? இதை நழுவ விடக் கூடாது என்பது முதற் காரணம். அடுத்தது, உங்களோடு சேர்ந்து, பல ஊர்களையும் காட்சிகளையும் காணலாம். அடுத்து, இப்படிச் சம்பாதிக்கும் பணத்தை மிச்சப்படுத்தி வைத்து வெளிநாடுகளுக்கும் பயணஞ் செல்லுவேன்'' என்றாள். அப் புதுமைப் பெண், தொலைநோக்குடைய பெண் என்று முடிவு கட்டினேன்.

எக்ஸிடர் கருத்தரங்கு முடிந்த பிறகு, அவரவர் நாட்டிற்குத் திரும்பினோம். இந்தியாவிற்குத் திரும்ப, இலண்டனில் விமானமேற, அந்நகருக்கு வந்தோம்.

இலண்டனில் ஏற்கனவே பார்த்த பல இடங்களை, நினைவுச் சின்னங்களை, மீண்டும் கண்டு மகிழ்ந்தோம்.

'ஹைட்பார்க்' என்ற பெரும் பூங்காவைப் பார்த்த போது பழைய நினைவுகள் பீறிட்டன. இலண்டன் நகருக்குள் பல நூறு ஏக்கர் நிலத்தில் உள்ளது இப்பூங்கா. பரந்த இப்பூங்காவின் ஒரு மூலை வரலாற்றுச் சிறப்புடையது. முற்காலத்தில், ஆங்கிலேயர்கள், பேச்சுரிமைக்காகப் போராட வேண்டியதாக இருந்தது. அக்காலத்தில் பேச்சாளர்கள், அம் மூலைக்கு வந்து, உணர்ந்ததை உணர்ந்தபடி பேசுவார்களாம். தண்டனைகளைப் பொருட்படுத்தாமல், அக்கால சொல்லேறுகள் பலர், அங்கே பேசிப் பேசிப் போராடி, பேச்சுரிமையை அடிப்படை உரிமையாக்கி விட்டார்கள். இன்று பிரிட்டனில் பேச்சுரிமை அதிகம்.

பேச்சுரிமையைப் பெற்றுத் தந்த அந்த வரலாற்றுக் களத்திற்கு, நானும் என் மனைவியும், இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு செல்ல நேர்ந்தது. நாங்கள் அம் மூலையைக் காணச் சென்ற நாள் ஞாயிற்றுக்கிழமை. ஞாயிற்றுக்கிழமைகளில்,

ஒரே நேரத்தில் பல கூட்டங்கள் அப் பகுதியில் நடக்கும். அன்றும் நடந்து கொண்டிருந்தது.

பூங்காவிற்குள் நுழைந்ததும், ஓர் கத்தோலிக்கப் பாதிரியார், பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டோம். கர்த்தரை நம்பும்படியும் அவர் மதத்தை ஏற்றுக் கொள்ளும்படியும் உபதேசஞ் செய்தார். பத்துப் பதினைந்து பேர்களே இருந்த அக் கூட்டத்தை விட்டு, அடுத்து சில அடி தூரத்தில் 'புராடெஸ்டெண்ட்' சமயப் பிரசாரம் செய்து கொண்டிருந்த ஒருவருடைய கூட்டத்திற்குச் சென்றோம். அதில் சில நிமிடங்கள் இருந்துவிட்டு அடுத்து, ஒரு யூத குருவின் கூட்டத்திற்குச் சென்றோம். சில மணித்துளிகளுக்குப் பிறகு, நாத்திக வாதம் பேசிக் கொண்டிருந்த ஒருவர் பேச்சில் சிறிது கவனஞ் செலுத்தினோம். பிறகு ஆப்ரிக்கர் ஒருவர் பேசிக் கொண்டிருந்த கூட்டத்தினருகில் சென்றோம்.

"வெள்ளையர்கள் ஆப்ரிக்கர்களைச் சுரண்டுகிறார்கள். வெள்ளை முதலாளிகளுக்குக் கையாட்களாக, முன்னோடிகளாக, வெள்ளை மதபோதகர்கள் ஆப்ரிக்காவிற்கு வந்தார்கள். பலன்? நாங்கள் சுரண்டப்படுவதே'' என்று உணர்ச்சி வயப்பட்டுப் பேசினார்.

கூட்டத்தில் இருந்த பெருங் கிழவர் ஒருவர், குறுக்கிட்டு,

"வெள்ளைப் பாதிரிகள், கல்விக் கண்ணைத் திறந்து விட்டார்கள் என்பதைக் கூடவா மறுக்கிறீர்,'' என்று கேட்டார்.

ஆப்பிரிக்கப் பேச்சாளர் வெகுண்டார். இரத்தம் தெறிக்கும் முறையில்,

கண்ணைத் திறந்தது எங்களுக்காக அல்ல; வெள்ளையர் நன்மைக்காக. இனி வெள்ளையர்களை எங்கள் நாட்டிற்குள் விடமாட்டோம். அவர்கள் எந்த ஆப்பிரிக்க நாட்டில் காலடி எடுத்து வைத்தா

லும், அவர்கள் கழுத்தையறுத்து, குருதியைக் குடிப்போம். இது உறுதி'' என்று கத்தினர்.

அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த கூட்டத்தைப் பார்த்தேன். எங்கள் இருவரைத் தவிர மற்ற எல்லோரும் வெள்ளையர்கள். அவர்கள் வெகுண்டு, கலாட்டா செய்தால், எங்கள் பாடும் ஆபத்தாகி விடும் என்று அஞ்சிய நாங்கள், நகர முயன்றோம்.

அடுத்து நின்றிருந்த ஆண் மகன் தன்னோடு இருந்த பெண்ணைப் பார்த்து, நாம் நகரலாமா என்று கேட்டார்.

"பேச்சாளர் கொதிப்படைந்திருக்கிறார். காரணமின்றி கொதிப்போடு பேசமாட்டார். சிறிது பொறுத்திருந்தால் அதைத் தெரிந்து கொள்ளக் கூடும்'' என்று பெண் கூறவும், அவர்கள் அங்கேயே நின்று விட்டார்கள்.

நாங்கள் தொடர்ந்து பல கூட்டங்களில், சில சில மணித்துளிகளைச் செலவிட்ட பிறகு, அதே வழியே திரும்பினோம்.

ஆப்பிரிக்கர் பேசிக் கொண்டிருந்தார். கூட்டம் குறையாமல் இருந்தது. அங்கே நின்றபடியே, ஒரு கோடியிலிருந்து மறுகோடியை கண்ணுற் கண்டேன். மற்றவைகளைவிட, இக் கூட்டமே பெரிதாக இருந்தது.

வெள்ளையர்களை அவர்கள் நாட்டிலேயே வன்மையாகத் தாக்கும் கூட்டத்தில் அதிகம் பேர் பொறுமையாக இருந்து கேட்டது, வியப்பாயிருந்தது அந்த அளவிற்கு வெளிநாட்டாருக்கும் உரிமை கொடுத்திருப்பதற்குக் காரணம் எங்களுக்குப் புரியவில்லை.

அடுத்த நாள் ஓர் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியர்களோடு உணவருந்தும் போது, இந்நிகழ்ச்சியைச் சொன்னேன். என் வியப்பையும் புரியாமையையும்

வெளிப்படுத்தினேன். கடுமையாகத் தாக்கும் வெளி நாட்டவர் பேச்சையாவது தடுக்கக் கூடாதாவென்று கேட்டேன்.

"நாங்கள் பல நூற்றுண்டுகளாக பேச்சுரிமையைக் காத்து வருகிறோம். சிலருக்குக் கசப்பாயிருக்கிறதென்ற காரணத்தால் பேச்சுரிமையைக் கட்டுப்படுத்தத் தொடங்கினுல், அது எங்கே போய் முடியுமென்று சொல்ல முடியாது. வெளிநாட்டாரைக் கட்டுப்படுத்துவது என்று தொடங்கி, பிறகு எல்லோரையுமே பலவற்றைப் பற்றி பேச உரிமையற்றவர்களாக ஆக்கிவிடுவோம். நம்மையறியாமலே, கால ஓட்டத்தில், பேச்சு உரிமையைப் பறிக்கும் நிலை உருவாகிவிடும். எனவேதான் பேச்சுக்குத் தடையேதும் விதிப்பதில்லை" என்று விளக்கினுர்கள். இந் நினைவுகள் வந்தன. எனவே, அடுத்த நாள் இலண்டன் தமிழ்ச் சங்கத்தார் எங்களுக்கு அளித்த ஆர்வமிக்க வரவேற்புக்குப் பதில் அளிக்கும் போது,

"இலண்டன் தமிழ்ச் சங்கம், முக்கியமான மையத்தில் பணிபுரிகிறது. தெற்கே, நெடுந்தூரத்தில் உள்ள பிஜி தீவு முதல் வடக்கே தொலைவில் உள்ள கனடா வரைப் பரவியுள்ள தமிழ் இனத்தவர் இங்கே உள்ளனர். இவ்வளவு பரந்துள்ள தமிழ் மக்களை ஒன்றுபடுத்தி, தமிழையும் தமிழ்ப் பண்பையும் வளர்க்கும் ஆக்கப் பணி செய்ய, அரிய வாய்ப்பு உள்ளது, இலண்டன் தமிழ்ச் சங்கத்திற்கு" என்று நான் கூறியதை ஆர்வத்தோடு ஏற்றனர்.

புதிய உணர்ச்சியோடும் நம்பிக்கையோடும் தாய் நாடு திரும்பி வந்து சேர்ந்தேன்.

முற்றிற்று